விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 24 சனிக்கிழமை (07.05.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 162



02

மண்டியிட்டது பஞ்சாப்



11

நகர சபை நிர்வாகத்தில் பல முறைகேடுகள்



14

வச்ச குறி தப்பாது

### சிறைகளில் நீண்டகாலம் விசாரணை இன்றி தடுப்பில் உள்ள

# தமிழ்க் கைதிகளின் விடுதலைக்காக கூட்டமைப்பு உயர்நீதிமன்றத்தில் மனு

## மகஸின் சிறைக்கு எம்.பிக்கள் நேற்று திடீர் விஜயத்தை அடுத்து

கொழும்பு,மே7

**இலங்கை சிறைச்சாலைகளில் நீண்டகாலமாக எதுவித விசாரணைகளும் இன்றித் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பால் தாக்கல் செய்யப்படவுள்ளது.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் பிரபல சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் இந்த வழக்கைத் தாக்கல் செய்வதற்கான தீர்மானம் நேற்று எட்டப்பட்டது.

நேற்றுக் காலை கொழும்பு புதிய மகஸின் சிறைச்சாலையில் இடம்பெற்ற தமிழ் அரசியல் கைதிகள் - தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடையிலான சந்திப்பின்

(31ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரிய இடமாற்ற மேன்முறையீடு ஆளுநர் அலுவலகத்தில் பரிசீலனைக்கு

யாழ்ப்பாணம்,மே7

வடமாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைவாக வடமாகாண கல்வித் திணைக்களத்தால் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வன்னி வலயங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பான மேன்முறையீடுகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை பரிசீலனைக்கு எடுக்கப்படவுள்ளன.

நாளைமறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் அமைந்துள்ள ஆளுநரின் உப அலுவலகத்தில் இந்த மேன்முறையீடுகள் பரிசீலிக்கப்படவுள்ளதால் மேன்முறையீட்டாளர்கள் தங்கள் மேன்முறையீடுகள், விண்ணப்பத் திகதி மற்றும் ஆதாரப்படுத்தும் ஆவணங்களுடன் வலய ரீதியாகக் குறிப்பிடப்படும் நேரத்தில் சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

(31ஆம் பக்கம் பார்க்க)

## நிபுணர் குழு அறிக்கை பாரபட்சமானது; இலங்கையின் புகழுக்குக் களங்கம்

### இராணுவத் தளபதி கூறுகிறார்

கொழும்பு, மே7

ஐ.நா. செயலாளர் தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை பாரபட்சமானது. அது இலங்கையின் புகழுக்கு களங்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

- இவ்வாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்தார்.

வெலிக்கந்தை பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:(31ஆம் பக்கம் பார்க்க)

## மாலைதீவு அரசும் எதிர்க்கிறது

கொழும்பு,மே7

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள யுத்தக் குற்றங்களை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

- இவ்வாறு மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் அகமட் நஸீம் தெரித்தார்

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

யுத்தம் நிறைவுற்ற பின்னர் அபிவிருத்தியை முழுமையான நோக்காகக் கொண்டுள்ள இலங்கை, பயங்கரவாதத்தை ஒழிப்பதில் பெற்ற வெற்றியை நாம் பாராட்டுகின்றோம்.

நாடுகளுக்கிடையிலான வெளிநாட்டுக் கொள்கைகளை பற்றி கலந்துரையாடவே நான் இலங்கை வந்தேன். எனது வருகைக்கும் நிபுணர் குழு அறிக்கைக்கும் தொடர்பு ஏதும் இல்லை. ஐ.நா அறிக்கை தொடர்பில் நாம் கவலையடைகின்றோம். உண்மையில் அந்த அறிக்கை ஆக்கபூர்வமானதல்ல.- என்றார்.

# இலங்கையின் யுத்தக் குற்றவாளிக்கு சில மேற்கு நாடுகள் பாதுகாப்பு

### மனித உரிமைகளுக்கான நிலையம் குற்றச்சாட்டு

லண்டன், மே 7

இலங்கையின் யுத்தக் குற்றவாளி எனக் கருதப்படும் ஒருவருக்கு ஜேர்மன், பிரிட்டன், சுவிற்சர்லாந்து, மலேஷியா, வத்திக்கான் ஆகிய நாடுகள் பாதுகாப்பு வழங்கி வருகின்றன என மனித உரிமைகளுக்கும் அரசியல் சட்டவாதத்துக்குமான ஐரோப்பிய நிலையம் குற்றஞ் சாட்டியுள்ளது.

- இவ்வாறு சர்வதேச இணையதளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஐ.நா. நிபுணர் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் வன்னியில் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொலைகளுக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி

ஜகத் டயஸுக்கு ஜேர்மன், சுவிற்சர்லாந்து, வத்திக்கான் ஆகிய நாடுகள் இராஜதந்திர அந்தஸ்து வழங்கியுள்ளன எனவும் அந்த அந்தஸ்தை விலக்கிக்கொள்ள வேண்டும் எனவும் ஐரோப்பிய இணையம் வலியுறுத்தி உள்ளது. (29ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் மக்களை குடியமர்த்தும் பணி பூர்த்தி

### அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம்,மே7

வன்னியில் இறுதி யுத்தத்தின்போது இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த கிளிநொச்சி மாவட்ட மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தும் பணிகள் நேற்று வெள்ளிக்கிழமையுடன் பூர்த்தியடைந்தன.

இந்தத் தகவலை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

நேற்றைய தினம் வவுனியா மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் இருந்து அழைத்துவரப்பட்ட 22 குடும்பங்கள் கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக்குடியமர்த்தப்பட்டன. இடைத்தங்கல் முகாம்களில் இருந்த கிளிநொச்சி மாவட்ட மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கையின் இறுதிக் கட்டம் இதுவெனத் தெரிவிக்கப்பட்டது. (31ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகள் அவரவர் பிரதேசங்களுக்கு மாற்றவேண்டும்

### நாடாளுமன்றில் ஜே.வி.பி. உறுப்பினர் ஹந்துன்நெத்தி

கொழும்பு,மே7

சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகள் - அவரவர்களின் பிரதேசங்களுக்கு - தமிழ் மொழியில் - விசாரணைகள் நடத்தும் நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்லவேண்டும் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி நேற்று நாடாளுமன்றில் வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றில் நேற்று ஜே.வி.பி எம்.பியான அஜித்குமாரவினால் முன்வைக்கப்பட்ட நீதித்துறை, பொலிஸ் மற்றும் சிறைச்சாலை ஆகியவற்றை ஒன்றிணைத்து ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமித்தல் தொடர்பான பிரேரணையை வழி மொழிந்து உரையாற்றிய போதே அவர் மேற் கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

மகஸின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதியின் அனுபவங்களை எனக்கு கேட்க சந்தர்ப்பம் ஏற்பட்டது. சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றில் ஆஜர்படுத்தும்போது விசாரணைகள் சிங்களம் அல்லது ஆங்கில மொழிகளில் நடத்தப்படுகின்றன.

அதன்போது என்ன (29ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கெயில் முழக்கம் மண்டியிட்டது பஞ்சாப்

- அருண்மொழி-

ஐ.பி.எல்லின் 47 ஆவது ஆட்டம் பெங்களூரில் நேற்று நடந்தது. இதில் வெற்றோரி தலைமையில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் கில்கிறிஸ்ட் தலைமையில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

டில்ஷான் - கெயில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக உள் நுழைந்தனர். முதல் மூன்று ஓவர்களையும் இருவரும் அடக்கி வாசித்தனர். ஹரிஸ் நான்காவது ஓவரை வீசினார். இந்த ஓவரிலேயே பெங்களூரின் அதிரடி ஆரம்பமாகியது. கெயில் முதலிரண்டு பந்துகளிலும் இரண்டு சிக்ஸர்களையும் அடுத்த இரு பந்துகளில் பவுண்டரிகளையும் அடித்து அசத்தினார். அடுத்த ஓவரை மக்லெரன் வீசினார். முதலாவது விக்கெட் இணைப்பாட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. 9 பந்து வீச்சுக்களில் 16 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் டில்ஷான் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து நுழைந்தார் ஹோக்லி. ஹோக்லி - கெயில் இருவரும் அதிரடிகளால் பொழிந்தனர். எட்டாவது ஓவரை பிரவீன் குமார் வீச கெயில் முதலிரண்டு பந்துகளில் சிக்ஸர்களும் அடுத்த இரண்டு பந்துகளிலும் பவுண்டரிகள் அடித்தார். அத்துடன் 28 பந்துகளில் அரைச்சதத்தையும் பூர்த்தி செய்தார். கெயில் அதிரடி ஆட்டம் அரங்கில் இருந்தவர்களை மெய்சிலிர்க்க வைத்தது. சகலரது பந்து வீச்சையும் துடைத்தெடுத்தார் கெயில். மக்லரன் 14 ஆவது ஓவரை வீசினார். அந்த ஓவரின் இறுதிப் பந்தில் பவுண்டரி அடித்து தனது சதத்தை கெயில் பூர்த்தி செய்தார். 46 பந்துகளில் கெயில் 100 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டமை குறிபிடத்தக்கது.

தொடர்ந்து சாவ்லா வீசிய ஓவரில்49 பந்துகளில் 10 பவுண்டரிகள், 9 சிக்ஸர்கள் அடங்கலாக 107 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். அந்த ஓவரின் இறுதிப் பந்திலேயே ஹோக்லியும் ஆட்டமிழந்து வெளியேறினார். பின்வரிசையில் டீ வில்லியர்ஸ் சிறப்பாக ஆடி 14 பந்துகளில் 27 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுக்கொண்டார். இதில் 2 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகளும் அடங்கும். இறுதியில் 20 ஓவர்கள் நிறைவில் 205 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்தது பெங்களூர். ஹரிஸ் 38 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது பஞ்சாப் அணி. முதலாவது பந்திலேயே கில்கிறிஸ்ட் ரன் அவுட்டில் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து வந்த அபிஷேக் நாயர் 1 ஓட்டத்துடன் அரவின்ட் பந்தில் வெளியேறினார். மார்ஷ் 4 ஓட்டங்களுடன் வெளியேறினார். மறுமுனையில் வல்த்தாட்டி 16 பந்துகளில் 21 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கெயிலின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

மத்தியவரிசையில் கார்த்திக் 20 ஓட்டங்களுடன் கெயிலின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். மக்லெரன் மட்டும் இறுதிவரை களத்தில் நின்று போராடினார். 28 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அரவின்ட் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் 120 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 9 விக்கெட்டுக் களை இழந்திருந்தது.

அரவின்ட 4 விக்கெட்டுக்களையும், கெயில் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.




கெயில்

# கிரிக்கெட் சபை சுற்றுப் போட்டிக் குழு அங்கத்தவர்கள் ராஜினாமா

இலங்கை கிரிக்கெட் சபையின் சுற்றுப்போட்டிக் குழுவிலிருந்து அந்தக் குழுவின் தலைவர் ரவி டி சில்வாவும் அஷ்லி ரட்னாயக்கவும் ராஜினாமா செய்துள்ளனர். ரவி டி சில்வாவின் ராஜினாமாவுக்கான காரணத்தை அறிய அவருடன் தொடர்பு கொள்ள முயன்றபோது அம்முயற்சி பலனளிக்கவில்லை. ஆனால், தனது தொழிற்சார் பணிகளில் கூடுதல் கவனம் செலுத்துவதற்காக ராஜினாமா செய்வதாக ராஜினாமா கடிதத்தில் தெரிவித்துள்ளார் என்று இலங்கை கிரிக்கெட் சபை உயரதிகாரியொருவர் ஆங்கில செய்தித்தாளொன்றுக்கு தெரிவித்தார்.

எனினும் உத்தியோகபூர்வமாக கூறப்பட்ட காரணத்தைவிட வேறு பல காரணங்களும் இந்த ராஜினாமாக்களுக்குப் பின்னால் உள்ளதாக சில வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தக் குழு சர்ச்சைகளில் சிக்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அஷ்லி ரட்னாயக்க, உலகக் கிண்ணப் போட்டிகளின் போதே ராஜினாமா செய்ததாகவும் ஆனால் அந்த ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. கிரிக்கெட் சபை உயரதிகாரிகள் சுற்றுப்போட்டிக் குழு விவகாரங்களில் தலையிட்டமை, அவர்களின் கடமைகளை முறையாக செய்ய இடமளிக்காமை ஆகியனவே ராஜினமாவுக்குப் பிரதான காரணம் எனவும் சில வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிலையில் சுற்றுப்போட்டிக் குழுவின் பதில் தலைவராக கிஹான் வீரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். இந்தக் குழுவின் செயலாளராக பதவி வகித்த கிஹான் வீரசிங்க, இலங்கை சுழற்பந்துவீச்சு பயிற்றுநர் ஒஷாதி வீரசிங்கவின் சகோதரர் ஆவார். (15)

# ஐ.பி.எல்.வருமானம்: தென்னாபிரிக்கா விசாரணை

தென்னாபிரிக்க கிரிக்கெட் வாரியத்தின் தலைவராக இருந்த நியோகாவை மீண்டும் தலைவராக நியமிக்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டதையடுத்து விசாரணை நடத்த தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. கடந்த 2009 ஆம் ஆண்டு இந்தியாவில் மக்களவைத் தேர்தல் நடைபெற்றது. அதனால் பாதுகாப்பு காரணத்துக்காக ஐ.பி.எல் போட்டிகள் தென்னாபிரிக்காவில் நடத்தப்பட்டன.

இதில் ஊழல் இடம்பெற்றதாக மஜோலாவை வெளிப்படையாக விமர்சித்தார் நியோகா. மேலும் இதுதொடர்பாக வெளிப்படையான விசாரணை நடத்த வேண்டும் என்று நியோகா தெரிவித்தார். ஆனால் சி.எஸ்.ஏ துறை ரீதியான விசாரணை நடத்தியது. பெப்ரவரியில் நியோகா மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து, அவரை தலைவர் பதவியிலிருந்து நீக்கியது. இதையடுத்து நீதிமன்றத்துக்கு சென்றார் நியோகா.

இதை விசாரித்த நீதிமன்றம், நியோகாவை பதவியிலிருந்து விலக்கியது சட்ட விரோதமானது. அவரை அந்தப் பதவியில் மீண்டும் நியமிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியானவுடன் அதை எதிர்த்து மேல்முறை யீடு செய்யப்போவதாக அறிவித்த கிரிக்கெட் வாரியம், பின்னர் அதிலிருந்து பின் வாங்கியது.

இப்போது நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேன் முறையீடு செய்யப்போவதில்லை என்றும், வெளிப்படையான தடயவியல் தணிக்கை விசாரணை நடத்த முடிவு செய்துள்ளதாகவும் கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது. (15)

# பாதுகாப்பு உத்தரவாதம் கோருகிறார் ஹசான் திலகரட்ன

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஹசான் திலகரட்னவுக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் போதிய பாதுகாப்பு வழங்கப்பட்டால் அவர் ஆட்ட நிர்ணய சதியில் சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களை வெளியிடுவார் என்று திருமதி அப்சாரி திலகரட்ன ஆங்கில இணையத்தளத்திற்குத் தெரிவித்துள்ளார்.

தமது குடும்பத்தினருக்கு பல கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதாகவும் இந்தப் பெயர்களை வெளியிட்டால் தங்கள் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படும் எனவும் திருமதி திலகரட்ன கூறினார். இதனால் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்பட்டால் திலகரட்ன இந்தப் பெயர்களை வெளியிடுவார் என்று அவர் கூறினார்.(15)

## இன்றைய ஆட்டம்

- சென்னை சூப்ப கிங்ஸ் எதிர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் (மாலை 4 மணி)
- மும்பை இந்தியன்ஸ் எதிர் டெல்லி டெயாடெவில்ஸ் (இரவு 8 மணி)

## அதிகூடிய ஓட்டம்

- சேவாக் – டெல்லி (10 ஆட்டங்கள் 422 ஓட்டங்கள்)
- டெண்டுல்கார் – மும்பை (9 ஆட்டங்கள் 351 ஓட்டங்கள்)
- ஹஸி – சென்னை (7 ஆட்டங்கள் 327 ஓட்டங்கள்)

## அதிகூடிய விக்கெட்டுக்கள்

- மலிங்க – மும்பை இந்தியன்ஸ் (9ஆட்டங்கள் 22 விக்கெட்டுக்கள்)
- இக்பால்அப்துல்லா – கொல்கத்தா (10ஆட்டங்கள் 12 விக்கெட்டுக்கள்)
- அல்பின் மோர்கல் – சென்னை (8 ஆட்டங்கள் 12 விக்கெட்டுக்கள்)

DLF INDIAN PREMIER LEAGUE

## DLF INDIAN PREMIER LEAGUE அணிகளின் நிலைகள்...

| அணி | M | W | L | T | N/R | Net/R/R | P |
|---|---|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 09 | 07 | 02 | 0 | 0 | + 0.635 | 14 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 10 | 06 | 04 | 0 | 0 | + 0.440 | 12 |
| சென்னை சூப்ப கிங்ஸ் | 09 | 06 | 03 | 0 | 0 | + 0.292 | 12 |
| றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | 09 | 05 | 03 | 0 | 1 | + 0.495 | 11 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 10 | 05 | 04 | 0 | 1 | - 0.194 | 11 |
| கொச்சி ருஸ்கேர்ஸ் | 10 | 05 | 05 | 0 | 0 | - 0.394 | 10 |
| டெல்லி டெயாடெவில்ஸ் | 10 | 04 | 06 | 0 | 0 | - 0.179 | 08 |
| டெக்கான் சார்ஜஸ் | 10 | 03 | 07 | 0 | 0 | - 0.125 | 06 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 08 | 03 | 05 | 0 | 0 | - 0.898 | 06 |
| புனே வாரியர்ஸ் | 09 | 02 | 07 | 0 | 0 | - 0.199 | 04 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வோர்னின் ஓய்வு உறுதி



ஐ.பி.எல் போட்டிகளில் ஆடுவதிலிருந்து ஓய்வு பெறவுள்ளார் ராஜஸ்தான் றோயல்ஸ் அணித்தலைவர் ஷேன் வோர்ன். இந்த செய்தியை அவர் உறுதிப் படுத்தியுள்ளார். அடுத்த தொடரிலிருந்து தான் விளையாடப் போவதில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

உலக அளவில் தலை சிறந்த சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவர் வோர்ன். சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து விடை பெற்ற வோர்ன், பின்னர் ஐ.பி.எல்லில் ஆட வந்தார். ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் தலைவராக கடந்த நான்கு ஐ.பி.எல். தொடர்களில் செயற்பட்டு வருகின்றார். இதில் ஒரு முறை கிண்ணத்தையும் வென்று கொடுத்து அசத்தினார்.

வயதாகியும் கூட இன்னும் சிறப்பாகவே பந்து வீசி வருகிறார் வோர்ன். இதனால் அவரது ஓய்வு முடிவை மறு பரிசீலனை செய்யுமாறு ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் பலரும் கோரும் நிலை ஏற்பட்டது. இருப்பினும் அதை மறு பரிசீலனை செய்ய முடியாது என்று ஏற்கனவே வோர்ன் கூறி விட்டார். இந்த நிலையில் நடப்பு ஐ.பி.எல். தொடரோடு ஆடுவதிலிருந்து விலகி விட வோர்ன் முடிவு செய்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், அடுத்த தொடரில் நான் விளையாட மாட்டேன். நடப்புத் தொடரில் அடுத்து ஆடவுள்ள சில போட்டிகளே நான் கடைசியாக ஆடும் ஐ.பி.எல். போட்டிகளாக இருக்கும் என்று கூறினார் வோர்ன்.

ஆடுவதிலிருந்து வோர்ன் விலகிவிட்டாலும் கூட அடுத்த தொடரிலிருந்து அவர் ராஜஸ்தான் அணியின் ஆலோசகராக செயற்படக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (15)

# விடைபெறுகின்றார் போத்தா

அயர்லாந்து அணியின் சகல துறை வீரர் அன்ரூ போத்தா சர்வதேச ஒரு நாள் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 34 வயதான போத்தா 2001 ஆம் ஆண்டு ஒருநாள் போட்டியில் அறிமுகமானார். இவர் தென்னாபிரிக்காவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

2007 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் அயர்லாந்து அணியில் 8 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டங்கள் கொடுத்து 2 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார்.

போத்தா ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிராக இடம்பெற்ற போட்டியில் மோர்கனுடன் இணைந்து 360 ஓட்டங்களை மூன்றாவது விக்கெட்டுக்காகப் பெற்றனர். இவர் ஒருநாள் போட்டியில் 3606 ஓட்டங்களைப் பெற்றார். (15)

# தவறவிட்டோம் பிடிகளை இதனால்தான் தோல்வி



நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் டெக்கான் அணி 4 விக்கெட்டுக்களால் தோற்றது. சேவாக் அதிரடியாக விளையாடி டெக்கானை வீழ்த்தினார். அவரது 2 பிடிகளை டெக்கான் வீரர்கள் தவறவிட்ட னர். இதுதான் தோல்விக்குக் காரணம் என்று டெக்கான் அணித்தலைவர் சங்ககார கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதா வது:-

சேவாக் ஆட்டமிழக்க வேண்டிய 2 வாய்ப்புக்களைத் தவறவிட்டோம். சர்மா, ரவிரேஜா ஆகியோர் பிடிகளை நழுவவிட் டனர். சேவாக்கை முன்னதாக ஆட்டமிழக் கச் செய்திருந்தால் நாங்கள் வெற்றி பெற்றிருப்போம். சேவாக்கின் ஆட்டம் மிகவும் அற்புதமாக இருந்தது. தனக்குக் கிடைத்த 2 வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டு அதிரடியாக விளையாடினார். இவ்வாறு அவர் கூறினார்.

டெக்கான் அணி 10 ஆட்டத்தில் 7 ஆவது தோல்வியைத் தழுவி இருப்பதால் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இனி வரும் 4 ஆட்டங்களிலும் வென்றாலும் அந்த அணிக்கு வாய்ப்பு குறைவே. (15)

# பயமில்லை எனக்கு - சேவாக்

சேவாக் அதிரடியாக விளையாடி ரசிகர்களுக்கு விருந்து படைத்தார். அவர் 56 பந்தில் 13 பவுண்டரி, 6 சிக்ஸருடன் 119 ஓட்டங்கள் குவித்தார். அவரது ஆட்டம் ரசிகர்களை கவர்ந்தது. தனி ஒருவராக நின்று அதிரடியாக விளையாடி அணியை வெற்றி பெற வைத்தார்.



ஆட்டநாயகன் விருது பெற்ற டெல்லி அணித் தலைவர் சேவாக், ஐ.பி.எல் போட்டியில் நான் ஆடிய ஆட்டங்களில் இது தான் சிறந்த ஆட்டமாகும். முதல் 6 ஓவரில் எங்களால் சரியாக ஆட முடியவில்லை. 29 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்தோம். டெக்கான் அணியின் 4 ஆவது மற்றும் 5 ஆவது பந்துவீச்சாளர்களின் பந்து வீச்சு அடித்து ஆடுவது என்று இலக்காக வைத்திருந்தேன். அதற்கு ஏற்றவாறு நடந்தது.

மல்கோத்ராவின் ஒரு ஓவரில் 23 ஓட்டங்கள் எடுத்தேன். இந்த ஓவர்தான் அதிரடியான ஆட்டத்துக்குச் சரியான தருணமாக அமைந்தது. அதை சாதகமாக பயன்படுத்திக் கொண்டேன். 15 அல்லது 16 ஓவர்கள் வரையில் நான் களத்தில் இருந்தால் வெற்றி இலக்கை தொட முடியும் என்று கருதினேன்.

முதல் முறையாக 20 ஓவர் போட்டியில் 100 ஓட்டங்களைத் தொட்டு இருக்கிறேன். இனி வரும் 5 ஆட்டங்களில் சிறப்பாக ஆட வேண்டும் என்ற நெருக்கடி எதுவும் இல்லை. தோற்றாலும் ஒன்றுமில்லை. ஏனென்றால் டெல்லி அணி அரை இறுதிக்கு நுழையும் என்று யாரும் எதிர் பார்க்கவில்லை. இதனால் டெல்லி அணி எந்தவித பதற்றமும் இன்றி விளையாடும்.

கடந்த ஐ.பி.எல் போட்டியில் டெக்கான் அணி 5 ஆட்டத்தில் தொடர்ந்து வென்று அரை இறுதிக்குத் தகுதி பெற்றது. டெல்லி அணிக்கு தற்போது அதே நிலைமை உள்ளது. ரசிகர்களின் ஆதரவு எங்களுக்கு அமோகமாக இருந்தது என்று சேவாக் தெரிவித்தார்.

டெல்லி பெற்ற 4 ஆவது வெற்றியாகும். 10 போட்டிகளில் 4 வெற்றி, 6 தோல்வியுடன் 8 புள்ளிகள் பெற்றுள்ளது.

# வெற்றி யாருக்கு?

ஐ.பி.எல் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் நடப்புச் சம்பியனான சென்னை சூப்ப கிங்ஸ் இதுவரை 9 ஆட்டத்தில் விளையாடி உள்ளது. இதில் 6 வெற்றி பெற்றது. 3 ஆட்டத்தில் தோற்றது. 12 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்தில் உள்ளது.

சென்னை சூப்ப கிங்ஸ், புனே அணியை 2 முறை வென்றது. கொல்கத்தா, பெங்களூர், டெக்கான், ராஜஸ்தான் அணிகளையும் வென் றது. கிங்ஸ் லெவன் பஞ்சாப், மும்பை இந்தியன்ஸ், கொச்சி ருஸ்கேர்ஸ் அணிகளிடம் தோற்றது.

சென்னை சூப்பகிங்ஸ் தனது 10 ஆவது ஆட்டத்தில் கம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ைடர்ஸ் அணியை இன்று எதிர்கொள்கின்றது. மாலை 4 மணிக்கு கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் இந்த ஆட்டம் நடக்கின்றது.


கொல்கத்தா அணி விளையாடும் 11 ஆவது ஆட்டம் ஆகும். அந்த அணி 10 ஆட்டத்தில் 6 வெற்றி, 4 தோல்வியுடன் 12 புள்ளிகளைப் பெற்றுள்ளது. இரு அணிகளும் 7 ஆவது வெற்றியை பெறும் ஆவலில் உள்ளது. கொல்கத்தா அணி ஏற்கனவே சென்னையிடம் 2 ஓட்டங்களில் தோற்றது. அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் கொல்கத்தா அணி விளையாடும். அரை இறுதி வாய்ப்பைப் பெற ஒவ்வொரு அணிக்கும் தான் ஆடும் எல்லா ஆட்டமும் முக்கியமானது. இதனால் இனிவரும் ஆட்டங்கள் எல்லாம் விறுவிறுப்பாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. (15)

# காலை வாரிய இறுதி ஓவர்




ஐ.பி.எல்லில் நேற்று முன்தினம் கொல்கத்தா - கொச்சி அணிகள் மோதின. முதலில் ஆடிய கொச்சி 5 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 156 ஓட்டங்கள் எடுத்தது. ஜெயவர்த்தன 55, பிரட் ஹொஜ் 35 ஓட்டங்கள் எடுத்தனர். பிரெட் லீ வீசிய கடைசி ஓவரில் 22 ஓட்டங்கள் விளாசப்பட்டது. தொடர்ந்து ஆடிய கொல்கத்தா அணியால் ஆட்ட முடிவில் 7 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 139 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. இதனால் கொச்சி 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. வெற்றி குறித்து அணித் தலைவர் ஜெயவர்த்தன கூறுகையில், ஆட்டம் மிகவும் கடினமாக இருந்தது. ஹொஜ் அதிரடியாக ஆடியதால் கடைசி கட்டத்தில் கூடுதல் ஓட்டங்கள் கிடைத்தன. இது தான் ஆட்டத்தின் போக்கை மாற்றியது. கொச்சியில் இது தான் எங்களது கடைசி ஆட்டம். எங்களுக்கு ஒத்துழைப்புக் கொடுத்த அனைத்து ரசிகர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து கொள்கிறோம் - என்றார்.

தோல்வி குறித்து கொல்கத்தா அணித் தலைவர் கம்பீர் கூறுகையில், 156 ஓட்டங்கள் என்பது எளிதாக எடுக்க கூடியதுதான். மத்திய வரிசையில் ஓட் டங்கள் குவிக்கத் தவறிவிட்டோம். பிரெட் லீ வீசிய கடைசி ஓவரில் ஹொஜ் 21 ஓட்டங்கள் விளாசியது தான் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது என்றார்.



# கரோலின் வோஸ்னியாகி தோல்வி



மாட்ரிட் ரென்னிஸ் போட்டியில் டென்மார்க் வீராங்கனை கரோலின் வோஸ்னியாகி 3 ஆவது சுற்றில் தோற்றார். அவரை ஜேர்மனியின் ஜூலியா கோர்ஜஸ் 6-4, 1-6, 6-3 செட் கணக்கில் வீழ்த்தினார். இந்த ஆண்டில் 4 ஆவது சம்பியன் பட்டம் பெற முயன்ற கரோலின் வோஸ்னியாகி அதிர்ச்சி தோல்வியை எதிர் கொண்டுள்ளார்.

கோர்ஜஸ் உலக ரென்னிஸ் அரங்கில் 27 ஆவது இடத்தில் இருப்பவர் ஆவார். கடந்த மாதம் ஸ்ட்ரூட்கார்ட்டில் நடந்த ரென்னிஸ் இறுதிப் போட்டியிலும் ரென்னிஷ் வீராங்கனை கரோலின் ஜூலியா கோர்ஜஸ் வீழ்த்தி இருந்தார்.

5 ஆம் நிலை ஆட்டக்காரரான ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசர் [illegible] தோற்றார். அவரை ரஷ்ய வீராங்கனை அனஸ்டசியா பவ்லியுசென்கோவா 7-6 (7-4), 6-3 செட் கணக்கில் வென்[illegible] அடுத்த சுற்றில் ஜூலியா கோர்ஜஸும் அனஸ்டசியாவும் ஆடு[illegible]ர். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரித மீள்குடியேற்றம் என அரசு பெரும் பிரசாரம்
# வலி.வடக்கில் 22 ஆயிரம் குடும்பங்கள் நடுத்தெருவில்

யாழ்ப்பாணம்,மே 7

மீளக்குடியேற்ற நடவடிக்கைகள் துரித கதியில் இடம்பெறுகின்றன என்று அரசு பெரும் பிரசாரம் மேற்கொண்டு வருகின்ற நிலையில் வலி. வடக்கில் 22 ஆயிரம் குடும்பங்கள் நடுத்தெருவில் நிற்கின்றன.

வலி.வடக்கு மீள்குடியேற்றப் புனர் வாழ்வுக்குழு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்ந்துள்ள, மீளக் குடியமரவுள்ள மக்களின் பிரச்சினைகள் தொடர் பாக ஆராயும் கூட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு வெளி யிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாகத் தம் வாழ்விடங்களையும் வாழ்வாதாரங்களையும் இழந்து நடைப் பிணங்களாக வாழும் வலி.வடக்கு மக்கள் பற்றி எமது அரசியல் தலைவர்கள் பாராமுகமாக இருப்பது பரிதாபத்துக்குரிய நிலையாகும்.

இதுவரை குடியமர்வு நிகழாத 17 கிராம அலுவலர் பிரிவுகளில் நான்கில் மட்டும் அற்ப சொற்ப மக்கள் குடியமர்ந்துள்ளனர். இது கூடக் கண்ணீர்க் காவியமாகவே உள்ளது.

மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்கு அடிப்படை வாழ்க்கை வசதிகள்கூடும் வழங்கப்படவில்லை.

தலா 12 தகரங்களும், 5ஆயித்து 500 ரூபாவும் வழங்கப்படுவதில் திருப்தி காணப்படுகிறது.

அத்தோடு மீளக்குடியமர்வு ஏதோ பெருமெடுப்பில் நிகழ்ந்து விட்டதாகக் காட்ட முயற்சிக்கப்படுகிறது.

இந்த மக்கள் படும் இன்னல்களைப் பார்க்கும்போது குடியமரவுள்ள ஏனைய மக்களுக்கு அத்தகைய எண்ணத்தைக் கைவிடுவதற்கான எச்சரிக்கை விடுப்பதாகவேயுள்ளது.புனர்வாழ்வு முகாம்களில் வாழும் சுமார் 20 ஆயிரம் குடும்பங்கள், வன்னியிலிருந்து மீண்ட ஆயிரக்கணக்கான குடும்பங்கள் உட்பட சுமார் 22 ஆயிரம் குடும்பங்கள் நடுத்தெருவில் விடப்பட்டுள்ளன.

இந்த மக்களின் வாழ்விடங்களையும் தொழிலாதாரங்களையும் அபகரித்து வைத்துள்ளமை முற்றுமுழுதான அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

அரசியல் தலைமைகள் மட்டுமன்றி மனித உரிமைகள் பற்றி வாய்கிழியக்கத்துபவர்கள் கூடக் கையதுகொண்டு மெய்யது பொத்தி 20 ஆண்டுகளுக்கு மேலாக வாழும் வலி.வடக்கு மக்களை மனித ஜென்மங்களாகக் கொள்வதாகத் தெரியவில்லை.

இந்த மக்கள் தமது நிலைமைகளை, தமது உணர்வுகளை வெளிக்காட்ட முடியாத பரிதாப நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் - என்றுள்ளது.

(ம)

## செஞ்சிலுவைச் சங்க தினத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள்

உலக செஞ்சிலுவைச்சங்க தினத்தை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வலிகாமம் கிழக்கு கிளை பல்வேறு நிகழ்வுகளை நடத்தி வருகின்றது.

அந்த வகையில் இன்று சனிக்கிழமை காலை வலி.கிழக்கு செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களால் சங்க வளாகம் சிரமதானம் செய்யப்படவுள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வலிகாமம் கிழக்குப் பிரிவின் தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் இரத்ததான முகாம் இடம்பெற்றது. இதில் 73பேர் இரத்ததானம் செய்தனர்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் சமூகப் பணிகள் குறித்த பரப்புரைகளும் இடம் பெற்று வருகின்றன. (ம-121)

STUDY+LIVE IN NEWZEALAND
இன்று....! யாழ்.நகரில்....!
நேரடி சந்திப்பும், தேர்வுகளும்.
மேலதிக விவரங்களுக்கு:
Excellence Education
TCT மண்டபம், நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(9.00am - 4.00pm)
SAFEER : 0773922677

BIT CORNER
Professional ICT Education
பரீட்சையினை மையமாகக் கொண்டு ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனத்துடன் ஒழுங்கமைக்கப்பட்ட விரிவுரைகள் எம்மால் நிகழ்த்தப்படுகின்றது




SEMESTER 2,4

எமது தனித்துவமான விரிவுரையாளர்கள்

| 2nd Semester | 4th semester |
| --- | --- |
| * Maths<br>T.ஜதுபாலதரன் Bsc | * Project management<br>S.ஹரிகரகணபதி Bsc (Hons) |
| * Java<br>S.ஹரிகரகணபதி Bsc (Hons) | * Multi Media<br>S.றசிகரன் Bsc |
| * DBMS<br>S.சுதர்சன் Bsc | * Data Communication & Network<br>S.சுதர்சன் Bsc |
| * SAD<br>S.றசிகரன் Bsc | * RAD<br>T.கோகுல் Bsc |
| வகுப்பு நாட்கள் (சனி, ஞாயிறு) | * Java II<br>T.ஜதுபாலதரன் Bsc |

இல.14, பலாலி வீதி,
திருநெல்வேலி சந்தி,
யாழ்ப்பாணம்.
எம்மோடு இணைந்து உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்றிடுங்கள்.
T.P: 0776621745

## பெரசிட்டமோல் நஞ்சாவதனால் வருடம் 200 பேர் இறக்கின்றனர்

கொழும்பு, மே 7

நாட்டில் வருடந்தோறும் குறைந்தது 200 பேர் பெரசிட்டமோல் நச்சுத் தன்மைக்கு உள்ளாகி மரணமாகிறார்கள். சுகாதார அமைச்சின் நோய்கள் பரவுதல் தொடர்பான ஆய்வுப் பிரிவின் பேச்சாளர் டாக்டர் சுடாத் பீரிஸ் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

மருத்துவ அறிவுத்தல்களுக்கு மாறாக மேலதிகமாக மாத்திரைகளை உட்கொள்வதால் பெரும்பாலும் இவ்வாறான மரணங்கள் ஏற்படுகின்றன. சிறுவர்கள் மத்தியிலேயே இந்த மாதிரி சம்பவங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன என்றார் டாக்டர் பீரிஸ்.

தேசிய நோய்த் தடுப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்றில் அவர் உரை நிகழ்த்தினார். நோய்த் தடுப்பு மருந்து ஏற்றும் சம்பவங்களுடன் தொடர்புடைய மரணங்கள் எப்பொழுதாவதுதான் நடைபெறுவதுண்டு. அவைகளைப் பெரிது படுத்திப் பிரச்சினையாக்குவது துரதிர்ஷ்டமாகும். அதைவிட வேறு காரணங்களாலும் அதிக மரணங்கள் சம்பவிக்கின்றன -என்றார் அவர். (ப)

### தவறிவிட்டன

கந்தசாமி. தவமணி என்பவருடைய தே.அ.அட்டை(627850980V), இலக்ஷிதா சூரியகுமாரன் என்பவருடைய தே.அ. அட்டை( 946322393V) மற்றும் விசேட அடையாள அட்டை, கையடக்கத் தொலைபேசி என்பன கிளிநொச்சியில் இருந்து சாவகச்சேரிக்கு பஸ்ஸில் வரும்போது தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:0779226921

### வாகனச் சாரதி தேவை

நல்லொழுக்கமும் நன்கு அனுபவமும் உள்ள, 40 வயதுக்கு மேற்பட்ட வாகனச் சாரதி தேவை. கோப்பாயை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: 0750431098

### விற்பனைக்கு

59- XXXX டொல்பின் வான் பீப்பிள் லீசிங்கில் நிற்கும் வான்- 5 டோர் விற்பனைக்குண்டு. மாதம் 36,000 ரூபா அடிப்படையில் நிற்கின்றது.

தொடர்புகளுக்கு:
0776134225

### வீடு விற்பனைக்கு

குளப்பிட்டி வீதியில் கே.கே.எஸ். வீதியிலிருந்து 75 மீற்றர் தூரத்தில் (கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தின் பின்புற வீதி) பெரிய வாகனத் தரிப்பிட வசதிகள் கொண்ட 2 ¼ பரப்பில் அமைந்துள்ள மூன்று அறைகள், இரண்டு கோல்கள், ஏனைய வசதிகளுடன் வீடு விற்பனைக்குண்டு. தரகர் தொடர்பு தேவையில்லை. மாலை 4 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே: 021 321 7811

## மரண அறிவித்தல்



### கந்தையா சிவசுப்பிரமணியம்

– ஓய்வுபெற்ற விரிவுரையாளர், மொறட்டுவ பல்கலைக்கழகம் –

மலேயன் பென்சனர் அமரர் கந்தையா, அமரர் தையல் முத்து ஆகியோரின் அன்பு மகனும், திருமதி நல்லநாயகம் அவர்களின் (கனடா) அன்புக் கணவரும், ஷண்முகானந்தா பொறியியலாளர் (கனடா), தயானந்தா பொறியியலாளர் (கனடா), சித்திரானந்தா பொறியியலாளர் (கனடா), விவேகானந்தா பொறியியலாளர் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர்கள் திலகவதியார், தெய்வாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும், அமரர்கள் சுளிபுரம் முன்னாள் விதானையார் அப்புத்துரை, அல்வாய் வட்டுவத்தையைச் சேர்ந்த கட்டிடக் கலைஞர் சிவானந்தசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் ஆகிய சிவசுப்பிரமணியம் 04 ஆம் திகதி புதன்கிழமை கனடாவில் அமரரானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கனடா ரொறன்ரோவில் 09.05.2011 திங்கட்கிழமையன்று நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு :
0217210720, 0014166500916

தகவல் : அ. நிர்மலாதேவி (மலரக்கா)
"மநு இல்லம்" . சுளிபுரம்.

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



'சிவத்தமிழ்மணி'
### மாப்பாணர் துரைராசா

[ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர், நகரசபை, சாவகச்சேரி]

மண்ணில் 18.11.1936 — விண்ணில் 05.05.2003

(திதி : சதுர்த்தி - 07.05.2011)

புவனத்தில் வந்துதித்தாய்
புண்ணியம் செய்தவரானோம்
பூத்திடும் பூக்களும் அறியும்
பூமியில் தன்பணி என்னவென்று.....
கற்கள்தடக்கிய கடினமான பாதை
கைப்பிடித்து தூக்கி விட்டீரே
கால் தளர்ந்து சோர்ந்த போது
தழைத்து தலை தூக்க வைத்தீர்......

வந்த பாதையெல்லாம் வழி காட்டி
வாழ்க்கையோடு அர்த்தம் தந்தீர்
போகும் வழியெல்லாம் நீர் இட்ட
பாலமென்று
வணங்கி நிற்போம் என்றென்றும்.

மீசாலை மேற்கு,
மீசாலை. (1672)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Computer Express
Institute of Information Technology

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

- * Dip. in computer science. 4 Months 1000/=
- * Dip. in web page Designing. 4 Months 1000/=
- * Dip. in Graphic Designing. 4 Months 1000/=
- * Dip. in Desk top publishing. 4 Months 1000/=
- * Dip. in Hardware Engineering. 3 Months 1000/=
- * Dip. in Auto CAD. 3 Months 1000/=
- * Dip. in MicroSoft Office. 3 Months 1000/=
- * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) 3 Months 1000/=
- * Honours Dip. in computer science. 5 Months 1000/=

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=
20-05-2011 மட்டுமே பதிவுகளுக்கு முந்துங்கள்

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Monday to Friday 9Am to 3.30Pm
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering
Diploma in Acc.Package.
Course Fee 1000/=

Batch I - 07.05.2011 9Am or 3pm Batch II - 08.05.2011 9Am or 3pm
Batch III - 11.05.2011 11Am or 2pm Batch Iv - 13.05.2011 11Am or 2pm

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்,
வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி
பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

Tally புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## என்று மாறும் இந்தச் சந்தேகப் போக்கு?

வெளிநாடுகளில் குடியுரிமைபெற்ற தமிழர்கள், அந்தந்த நாடுகளின் கடவுச் சீட்டுகளுடன் வடபகுதிக்கு அரசாங்கத்தின் விசேட அனுமதியின்றி விஜயம்செய்ய முடியாது. அவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு வருகைதர விரும்பினால் பாதுகாப்பு அமைச்சின் விசேட அனுமதியைப் பெற வேண்டும். அவ்வாறில்லையெனின் ஓமந்தைச் சாவடியில் தமது வெளிநாட்டுக் கடவுச்சீட்டைக் காண்பித்து விசேட உத்தரவுப் பத்திரம் பெறவேண்டும்.

எவ்வித முன்னறிவிப்பும் இன்றி, நடைமுறைப்படுத்தப்படும் இந்த நடவடிக்கையினால் வெளிநாடுகளில் இருந்து வரும் தமிழர்கள் பெரும் ஏமாற்றத்தையும் அசௌகரியங்களையும் அனுபவிக்க நேரிடுகிறது.

கடந்த பல வருடங்களாக குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும் போர்ச் சூழ்நிலை வேகமடைந்ததால் தாம் பிறந்து, வளர்ந்து, பயின்ற பூமிக்கு வந்து அதனைத் தரிசிக்க முடியாத துர்ப்பாக்கியம் வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்து சென்ற தமிழர்களுக்கு ஏற்பட்டிருந்தது.

இலங்கைக்குத் திரும்பி வரமுடியாத சூழ்நிலையில் அவர்கள் புலம் பெயர் நாடுகளின் குடியுரிமையைப் பெற்று, வாழவேண்டிய தவிர்க்கமுடியாத தேவையும் உண்டாகியது. இப்போது போர் முடிந்து சகஜ நிலை தோன்றிவிட்ட சூழ்நிலையில், தமது சொந்த மண்ணில் உறவுகளைப் பார்ப்பதற்கும் தமது காணி நிலங்களையும் மற்றும் சொத்துக்களையும் பார்த்துச் செல்லவே இங்கு வருகிறார்கள்.

இத்தகைய ஆர்வமும் ஆவலும் மனிதனாகப் பிறந்த எவருக்கும் ஏற்படுவது உண்டு. சொந்த மண்ணையும் சொந்த உறவுகளையும் பிரிந்து சென்ற எவருக்கும் இயல்பாகவே வருவது. அதற்கான வாய்ப்பைச் 'சட்டம்' போட்டுத் தடுப்பது மனிதாபிமானத்துக்கும் மனிதநேயத்துக்கும் ஒவ்வாததாகும்.

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்களை, எதிரிகளாகப் பார்க்கும் ஓர் அச்சநிலை இலங்கை அரசுக்கு ஏற்பட்டிருப்பது துரதிர்ஷ்ட வசமானது. அவர்களில் மிகப் பலர் மீண்டும் ஆயுதக் கிளர்ச்சியை இங்கு ஊக்குவிக்க ஆதரவு அளிப்பவர்கள் என்ற மாயைக்குள் அரசு சிக்கிக்கொண்டுள்ளது இதிலிருந்து வெட்டவெளிச்சமாகத் தெரிகிறது.

அவசரகாலச் சட்டத்தை மாதாந்தம் நீடிக்கும் அரச தரப்பினர், புலம் பெயர் தமிழர்கள் விடுதலைப் புலிகளை மீண்டும் உயிர்ப்பிக்கச் செயற்படுகிறார்கள் என்று குற்றஞ்சாட்டுவது அதற்குச் சான்றாகிறது.

உள்நாட்டில் பயங்கரவாதம் முற்றாக ஒடுக்கப்பட்ட போதிலும், வெளிநாடுகளில் உள்ள புலி ஆதரவாளர்கள் புலனாய்வு மற்றும் ஆயுதக்குழுக்களுடன் இணைந்து மீண்டும் இலங்கையில் பயங்கரவாதத்தைக் கட்டியெழுப்ப முயல்கின்றனர், அதற்கு இடமளிக்க முடியாது - என்று அவசர காலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணையை நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பித்துப் பேசுகையில் பிரதமர் டி.எம். ஜெயரத்தினா தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறே அரசாங்கத்தின் பிரமுகர்கள் பலரும், புலம்பெயர் தமிழர்களைச் சந்தேகக் கண்ணோடு பார்த்துக் கருத்து வெளியிடுகிறார்கள். அந்தக் கூற்றுக்கள் தகுந்த ஆதாரங்கள், அத்தாட்சிகளுடன் தெரிவிக்கப்படுகின்றனவா அல்லது எழுந்தமானத்திலேயே வெளியிடப்படுகின்றனவா என்பது இன்னும்தெளிவற்றதாகவே உள்ளது.

இத்தகைய ஒரு பின்னணியிலேயே, புலம் பெயர் நாடுகளில் இருந்து வரும் தமிழ் மக்களும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்குச் செல்வதற்கு விசேட உத்தரவு பெறவேண்டிய அல்லது வந்த வழியே திரும்பிச் செல்லவேண்டிய நியதிக்கு ஆளாகிறார்கள்.

இந்தக் கட்டுப்பாடு நிரந்தரமானதா அல்லது நினைத்த நினைத்த மாத்திரத்தே நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகிறதா என்பதும் தெளிவாக்கப்படவில்லை. தமது உறவுகளையும், தமது சொந்த இடங்களையும் காண்பதற்கு பெரும் பணச்செலவில் ஆர்வத்துடன் குறிப்பிட்ட மூன்று மாவட்டங்களுக்கும் வரும் புலம்பெயர் தமிழர்கள் முன்னறிவிப்பு இன்றித் திருப்பி அனுப்பப்படுவது எந்த வகையில் நீதிக்கு உட்பட்டது?

இது குறித்து புலம்பெயர் தமிழர்கள் வாழும் நாடுகளின் அரசுகளுக்கு அறிவித்து அவர்கள் அங்கிருந்து புறப்படுவதற்கு முன்னரே இலங்கை அரசின் தடை நடவடிக்கையைத் தெரியப்படுத்த வகை செய்வது வேறு. ஆயிரக்கணக்கான மைல்களைப் பயணம் செய்து மண்பற்றுடன் வருபவர்கள் திருப்பி அனுப்பப்படுவது எந்த வகையில் நியாயம்?

வெளிநாடுகளில் பணி செய்வோர் அலுவலகங்களிலும் தொழிற்சாலைகளிலும் விடுப்பு எடுப்பதற்கு மிகப் பல நாள்களுக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு நீண்ட நாள்கள் சென்றாலும் பிள்ளைகளின் பாடசாலைக் காலத்தில் அவர்களைப் பெற்றோர் தம்முடன் அழைத்து வருவது இங்குள்ளது போலன்று. அனேகமாக பிள்ளைகளின் பாடசாலை விடுமுறைக் காலத்திலேயே, பெற்றோர் தாம் விடுப்பு எடுத்து தமது மண்ணையும் உறவுகளையும் காண வேண்டும் என்ற பெரு விருப்போடு இங்கு வருகிறார்கள்.

பல ஆண்டுகளாக தமது கிராமத்தையும், கும்பிட்ட கோயிலையும், படித்த பாடசாலையையும் பார்த்து, சொந்த பந்தங்களுடன் சில நாள்களைக்களித்துக் கழிக்க வேண்டும் என்ற ஆவலுடனேயே அந்தந்த நாடுகளில் குடியுரிமை பெற்ற புலம்பெயர் வாழ் தமிழர்கள் இங்கு மிக்க ஆவலுடனும் புதிய கனவுகளைச் சேர்த்தும் இங்கு வர விரும்புகிறார்கள். எத்தனையோ வருடங்கள் தமது தாய்மண்ணை விட்டு விலகியிருந்த பிரிவுத் துயரைத் தணிக்கும் பேராவலுடன் இங்கு வருகிறார்கள்.

பெரும் பணச்செலவில் கொழும்பு வந்துசேரும் அவர்களை, தமது சொந்த மண்ணுக்குப் போகவிடாமல் முன்னறிவிப்பின்றித் தடுப்பதும், கட்டுப்பாடுகள் போடுவதும் அசௌகரியத்தைத் தோற்றுவிப்பதும் இலங்கை அரசால் எந்த வகை மனுநீதியில் அடக்கப்பட்டுள்ளது? சர்வதேச பிரயாணிகளுக்கான சர்வதேச நியமங்களில் இதுவும் சேர்க்கப்பட்டிருக்கிறதா?

தமிழர்கள், அவர்கள் இலங்கையில் வாழ்ந்தால் என்ன, புலம்பெயர்ந்து வாழ்ந்தால் என்ன, எந்த வகையிலேனும் தரம் தாழ்த்திப் பார்த்து, அவர்களைப் புண்படுத்த அரசால் எதுவும் செய்யமுடியும் என்பதனைக் காண்பிக்கும், நிரூபிக்கும் ஓர் அகங்காரச் செயற்பாடாகவே இதனை நோக்கவேண்டியுள்ளது.

இந்த இலட்சணத்தில் தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை உருவாக்கப் போவதாக அரசு வாய்ப்பந்தல் கட்டுவது அர்த்தமுள்ளதா?

வடக்கு மாவட்டங்களுக்கு வருவதற்கு புலம்பெயர் தமிழர்களுக்குக் கட்டுப்பாடு விதிப்பது நல்லிணக்க முயற்சிக்கு எதிர் விளைவைத் தரும் என்பதனை அரசு கருத்தில் கொள்ள முடியாமல் போனது ஏனோ? என்று தான் மாறப்போகிறது அரசின் இந்தச் சந்தேகப்போக்கு!

## நீதிமன்றக் கட்டடத்துக்கான அத்திபாரம் வெட்டும்போது எலும்பு எச்சங்கள் மீட்பு

### மல்லாகத்திலுள்ள குறிப்பிட்ட இடத்தில் நேற்று விசாரணை

யாழ்ப்பாணம், மே 7

மல்லாகம் நீதிமன்றக் கட்டடம் அமைக்கப்பட்டு வரும் காணியில் அத்திபாரம் வெட்டப்படும் போது அதிலிருந்து எலும்பின் எச்சங்கள் நேற்றுமுன்தினமும் நேற்றும் மீட்கப்பட்டுள்ளன. குறித்த காணியிலுள்ள கிணற்றிலிருந்து கடந்த மாதம் 24 ஆம் திகதி மண்டை ஓடு ஒன்றும் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நேற்றுமுன்தினம் குறித்த பகுதியில் கட்டடம் அமைப்பதற்கான அத்திபாரம் வெட்டும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்த போது சிதைவடைந்த நிலையில் எலும்பின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாகத் தெல்லிப்பழைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் குறித்த எச்சங்களை எடுத்துச்சென்று நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

இதனைத் தொடர்ந்து எலும்பின் எச்சங்கள் மீட்கப்பட்ட இடத்துக்கு மல்லாகம் மாவட்ட நீதிபதி, யாழ். போதனா வைத்தியசாலைச் சட்ட வைத்திய அதிகாரி, பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் வந்திருந்தனர்.

சம்பவ இடத்தில் மேலும் ஏதாவது தடயங்கள் இருக்கின்றனவா என்று சட்ட வைத்திய அதிகாரி சோதனை மேற்கொண்டார். அதன்போது சில எச்சங்கள் சட்ட வைத்திய அதிகாரியினால் மீட்கப்பட்டன. எச்சங்கள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொண்ட பின்னர் அவை மனித எச்சங்களா, விலங்கின் எச்சங்களா என்று தெரியவரும். இவ்வாறு சம்பவ இடத்தில் சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்திருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டாலும் அனைத்தையும் வெற்றிகரமாக எதிர்கொள்வோம்

### ஜனாதிபதி மஹிந்த சவால்

கொழும்பு, மே 7

மனிதாபிமான நடவடிக்கைகள் தொடர்பில் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தினாலும் அவையனைத்தையும் வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு அரசு தயாராக இருக்கின்றது.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார். 2011 ஆம் ஆண்டுக்கான சர்வதேச குடும்ப நல சுகாதார விழாவில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் தாய்சேய் மரண வீதம் தொடர்பாகப் பேசப்படுகின்றது. போஷாக்கு மட்டம் தொடர்பாக பேசப்படுகின்றது. தாய் சேய் மரண வீதத்தைக் குறைக்கும் பணிகளைச் சிறப்பாக செய்த கௌரவம் குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்களுக்குக் கிடைக்க வேண்டும். நாட்டின் எதிர்கால சந்ததியினரைப் போஷாக்குமிக்கவர்களாக மாற்றுவதற்கு குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளை பாராட்டுகின்றேன்.

இவை அனைத்தையும் செய்யும் போது எம்மீது பலர் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்றனர். சாட்சியங்கள் இன்றி குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். நாட்டில் பயங்கரவாதத்தை அழித்து மனிதாபிமான நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். இன்று இலங்கையை அவமதித்து மீண்டும் பயங்கரவாதத்தைத் தூண்டும் முயற்சியில் சிலர் இறங்கியுள்ளனர். எனவே, அதற்கு எதிராக இலங்கையர்கள் என்ற ஒரே குரலில் ஒருமித்து நிற்பது மகிழ்சியளிக்கின்றது - என்றார்.

ஆசியாவின் சிறந்த சுகாதார சேவை அதிகாரி, உலகின் சிறந்த சுகாதார அதிகாரி ஆகியவற்றுக்கான 4 பேர் தெரிவு நிகழ்வில் இலங்கையைச் சேர்ந்த லலிதா பத்மினி விருதைப் பெற்றார். (த-15)

## பல்கலைக் கழகங்களின் பணிகள் யாவும் செயல் இழக்கும் நிலையில்

### கல்வியாளர்கள் சம்பள உயர்வுப் போராட்டம்

கொழும்பு, மே 7

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் நிர்வாகிகள் மற்றும் கல்வியாளர்களில் 90 வீதமானவர்கள் தங்கள் பதவி விலகல் கடிதங்களைச் சமர்ப்பித்து விட்டார்கள். இதனால் பல்கலைக்கழகங்கள் அனைத்துமே செயல் இழக்கும் நிலைக்கு வந்துள்ளன என்று பல்கலைக்கழகங்களின் ஆசிரியர்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழகங்களின் திணைக்களத் தலைவர்கள், அலகுகளின் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் விடுதிக் காப்பாளர் ஆகியவர்கள் தங்கள் விலகல் கடிதங்களைத் தாக்கல் செய்துள்ளார்கள் என்று சம்மேளனம் அறிவித்துள்ளது. பல்கலைக்கழக கல்விசார் மற்றும் நிர்வாகப் பணிகளில் உள்ளவர்களுக்குக் கணிசமான அளவு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஒட்டிய தொழிற்சங்க நடவடிக்கையாகும் இது என்று சம்மேளனம் தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் நிர்வாகத்துறையில் பணியாற்றும் பெரும்பான்மையானவர்களும் தங்கள் பதவி விலகல் கடிதங்களைச் சமர்ப்பித்து விட்டார்கள் என்று சம்மேளனத்தின் தலைவர் டாக்டர் நிர்மல் தேவசிறி கூறியுள்ளார்.

கொழும்பு, மொறட்டுவ, யாழ்ப்பாணம், கிழக்கு மாகாணம், றுகுனு மற்றும் சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களைச் சேர்ந்தவர்கள் தமது விலகல் கடிதங்களை வழங்கியிருப்பதுடன் நாவல திறந்த பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் இதில் கலந்துகொண்டிருக்கின்றனர் என்று அவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் கடந்த வருடத்திலிருந்தே சம்பள உயர்வை வழங்கும்படி கேட்டு வந்திருக்கிறார்கள். அதிகாரிகளிடமிருந்து எதுவித சாதகமான பதிலும் இதுவரை கிடைக்கவில்லை. பல்கலைக்கழக மானியக் குழு விடுத்த சுற்றறிக்கையொன்றில் பதவி விலகலுக்கு மூன்று மாத முன்னறிவித்தல் கொடுக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், 1978 ஆம் ஆண்டு பல்கலைக்கழகச் சட்டத்தில் பதவி விலகல் தொடர்பில் இவ்வாறான விடயம் எதுவும் குறிக்கப்படவில்லை என்று டாக்டர் தேவசிறி குறிப்பிட்டார்.

தென்னாசியாவிலேயே இலங்கையில் தான் பல்கலைக்கழகக் கல்விமான்கள் மிகக் குறைந்த சம்பளத்தைப் பெற்று வருகிறார்கள் - என்றார் அவர். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே 8 இல் குருப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்தியா



### கும்பம்

உங்கள் ராசிக்கு தன, குடும்ப, ஆதாய ஸ்தான அதிபதியாகிய குருபகவான் தைரிய ஸ்தானமாகிய மேடத்திற்கு பெயர்ச்சியாகி உள்ளார். குருவின் 3ம் இட அமர்வு அவ்வளவு சிறப்பானதல்ல. இருப்பனும் குருவின் 5, 7, 9 ஆகிய பார்வை பெறுகிற இடங்களான களத்திர, நட்பு, பிதா, பாக்ய, ஆதாய ஸ்தானங்களின் வழியாக சுபபலன் கிடைக்கும். வீட்டிலும், வெளியிலும் நற்பெயரை பாதுகாத்துக் கொள்வதில் கவனம் வேண்டும். புதிய முயற்சிகளை ஆரம்பிக்கும்போது திட்டமிடுதல் இல்லாவிட்டால் பிரச்சினைகளைச் சந்திக்க நேரும். திறமை குறைய வாய்ப்புள்ளது.

நம்பகமானவர்களின் ஆலோசனையுடன் எதையும் செய்யுங்கள். பேச்சில் சாந்தம் ஏற்படும். இளைய சகோதரர்கள் அன்புடன் நடந்து கொள்வர். வீடு, வாகன வகையில் மாற்றம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது. தாயின் ஆசி கிடைக்கும். பூர்வீக சொத்தில் கிடைக்கிற வருமானம் குருவருளால் அதிகரிக்கும். புத்திரர்கள் நல்லவிதமாக படித்து உங்களுக்கு மகிழ்ச்சியைத் தருவர். குலதெய்வ அருள் பரிபூரணமாகத் துணை நிற்கும். தம்பதியர் குடும்பப் பொறுப்பை உணர்ந்து பாசத்துடன் நடந்து கொள்வர்.

நண்பர்கள் முக்கிய சூழ்நிலைகளில் தேவையான உதவியை வழங்குவர். மனைவி வழி உறவினர்களிடம் கருத்துவேறுபாடு மறையும். பணவரவு அவ்வப்போது குறைந்தாலும், அன்றாடச்செலவுகளுக்கு சிக்கல் ஏதும் இருக்காது. சௌகர்ய வாழ்க்கை சீராக இருக்கும். தந்தைவழி சொத்தில் பங்கு கிடைக்க இது உகந்த காலம். மூத்த சகோதரர்கள் ஒரு ஆசிரியரைப் போல் கண்டிப்புடன் நடந்தாலும், நன்மையே செய்வர். பாக்கிப்பணம் சிறு முயற்சியினால் வந்துசேரும். பயணங்களின் போது மிகுந்த கவனம் தேவை.

**பெண்கள்:** பணிபுரியும் பெண்கள் குழப்பமான மனதுடன் செயற்படுவதால் பணி நிறைவேறுவதில் தாமதம் ஏற்படும். சக பணியாளர்களின் உதவியால் நிலைமை சீராகும். பதவி உயர்வு, சலுகைகள் பெறுவதில் நிர்வாகத்தை அவசரப்படுத்தும் போக்கு வேண்டாம். குடும்பப் பெண்கள் கணவரின் அன்பு, தாய்வீட்டு சீர்வரிசை பெற்று சந்தோஷ வாழ்வு நடத்துவர். ஆன்மிக சுற்றுலா சென்று வரலாம். சுயதொழில் புரியும் பெண்கள் அளவான மூலதனமிடுவது நல்லது. எதிர்பார்த்த அளவு லாபம் இருக்காது.

**மாணவர்கள்:** மருத்துவம், விவசாயம், பொறியியல், சட்டம், ஆசிரியர் பயிற்சி, ரசாயனத்துறை ஆகிய துறைகளைச் சேர்ந்த மாணவர்கள் குழப்பத்துடன் செயற்படுவதால் படிப்பில் ஆர்வம் சிறிதளவு குறையும். சக மாணவர்களின் ஊக்கத்தினை ஏற்பதால் படிப்பில் சீரான முன்னேற்றம் கிடைக்கும். ஏனைய துறை மாணவர்கள் சுமாராகப் படிப்பர். தந்தையின் சொல் கேட்டு நடந்து குடும்பத்தில் நற்பெயர் பெறுவீர்கள். கல்வி நிறுவனங்களுக்கு வாகனங்களில் செல்லும் போது மிகுந்த கவனம் வேண்டும். படித்து முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் ஓரளவே அனுகூலம் உண்டு.

**விவசாயிகள்:** விவசாயப்பணிகளில் தேவையற்ற தாமதம் ஏற்படும். அளவான விளைச்சல் கிடைக்கும். கால்நடை வளர்ப்பின் மூலம் கிடைக்கும் பணம் செலவுக்கு கைகொடுக்கும். சொத்து ஆவணங்களை ஏனையோர் பொறுப்பில் விடக்கூடாது.



### மீனம்

உங்கள் ராசிநாதனும் 10 ஆம் இட தொழில் ஸ்தான அதிபதியுமாகிய குருபகவான் தன, குடும்ப ஸ்தானமாகிய மேடத்திற்கு பெயர்ச்சியாகி உள்ளார். குருவின் இந்த அமர்வு வாழ்வை வளமாக்கும். இதுதவிர குருவின் 5, 7, 9 ஆகிய பார்வை பெறுகிற இடங்களான விவாகம், ஆயுள், தொழில் ஸ்தானங்களின் வழியாகவும் அதிக நன்மை கிடைக்கும். பேச்சில் சத்தியமும் சாந்தமும் கலந்திருக்கும். திருமணம் மற்றும் சுபநிகழ்ச்சிகள் தடையின்றி நடக்கும். பணவரவு அதிகம் பெறுவதற்கான புதிய வழிவகை தோன்றும். இளைய சகோதரர்கள் உங்களிடம் கூடுதல் நம்பிக்கை கொள்வர். சமூகப்பணியில் ஆர்வத்துடன் செயற்பட்டு நற்புகழ் பெறுவீர்கள். வீடு, வாகன வகையில் பராமரிப்புப் பணிகளை சிறப்பாகச் செய்து புத்தம் புதிதாக மாற்றுவீர்கள். தாய்வழி உறவினர்கள் மதிப்புடன் நடத்துவர்.

புத்திரர்கள் உங்கள் எண்ணங்களை உணர்ந்து செயற்படுவர். பூர்வீகசொத்தில் வளர்ச்சியும் தாராளமான பணவரவும் கிடைக்கும். எதிரிகளின் செயலாக்கம் குறையும். வழக்கு விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். உடல்நலம் பலம் பெறும். கடன்களை திட்டமிட்ட வகையில் அடைத்து நிம்மதி பெறுவீர்கள். தாய்வழி உறவினர்கள் உங்களைத் தேடி வந்து நட்பு கொள்வதுடன், அவர்களது பிரச்சினைகளுக்கும் ஆலோசனை கேட்டுப்பெறுவர். குடும்பத்தேவை பெருமளவில் நிறைவேறும். சிரமம் எதுவும் அணுகாத நல்வாழ்வு அமையும். தந்தைவழி உறவினர்களிடம் இருந்த கருத்து வேறுபாடு சரியாகி அன்பு வளரும். சுற்றுலாப் பயணத்திட்டம் நிறைவேறி புதிய அனுபவங்களைப் பெற்றுத்தரும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி எளிதாக நிறைவேறும்.

**பெண்கள்:** பணிபுரியும் பெண்கள் திறமையுடன் பணி இலக்கை சிறப்பாக நிறைவேற்றுவர். எதிர்பார்த்த பதவி உயர்வு, விரும்பிய சலுகை தாராளமாகக் கிடைக்கும். குடும்பப் பெண்கள் எதிர்கால வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்களை செயற்படுத்துவர்.

கணவரின் அன்பு சீராக கிடைக்கும். குரு பார்வையால் மாங்கல்ய பலம் அதிகரிக்கும். ஆபரண சேர்க்கை உண்டு. சுயதொழில் புரியும் பெண்கள் உற்பத்தி, விற்பனையைப் அதிகரித்து அதிக லாபம் காண்பர். உபதொழில் ஆரம்பிக்கும் வாய்ப்பு நிறைவேறும். இளம் பெண்களுக்கு திருமணம் கைகூடும்.

**மாணவர்கள்:** பொறியியல், மருத்துவம், சட்டம், விவசாயம், ஆசிரியர் பயிற்சி, வங்கியியல், வணிகவியல், கணினி ஆகிய துறைகளைச்சேர்ந்த மாணவர்கள் சிறப்பாகப் படிப்பர். ஏனைய துறை மாணவர்கள் இவர்களையும் விட சிறப்பாகப் படிப்பர். பணவசதி சீராக கிடைக்கும். சக மாணவர்களாலும் உதவி உண்டு. படிப்பை முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை உண்டு. சிலர் விளையாட்டுத் துறையில் சாதனை நிகழ்த்துவர். பாதுகாப்பு குறைவான இடங்களுக்குச் செல்லக்கூடாது.

**விவசாயிகள்:** பயிர் வளர்க்கத் தேவையான பொருள்கள் நேரத்திற்கு கிடைக்கும். விளைச்சல் சிறந்து சந்தையில் தாராள விலை பெறுவீர்கள். கால்நடை வளர்ப்பிலும் பலன் உண்டு. புதிய நிலம் வாங்கலாம்.


## கண்டு பிடித்துத் தருவீர்களா?



ஞானேந்திரன் எழிலரசன்



சின்னராசா ஞானேந்திரன்

என் சிரேஷ்ட புதல்வன் ஞானேந்திரன் எழிலரசன் 03.05.2011 அன்று புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் ஆலயக் கேணியில் தவறுதலாக வீழ்ந்து பரிதாபமாக உயிரிழந்து 04.05.2011 அன்று இறுதிச் சடங்குகளும் நடந்து முடிந்துவிட்டன. இதை என் கணவர் அறிவாரா? எத்தனை இடர்கள் மத்தியிலும் ஒரு சிறு காயமும் இன்றிக் காத்துவந்த என் எழிலை இன்று இழந்து நின்று தவிக்கின்றேனே! தந்தையின் நினைவிலேயே ஏங்கிக் கொண்டிருந்த என் செல்வன் தந்தையையும் காணாது சென்றுவிட்டார். என் கணவர் சின்னராசா ஞானேந்திரன் வன்னியில் இருந்து நாம் 17.05.2009 அன்று இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வரும்போது விசாரணைக்கு என அவர் கூட்டிச் செல்லப்பட்டார்.

அவரைத் தேடி அலைந்து திரிந்து கொண்டிருக்கின்றோம். மனைவி ஞானேந்திரன் சாருலதா, இளைய சின்னஞ்சிறார்கள் ஞானேந்திரன் மதியரசன் (5வயது), ஞானேந்திரன் புகழரசன் (2½ வயது). அண்ணன் படிக்கப் போய்விட்டார் என்று கூறிக் கொண்டிருக்கும் என் குஞ்சுகளுக்கு அப்பா என்றாலும் கிடைத்து ஆறுதல் படுத்துவாரா? கதிகலங்கி நிற்கும் இந்த அபலைக்காய் எல்லா உலகும் கருணை காட்டுவீர்களா?

அலை கடலில் தத்தளிக்கும் ஓடமானேன்
ஆண்டவனின் கருணையற்ற அகதியானேன்.

என் அன்புக் கணவரைத் தேடிக்
காத்திருக்கும்:
மனைவி ஞா.சாருலதா
பிள்ளைகள் ஞா.மதியரசன்,
ஞா.புகழரசன்.

புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்றுறை.

(3922)(39-22-24)



# UNIVERSITY OF JAFFNA
## BID NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed Bids from the qualified contractors for the following services.

| Service Details | Refundable deposit (Rs.) | Non-refundable deposit (Rs.) | Minimum ICT AD Grade |
|---|---|---|---|
| Providing Facilities Management Services for Hostels at Siddha Medicine Unit, Kaithady, University of Jaffna. | 2,500.00 | 500.00 | M9\|C10 (any field) or any organizations currently providing complete Facilities Management Services for any similar building |
| Providing Facilities Management Services for Kanagasuntheram Male Hostel and Sivagnana sundram Female Hostel, University of Jaffna. | 15,000.00 | 500.00 | M7\|C8 (any field) or any organizations currently providing complete Facilities Management Services for any similar building |

Bids form may be obtained from the Deputy Registrar / Capital Works & Planning Unit, University of Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above fee at the Shroff's Counter, University of Jaffna until 19.05.2011.

Perfected Bids should be sealed and marked with the job and the name of the service on the top left hand corner of the envelope and sent by registered post to reach the Registrar, University of Jaffna, P.Box 57, Thirunelvely, Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.

Bids will be accepted till 2.00 p.m on 27.05.2011 and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of Bids.

Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

P.O Box 57, Thirunelvely,
Jaffna. 06.05.2011

Registrar,
University of Jaffna.

(40-22)(சி)578246


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.பியை இராஜ மரியாதையுடன் வைத்திருப்பது ஏன்? சர்வதேசப் பொலிஸாரிடம் அவரை ஒப்படைக்க முடியுமா?

## நாடாளுமன்றில் ஜயலத் எம்.பி. கேள்வி

ரயில் பயணங்களில் ஆறு நிமிடங்களை மிச்சப்படுத்துவதற்கு 360 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. இது ஒரு உலக சாதனைதான் என்று விமர்சிக்கிறார் ஜே.வி.பி. உறுப்பினரான அனுரகுமார திஸாநாயக்க.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போதே அனுரகுமார திஸாநாயக்க இப்படி விமர்சித்தார்.

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் மாலை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

### சபாநாயகரின் அறிவித்தல்

சபை ஆரம்பத்தில் சர்ச்சைக்குரிய தனியார்துறை ஊழியர் ஓய்வூதியத் திட்டம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் சபையில் உத்தியோகபூர்வமாக அறிவித்தார். அதாவது, முன்வைத்துள்ள தனியார் துறை ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் இலங்கையில் அரசியல் அமைப்புக்கு முரணானது அல்ல என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளதாக சபாநாயகர் சபையில் அறிவித்தார். இதனைத் தொடர்ந்து வழமைபோல் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்கு விடையளிக்கப்பட்டன.

நாடாளுமன்றத்தில் 14 கேள்விகள் குறிப்பிடப்பட்டிருந்தன. பெரும்பாலான உறுப்பினர்கள் சபையில் இல்லாததால் அதற்கான விடைகள் சபா பீடத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. ஒரு சில கேள்விகளுக்கு மட்டும் நேரடியாகப் பதில் அளிக்கப்பட்ட போதும் அவை சுவாரசியமாகவே இருந்தன.

### ஆறு நிமிடங்களை மிச்சப்படுத்த 360 கோடி ரூபா

ஜே.வி.பி. உறுப்பினரான அஜித்குமார போக்குவரத்து அமைச்சரிடம் காலி-மாத்தறை ரயில் பாதை அபிவிருத்தி தொடர்பாகக் கேள்வி எழுப்பினார்.

அதிவேக ரயில் பாதை அபிவிருத்தி தொடர்பாக இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை வெளிப்படுத்த முடியுமா? இதற்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவு? சீரமைக்கப்பட்ட பாதையின் நீளம் எவ்வளவு? இதனால் ஏற்பட்ட நன்மை என்ன? என்று கேள்விகளை எழுப்பினார்.

இந்தக் கேள்விகளுக்கு போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம பதில் அளித்தார்:

காலிக்கும் மாத்தறைக்கும் இடையிலான அதிவேக ரயில்பாதை இந்திய அரசின் உதவியுடன் 36 மில்லியன் செலவில் நவீன மயப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பிரயாண நேரத்தைக் குறைக்க முடிந்தது என்று அமைச்சர் கூறினார்.

### பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் - 900

அப்போது குறுக்கிட்டார் மற்றும் ஒரு ஜே.வி.பி. உறுப்பினரான அனுரகுமார பிரியதர்ச,

ஐயா, இந்த அமைச்சர் கூறுகின்றார் பிரயாண நேரத்தைக் குறைக்க முடியாது என்று. சாதாரண ரயிலான ருகுணு குமாரி ரயில் 43 கிலோமீற்றர் தூரத்தைக் கடக்க எடுக்கும் நேரத்தை விட அதிவேக ரயில் நிமிடங்கள் குறைவாக எடுக்கின்றது. இந்த ஆறு நிமிடங்களை மிச்சப்படுத்த 360 கோடிகளைச் செலவிட்டு சாதனை படைத்துவிட்டான் என்று கிண்டலாகக் கூறினார் அனுரகுமார திஸநாயக்க.

### மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சா?

இதனை மறுத்தார் அமைச்சர் . சபாநாயகர் அவர்களே காலிக்கும் மாத்தறைக்கும் இடையில் 106 பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் இருக்கின்றன. அந்த இடங்களில் மிகவும் அவதானமாக ரயிலைச் செலுத்த வேண்டும். இதேபோன்று நாடெங்கிலும் 900 பாதுகாப்பாற்ற ரயில் கடவைகள் இருக்கின்றன என்று கூறினார் அமைச்சர்.

ஐயா, இது நல்ல வேடிக்கையாக இருக்கின்றது. இந்தப் பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் அதிவேக ரயிலுக்கு மட்டும் தான் இருக்கின்றன. சாதாரண மற்றும் கடுகதி ரயில்களும் இந்தப் பாது காப் பற்ற கடவைகளைக் கடந்து தானே செல்கின்றன. இது அமைச்சருக்குத் தெரியாது போலும் என்று ஒரு போடு போட்டார் அனுரகுமார திஸநாயக்க.

### தண்டவாள இரும்புகளும் சிலிப்பர் கட்டைகளும் எங்கே?

அமைச்சரை விடவில்லை அனுரகுமார திஸநாயக்க. அமைச்சர் அவர்களே! காலிக்கும் மாத்தறைக்கும் இடையிலான 43 கிலோமீற்றர் தூரம் நவீனப் படுத்தப்பட்டுள்ளது.

அங்கிருந்து அகற்றப்பட்ட ரயில் தண்டவாள இரும்புகளும் சிலிப்பர் கட்டைகளும் மாயமாக மறைந்து விட்டன. இவற்றை யாருக்குக் கொடுத்தீர் கள் என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

அனுரகுமாரவின் இந்தக் கேள்வி அமைச்சருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டது. இதனை அமைச்சர் எதிர்பார்க்கவில்லை. என்றாலும் சமாளித்துக் கொண்டவராக சபாநாயகர் அவர்களே! இந்த இடைக்கேள்வி, உறுப்பினரால் எழுப்பப்பட்ட கேள்வியுடன் தொடர்புடையது அல்ல. எனவே, இதற்கு பதில் அளிக்க முடியாது எனக் கூறி விட்டார் அமைச்சர் குமார வெல்கம.




### 15 வீத பஸ் கட்டண உயர்வு

ஆசனத்தில் அமர்ந்த அமைச்சரை மீண்டும் குழப்பினார் ஐ.தே.க. உறுப்பினர் தயாநிதி ஜயசேகர.

அமைச்சர் அவர்களே! தனியார் பஸ் போக்குவரத்துத் துறையினர் பஸ் கட்டணத்தை 15 வீதத்தால் அதிகரிக்கப் போவதாகக் கூறப்படுகின்றது. இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதா? என்று கேட்டார். இதனைக் கேட்ட அமைச்சர் இந்தக் கேள்வி எனது அமைச்சுடன் தொடர்புடையது அல்ல எனக் கூறிவிட்டு எழுந்த வேகத்தில் அமர்ந்து கொண்டார் அமைச்சர் குமார் வெல்கம.

### ஐ.நா. அறிக்கையும் அவசரகாலச் சட்டமும்

கேள்வி நேரத்தின்பின் அவசர காலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணையை முன்வைத்தார் பிரதமர் தி.மு.ஜயரத்ன.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான காரணங்களைக் கூற வேண்டிய பிரதமர் கூடுதலான நேரம் ஐ.நா. நிபுணர்குழு அறிக்கை தொடர்பாகவே பேசினார்.

என்றாலும் வழமைபோல் வெளிநாடுகளில் இருக்கும் புலிகள் ஆதரவுப் புலனாய்வுப் பிரிவினருட னும் ஆயுதக் குழுவினருடனும் இணைந்து மீண்டும் இங்கு கிளர்ச்சியை ஏற்படுத்த முனைகின்றனர் என்றும் கூறினார்.

### டொலர்களுக்கு அடிமையானவர்களே ஆதரிக்கின்றனர்

ஐ.நா.நிபுணர்குழு அறிக்கை ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர் கள் எல்லோரும் எதிர்க்கும்போது டொலர்களுக்கு அடிமையான ஒருசிறு கூட்டத்தினர்மட்டுமே ஆதரிக்கின்றனர் என்றும் குற்றம் சாட்டினார் பிரதமர்.

### கூட்டமைப்புக்கு வேட்டு; அரசு சதி

நேற்றைய விவாதத்தின்போது எதிர்க்கட்சி உறுப்பினரான தயாசிறி ஜயசேகர ஒரு முக்கியமான விடயத்தைப் போட்டு உடைத்துவிட்டார். அதாவது அரசு தமிழ்த் தேசிய கூட்டமைப்பை இரண்டு மூன்று துண்டுகளாக உடைத்து அதில் ஒரு பகுதியினரைத் தம்முடன் இணைத்துக் கொள்ளும் சதியில் இறங்கி உள்ளது என்று ஓர் அபாய அறிவிப்பை விடுத்தார் தயாசிறி. இது சிந்திக்க வேண்டிய ஒருவிடயமே.

### ஐயோ! என்ற ஓலமே நிபுணர்குழு அறிக்கை

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வன்னி மாவட்ட எம்.பி. சிவசக்தி ஆனந்தன் வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அவலங்களையும் துன்பங்களையும் எடுத்துக் கூறினார். அதே வேளை, இறுதிக் கட்ட யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் எழுப்பிய 'ஐயோ!' என்ற ஓலம் தான் இன்று ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையாக வெளிப்பட்டுள்ளது என்று கூறினார்.

### ஆயுள்தண்டனையைவிட கொடுமையான வேதனை

யாழ்.மாவட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உறுப்பினரான ஈ.சரவணபவன் உரையாற்றும்போது: சிறைக் கூடங்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் துயரநிலை தொடர்பாக சபையில் கூறினார்.

பாரதூரமான குற்றச் செயல்களில் ஒரு மடங்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டவர்கள் கூட அரசின் நன்நடத்தை மற்றும் லீவுகள், விசேட கழிவுகள் எனப் பத்துப் பன்னிரண்டு வருடங்களில் வெளியே வந்து விடுகின்றார்கள். ஆனால், எந்தவிதமான குற்றச்சாட்டுக்களும் இன்றி சந்தேகத்தின்பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் எட்டு முதல் 18 வருடங்களுக்கு மேல் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இது ஆயுள்தண்டனையைவிடக் கொடுமையானது என்றார் சரவணபவன்.இதைவிடக் கொடுமை என்னவென்றால், சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஓர் இளைஞன் தனது தாயாரின் மரணச் சடங்களிலும் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை என்று கண்ணீர் விட்டுக் கதறியதாகவும் சரவணபவன் சபையில் தெரிவித்தார்.

### நீதித்துறைக்கே சவால்

சந்தேகத்தின்பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராகக் குற்றப் பத்திரிகைகளைச் சமர்ப்பிக்க முடியாவிட்டால் அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று பிரதம நீதியரசர் தீர்ப்பு வழங்கி உள்ளார். ஆனால், சட்டமா அதிபரால் அதனைச் செய்ய முடியவில்லை. இது ஏன்? சட்டமா அதிபரின் இந்தச் செயல் நீதித்துறைக்கே விடப்பட்ட ஒரு சவாலாகவே அமைந்துள்ளது என்றும் சரவணபவன் கூறினார்.

### சர்வதேச பொலிஸாரிடம் ஒப்படைப்பீர்களா?

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன, குமரன் பத்மநாதன் தொடர்பாகச் சர்ச்சையை எழுப்பினார். அதாவது, குமரன் பத்மநாதன் ஒரு சர்வ தேச பயங்கரவாதி. அவர் சர்வதேச பொலிஸாரால் தேடப்படுபவர்.

இவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், இலங்கை அரசு கே.பியைச் இராஜ மரியாதையுடன் மிக வும் பாதுகாப்பாக வைத்துள்ளமை ஏன் என்று கேள்வி எழுப்பினார் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன.

### சபையில் இருந்து வெளியேற்றப்பட்ட அரச தரப்பு உறுப்பினர்

அவசரகாலச் சட்டம் தொடர்பான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ஆளும்கட்சி உறுப்பினர் ஒருவர் சிவப்பு நிற சட்டை அணிந்து சபைக்குள் வந்து பிரதி அமைச்சர் நவின் திஸா நாயக்கவுடன் பேசிக் கொண்டிருந்தார். இதனை அவதானித்த பிரதி படைக்கல சேவிதர் நேரடியாக வந்து அந்த ஆளுங் கட்சி உறுப்பினரை சபையில் இருந்து வெளியேறும்படி கூறி வெளியேற்றினார்.

உதயன் சபைச் செய்தியாளர்
இரா.புத்திரசிகாமணி

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்கு வரும்போது தேசிய உடை அல்லது கோட் சூட்டுடன்தான் வரவேண்டும். அதுவும் வெள்ளை நிற மேற்சட்டைதான் அணிய வேண்டியது கட்டாயம். இதை மீறி கோல உடையில் வருவது சபையை அவமதிக்கும் ஒரு செயலாகக் கருதப்படும். இதைக்கூட இந்த ஆளும் கட்சி உறுப்பினர் தெரிந்து கொண்டிருக்கவில்லையா என்பது அவருக்கே வெளிச்சம்.

### ஐ.நா.நிபுணர்குழுவுக்கு அழைப்பு

ஜனாதிபதியும் ஏனைய அமைச்சர்களும் ஐ.நா.நிபுணர்குழு சட்டரீதியான ஒன்று அல்ல என்றும் அந்தக் குழுவின் அறிக்கையை ஒட்டுமொத்தமாக நிராகரிப்பதாக வீராவேசமாக இங்கு முழக்கம் இடுகின்றனர். ஆனால், ஐ.நா.வின் இலங்கையில் நிரந்தர பிரதிநிதியான பாலித்த கோகண தருஷ்மன் உட்பட நிபுணர்குழு உறுப்பினர்களைத் தனது வீட்டுக்கு அழைத்து விருந்து வைக்கின்றார். இலங்கைக்கு வரும்படியும் அழைப்பு விடுத்துள்ளார்.

விருந்தை ஒன்றாகச் சுவைத்து உண்ட தருஷ்மன், பாலித்த கோகன வாய்மூலம் விடுத்த அழைப்பை எழுத்து மூலம் அறிவிக்கும்படி கடிதம் எழுதிவிட்டார்.

அங்கே தான் வந்தது வம்பு என்று சுட்டிக் காட்டினார் ஜே.வி.பி. உறுப்பினரான விஜித ஹேரத். இது ஆளும் கட்சி யினரை வாயடைக்கச் செய்துவிட்டது. இப்படி காரசாரமான விவாதத்தின் பின் அவசர காலச் சட்டம் பெரும்பான்மை வாக்குகளால் மேலும் ஒருமாதத்துக்கு நீடிக்கப்பட்டது.

## சிறைச்சாலைகளில் நெருக்கடி நிலைமை

வெலிக்கடை மற்றும் போகம்பரைச் சிறைச்சாலைகளின் சிறைக்கூடங்களில் கடும் நெரிசல் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெலிக்கடையில் 114 பேரும் போகம்பரையில் 222 பேரும் என்றவாறு 336 மரணதண்டனைக் கைதிகள் இந்தச் சிறைச்சாலைகளில் உள்ளனர்.

சிறைக்கைதி ஒருவருக்கு என்றவாறு உருவாக்கப்பட்டுள்ள சிறைக் கூடம் ஒன்றில்5முதல்7பேர்வரையில்தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிய வருகின்றது.

1978 ஆம் ஆண்டிலிருந்து மரண தண்டனைகள் நிறைவேற்றப்படாமையை அடுத்து மரணதண்டனை தீர்ப்புக்குள்ளாகும் கைதிகள் தினம் தினம் இந்தச் சிறைக் கூடங்களில் தங்கவைக்கப்படுகின்றனர்.

மரணதண்டனை ஜனாதிபதியின் மன்னிப்பின் பேரில் ஆயுள் தண்டனையாக மாற்றமடைவது 1998 ஆம் ஆண்டிலி ருந்து நடைமுறைப்படுத்தப்படாதுள்ளது.

இதுவும் பாரதூரமான பிரச்சினையாக உருவெடுத்துள்ளது என்று சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

சிறைக்கைதிகள் சிலர் 15 முதல் 20 ஆண்டுகள் வரையிலும் வாழ்கின்றனர் எனவும் தினமும் அரை மணிநேரம் வரையில் அவர்கள் திறந்த வெளியில் விடப் படுகின்றனர் என [illegible]காரிகள் தெரிவித்துள்ளனர் (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான ரீதியாக நிலத்தைப் பாதுகாக்க புதிய சட்டம் விரைவில் நடைமுறைக்கு

## காணி அபிவிருத்தி பிரதி அமைச்சர் தகவல்

விஞ்ஞான ரீதியாக நிலத்தைப்பாதுகாக்கக்கூடிய புதிய சட்டம் ஒன்று விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளதாக காணி அபிவிருத்தி பிரதி அமைச்சர் சிறிபால கமலத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலகத்தை திறந்து வைத்த பின்னர் உரை நிகழ்த்தும் போதே பிரதி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த அலுவலகத் திறப்பு விழாவின் போது பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தென்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திக்கு நிகராக வடபகுதியிலும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

பூமியை மிகத் திட்டமிட்ட முறையில் முகாமைப்படுத்தி அபிவிருத்தித் திட்டங்களை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

விஞ்ஞான ரீதியாக நிலத்தைப்பாதுகாக்கக் கூடிய புதிய சட்டம் ஒன்று தேசிய ரீதியாக அமுல்படுத்தப்படவுள்ளது. அந்த புதிய சட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறவேண்டியுள்ளது. அந்த அங்கீகாரம் கிடைத்ததும் விரைவில் அது அமுல்படுத்தப்படும் என்றார். (த-14)

# சட்டவிரோத மது விற்பனையாளரிடம் 30 ஆயிரம் ரூபா தண்டம் அறவீடு

யாழ்ப்பாணம், மே 7

யாழ். மாவட்டத்தின் பல பிரதேசங்களில் இருந்தும் கடந்த இரு மாதங்களுக்குள் 35 சட்டவிரோத மது விற்பனையாளருக்கு நீதிமன்றத்தினால் முப்பதாயிரத்து நானூறு ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

பொலிஸார் மற்றும் மதுவரித் திணைக்களத்தினரின் தேடுதல் நடவடிக்கையின்போது கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் 31 சட்டவிரோத கள் விற்பனையாளர்களும், 4 கசிப்பு உற்பத்தியாளர்களும் பிடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் இருபாலை, கல்வியங்காடு, கோண்டாவில், குருநகர், யாழ்ப்பாணம் , அல்லைப்பிட்டி, வேலணை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். இவற்றில் இருபாலைப் பிரதேசத்தில் அதிகமான சட்டவிரோத கள் விற்பனையாளர்கள் கைது செய்யப்பட்டதாக யாழ். மதுவரித்திணைக்கள அத்தியட்சகர் எஸ்.சோதிநாதன் தெரிவித்தார். (ம-313)

# யாழ். குடாநாட்டில் பெருமெடுப்பில் அக்ஷய திருதியை கொடுக்கல்வாங்கல்









யாழ். குடாநாட்டில் அக்ஷய திருதியைக் கொடுக்கல் வாங்கல்கள் நேற்று பெருமெடுப்பில் இடம்பெற்றன.

தங்கத்திருநாளாம் இந்த நன்னாளில் தங்கமோ வெள்ளியோ வாங்கினால் அந்த ஆண்டு முழுவதும் தமது குடும்பத்துக்கு தனலாபமும் மகிழ்ச்சியும் கிடைக்கும் என்பது மக்களின் நம்பிக்கை. அந்த வகையில் யாழ். குடாநாட்டில் உள்ள நகையகங்களில் பெரும் எண்ணிக்கையில் மக்கள் நேற்று அலை மோதியதைக் காணமுடிந்தது.

இந்த அக்ஷய திருதியை நன்னாளில் சிறியதோ பெரியதோ தங்கமோ வெள்ளியோ வாங்க வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர்.

மக்களது விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் யாழ். நகர்ப்பகுதி நேற்று விழாக் கோலம் பூண்டிருந்தது.

நகையகங்களின் முன்பாக வாழை, தோரணங்கள் கட்டப்பட்டு திருவிழா போல் காட்சியளித்ததைக் காணமுடிந்தது. (ம)

# தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு புதிய அத்தியட்சகர்

தெல்லிப்ழை ஆதார வைத்தியசாலையின் புதிய அத்தியட்சகராக டாக்டர் என்.ஜெயக்குமாரன் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். இங்கு வைத்திய அத்தியட்சகராக சேவைபுரிந்த டாக்டர் டி.வினோதன் வைத்திய நிர்வாக கற்கை நெறியை மேற்கொள்வதற்காக கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு விடுவிக்கப்பட்டுள்ளார். (த-300)

# கைபேசியில் ஆபாசப் படம்; மந்துவில் வாசிக்கு அபராதம்

கையடக்கத் தொலைபேசியில் ஆபாசப் படங்கள் வைத்திருந்த மந்துவில் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த 5 ஆம் திகதி 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை விசாரித்த நீதிவான் இந்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 2 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். மேலும் ஆபாசப் படங்கள் பதியப்பட்டிருந்த 'மெமறிக் காட்'டினை பறிமுதல் செய்து படங்களை அழிக்குமாறும் உத்தவிட்டார். (த-207)

# வீட்டுத்தோட்டப் போட்டிகளை ஓகஸ்டில் நடத்துவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 7

'பயிர் வளர்ப்போம் தேசத்தைக் கட்டியெழுப்புவோம்' எனும் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்திலுள்ள அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்களுக்கிடையில் வீட்டுத்தோட்ட போட்டிகளை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

2007 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ''பயிர் வளர்ப்போம் தேசத்தைக் கட்டியெழுப்புவோம்'' எனும் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் மரக்கறி உற்பத்திக்கான துரித நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த வருடம் இந்தத் திட்டமானது கடந்த காலத்தில் நிலவிய எதிர்பாராத மோசமான காலநிலையால் விவசாயப் பயிர்களுக்கு பாரிய சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் மரக்கறி விலைகளும் உயர்வடைந்துள்ளன. இந்த நிலைமையினை மாற்றி அமைக்கும் பொருட்டு ''மரக்கறி உற்பத்திக்கான துரித நிகழ்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

அரச திணைக்களங்களில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை முழுமையாக இந்த செயல்திட்டத்தில் ஈடுபடுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் ஏற்கனவே சம்பந்தப்பட்டுள்ள திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த செயற்றிட்டத்துக்கான போட்டிகளை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டிக்கான விண்ணப்பங்களை அரச திணைக்களங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் வலயக் கல்வி அலுவலகங்கள், பாடசாலை அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்றார்.

# யாழ். இந்துவில் நாளை வரை தென்னாசிய ஓவியக் கண்காட்சி



யாழ்ப்பாணம்,மே7

தென்னாசியப் பிராந்தியத்தில் உள்ள 9 நாடுகளைச் சேர்ந்த 32 கலைஞர்களால் வரையப்பட்ட ஓவியங்களின் கண்காட்சி நேற்று முன்தினம் யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகியது. இந்தக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள ஓவியங்கள் யாவும் இந்தியாவின் பாண்டிச்சேரியில் உள்ள சித்திர வடிவமைப்புக்கான கல்லூரியில் 32 கலைஞர்களால் வரையப்பட்டவையாகும்.

இந்தியக் கலாசார நிலையம் மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்தக் கண்காட்சி இடம்பெறுகின்றது.

நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணியளவில் ஆரம்பமான இந்தக் கண்காட்சியை வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ சந்திரசிறி சம்பிரதாயபூர்வமாக நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரக அதிகாரி எம்.மகாலிங்கம், துணை அதிகாரி வினோத் கே வர்மா, வடமாகாண ஆளுநரின் செயலாளர் சி.ரங்காராஜா , யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் தி.கணேசராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த ஓவியங்களை இலங்கை, இந்தியா, ஆப்கானிஸ்தான், பூட்டான், நேபாளம், பங்களாதேஸ், மாலைதீவு, மியன்மார் ஆகிய நாடுகளைச் சேரந்தவர்கள் வரைந்துள்ளனர். இவர்களுள் 19 இந்தியக் கலைஞர்களும் 2 இலங்கை கலைஞர்களும் உள்ளடங்குவர்.

இங்குள்ள ஓவியக்கலைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், பல்வேறு கோணங்களில் கலைச்சிந்தனையை வளர்க்கும் நோக்குடனும் இந்தக் கண்காட்சி மூன்று நாள்களுக்குத் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இந்தக் காட்சி முதலில் புதுச்சேரியில் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் கெழும்பு, மாத்தறை ஆகிய இடங்களில் காட்சிப் படுத்தப்பட்டது. (த-4-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் பொருளாதார அபிவிருத்திக்கு சாதகமான நிலை வடமாகாணத்தில் இல்லை

## பொது நூலகக் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மே 7

உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்திக்குரிய சாதகமான நிலை வடமாகாணத்தில் இல்லை என நேற்று யாழ். பொது நூலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் சுட்டிக்காட்டப்பட்டது.

'துரித பொருளாதார வாய்ப்புகளுக்கான தேடல்' என்ற தலைப்பிலான செயலமர்வின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று யாழ். பொது நூலகத்திலுள்ள வடக்கு மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

உள்ளூராட்சி அமைச்சின் வடமாகாணச் செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின்போதே மாகாண, மாவட்டத் துறைசார்ந்த அதிகாரிகள் மேற்கண்டவாறு சுட்டிக் காட்டினார்கள்.

வடக்கு மாகாணத்திலுள்ள தொழில்துறை அதிகாரிகள், வங்கித்துறை அதிகாரிகள், முதலீட்டுச் சபையின் உயர் அதிகாரிகள், மாவட்ட செயலகத் திட்டமிடல் அதிகாரிகள், வர்த்தக கைத்தொழில் மன்றப் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டு உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்திக்கான இலக்குகள், சவால்கள், முதலீட்டுக்கான வாய்ப்புகள் குறித்துச் சுட்டிக்காட்டினார்கள்.

அவர்களால் மேலும் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்கள் வருமாறு:-

* வடமாகாணத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் போதுமானதாக இல்லை. இதன் காரணமாக முதலீட்டாளர்கள் முதலிடுவதற்குத் தயங்குகின்றனர்.
* உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகள் திருப்திகரமானதாக இல்லை. இவை உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்திக்குச் சவாலாக இருக்கிறன.
* வங்கிகள் பல்வேறு கடன் திட்டங்களைவழங்கிவருகின்றன. அந்தக்கடன்திட்டங்கள் குறித்துப் பொது மக்கள் அறியாதுள்ளனர்.
* வடக்கின் வசந்தம் என்ற பெயரில் இடம்பெற்று வரும் அபிவிருத்தித் திட்டங்கள் திருப்திகரமானதாக இல்லை.

ஆகிய விடயங்களே இந்தக் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டன. (த-14)

## தவறி வீழ்ந்த இளைஞர் படுகாயம்

கோயில் மண்டபக் கூரை வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் அவர் நின்றிருந்த மரச்சலாகை விலகியதனால் தவறிக் கீழே இருந்த கொங்கிறீற் கற்களின் மேல் விழுந்தமையால் தலையில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் புன்னாலைக் கட்டுவன் ஆயக்கடவைப் பிள்ளையார் கோயிலில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் இடம் பெற்றது. சம்பவத்தில் புத்தூர், நவக்கிரியைச் சேர்ந்த மு.சிவனேசன் (வயது -30) என்பவரே காயமடைந்தவராவார். (த-4)

# பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை இனங்காணும் செயலமர்வு நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே.07

வடக்கு மாகாணத்திலுள்ள குறுகிய, நீண்ட கால பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை இனங்காணும் வகையிலான 'துரித பொருளாதார அபிவிருத்தி வாய்ப்புகளுக்கான தேடல்' என்ற செயலமர்வின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பொது நூலகத்திலுள்ள வடக்கு மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் உள்ளூராட்சி அமைச்சின் வடக்கு மாகாணச் செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களின் உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்திக்குரிய இலக்குகள், மூலவளங்கள், சவால்கள் ஆகியவற்றைத் திரட்டி முதலீட்டுக்குரிய வாய்ப்புக்கள் எவை எனத் தொகுத்துப் புத்தகம் ஒன்றை வெளியிடுவதே இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண தொழில் துறைத் திணைக்களம் 'நியூ குறியர்ஸ்' நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியுடன் இந்தச் செயலமர்வை நடத்துகின்றது.

வடமாகாணத் தொழில்துறை திணைக்களப் பணிப்பாளர் ஆர். விஸ்லிங்கம், நீயூக் கிறியர்ஸ் பவுண்டேசன் நிறுவனத்தின் பணிப்பாளர் டேவ் மௌரிஸ், நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் கு.ரவிக்குமார் ஆகியோர் இந்தச் செயலமர்வை நடத்தினார்கள்.

அபிவிருத்திக்கான விவரங்கள், முதலீட்டு மூலவள விவரங்கள் ஆகியவற்றைத் திரட்டும் வேலைத் திட்டங்கள் மாவட்ட மட்டத்தில் எதிர்வரும் திங்கட் கிழமை இடம்பெறவுள்ளது. அதற்கான பயிற்சிகள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இவை மூன்று மாத காலத்தினுள் இடம்பெறும் எனவும் அங்கு கூறப்பட்டது. (த-14)

# இ.போ.ச. சாரதிகளுக்கான பயிற்சிப் பாடசாலை திறப்பு

யாழ்ப்பாணம், மே 7

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் அலுவலகத்தில் இலங்கைப் போக்குவரத்துச்சபைச் சாரதிகளுக்கான பயிற்சிப்பாடசாலை நேற்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

சபையின் பிராந்தியப் பொது முகாமையாளர் எஸ். கேதீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழில் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ.சந்திரசிறி ஆகியோர் பயிற்சிப் பாடசாலையை நாடா வெட்டித் திறந்து வைத்தனர். முன்னதாக அலுவலகத்தின் நுழைவாயிலில் இருந்து விருந்தினர்கள் ஊழியர்களால் அங்குள்ள விநாயகர் ஆலயத்துக்கு அழைத்து செல்லப்பட்டனர். அங்கு விசேட பூசைகளில் கலந்து கொண்ட பின்னர் முதலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாடசாலையின் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்ததை அடுத்து ஆளுநரும் பாடசாலையைத் திறந்து வைத்தார். (த-7)

# கர்நாடக இசைத் திருவிழா துரையப்பா விளையாட்டரங்கில்

யாழ்ப்பாணம், மே 07

வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு நடத்தும் மாபெரும் கர்நாடக இசைத்திருவிழா மே மாதம் 21 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

வட மாகாண ஆளுநரின் வழிகாட்டலில் இந்த இசைத் திருழா இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி முல்லைத் தீவு, யாழ்ப்பாணம் ஆகிய 5 மாவட்டங்களிலும் உள்ள கர்நாடக இசைக் கலைஞர்கள் பங்கு கொள்ளவுள்ளனர். அத்துடன் வாத்தியக் கலைஞர்களும் இதில் பங்கு பற்றித் தியாகராஜரின் பஞ்சரத்தினக் கீர்த்தனையை வழங்கவுள்ளனர்.

வடக்கின் தனித்துவமான இசை மரபுக்கு முக்கியத்துவம் கொடுத்து மரபு சார்ந்த பண்பாட்டு விழுமியங்களைப் பேணி அதனூடாக உயர்ந்த இரசனை உணர்வு கொண்ட ரசிகர்களை உருவாக்கும் நோக்கில் இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பணிப்பாளர் திருமதி ஸ்ரீதேவி அறிவித்துள்ளார். (த-311)

## தொழில் அபிவிருத்தி...



சேவையை விஸ்தரிக்க: கோண்டாவில் இ.போ.ச. அலுவலகத்தில் சாரதிகளுக்கான பயிற்சிப் பாடசாலையை ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி திறந்து வைக்கிறார். அருகில் பாரம்பரிய கைத்தொழில் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா காணப்படுகிறார். (த-7)

# மாணவனை மோதிவிட்டுத் தப்பினார் முன்னாள் அதிபர்

தென்மராட்சி மே 7

பாடசாலையிலிருந்து சைக்கிளில் வீடு சென்ற மாணவனை மோட்டர் சைக்கிளினால் மோதி விட்டுத் தன்னைக் காட்டிக் கொடுக்கக்கூடாது என எச்சரிக்கை செய்துவிட்டுச் சென்றார் முன்னாள் அதிபர் ஒருவர்.

இந்தச் சம்பவம் கடந்த 4 ஆம் திகதி பிற்பகல் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மிக அண்மையில் இடம்பெற்றது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவனான தருமலிங்கம் நிரஞ்சன் (வயது 13) என்னும் மாணவன் காயமடைந்த நிலையில் ஏனைய மாணவர்களால் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டுச் சிகிச்சையளிக்கப்பட்டது.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை ஒன்றில் கடமையாற்றி கடந்த வருடம் இளைப்பாறிய அதிபரே இவ்வாறு மாணவனை மோதிவிட்டுச் சென்றதாகச் தெரிவிக்கப்பட்டது. (த207)

# சமய அறிவுப் போட்டி

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சுதுமலை அம்பாள் விளையாட்டுக் கழகத்தினால் வருடா வருடம் நடத்தப்பட்டு வரும் சைவ சமய அறிவுப் போட்டியை இம்முறையும் நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்படி கழகம் மேற்கொண்டுள்ளது.

மாணவர்கள் மத்தியில் சைவ சமயத்தை வளர்க்கும் நோக்குடன் மேற்படி கழகத்தினால் நடத்தப்படும் சமய அறிவுப் போட்டி பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சுதுமலை சிதம்பர பாரதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (த-115)

# தமிழ்த்தினப் போட்டி இன்று

யாழ்ப்பாணம்,மே7

யாழ். கல்வி வலயத்தின் தமிழ்த்தினப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றில் நடைபெறவுள்ளன.

கோட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் யாழ். கல்வி வலயப் போட்டிகளில் பங்கு கொள்ளவுள்ளனர். இந்தப் போட்டிகளில் தெரிவாகும் மாணவர்கள் மாவட்ட, மாகாண, தேசிய ரீதியான போட்டிகளில் பங்கேற்க முடியும்.

இப் போட்டிகளில் வாசிப்பு, ஆக்கத் திறன், பேச்சு, பாவோதல், தனி இசை, தனி நடனம், நாட்டார்பாடல், மேடை நாடகம், வில்லுப்பாட்டு, விவாதம், தமிழ் வினா விடை, முஸ்லிம் நிகழச்சி ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

போட்டியில் பங்குபெறும் மாணவர்கள் தங்களுக்குரிய சுட்டெண்களை அட்டையில் தெளிவாக எழுதி அணிந்து வருமாறு யாழ். உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் தெரிவித்தார். (த-311)

# விக்கிரகம் திருட்டு

யாழ்ப்பாணம்,மே7

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திர சேகரப்பிள்ளையார் ஆலயத்தின் கொடித்தம்பத்தில் அமைந்துள்ள பிள்ளையார் விக்கிரகம் மற்றும் பெறுமதியான குத்து விளக்குகள் என்பன நேற்று முன்தினம் இரவு திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த சில நாள்களாக கல்வியங்காட்டுப் பகுதியில் உள்ள ஆலயங்களில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவது அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மக்களை ஆட்டிப்படைக்கும் குடிதண்ணீர்

பெருநிலப்பரப்பான வன்னிப் பகுதியில் வசிக்கின்ற மக்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வார்த்தைகளால் சொல்ல முடியாது.

நாளாந்தம் பல துன்பங்களை அனுபவித்து வருகின்ற மீளக்குடியமர்ந்த மக்கள் பயன்படுத்தும் குடிதண்ணீருக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. பல மைல் கடந்து சென்று ஒவ்வொரு நாளும் குடிதண்ணீரை எடுத்து வருகின்ற அந்தப் பகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் கேட்பவர்களுக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால் பார்ப்பவர்களுக்கு என்றைக்குமே அவர்கள் மனத்தில் இருந்து விலக்கி விடமுடியாத அளவு வன்னி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை பாதிப்பினை ஏற்படுத்துகிறது.

ஒரு தடவையாவது அந்தப் பகுதி மக்களுக்கு முடிந்தால் சிறிய அளவாவது உதவி செய்ய முன்வருவார்களா? பாலைவனப் பகுதியில் தண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவுவது போல இப்பொழுது வன்னியில் நிலவுகிறது. வன்னி நகரப் பகுதிகளை விட்டு உள்ளே சென்று கிராமப் புறங்களைப் பாருங்கள் மாற்றுவதற்கு உடையில்லாமல் மூன்று வேளையும் சாப்பிடுவதற்கு போதுமான அளவு உணவு இல்லாமல் தங்குவதற்கு விசாலமான இருப்பிடம் இல்லாமல் குளிப்பதற்கும் கழிப்பதற்கும் தண்ணீர் இல்லாமல் இவர்கள்படும் பாடு சொல்லொனாத் துயரத்தைத் தருகின்றது.

அரசினால் மேற்கொள்ளப்படும் உதவிகள் முழுமையாக அந்தப் பகுதி மக்களுக்குக் கிடைப்பதில்லை. தொண்டு நிறுவனங்கள் செய்கின்ற உதவிகள் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. எப்படி அவர்கள் தமது வாழ்நாளினை நகர்த்த முடியும்? யுத்தம் நடைபெற்ற காரணத்தினால் இந்த அமைப்புக்களிடம் உதவி கேட்டு நிற்கின்றார்கள்.

> **வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தின் பின்னர் அங்கு குடிதண்ணீர் பிரச்சினையும் அந்த மக்களை வாட்டி வதைக்கின்றது. இதனால் அங்கு வாழும் மக்கள் பெரும் அவல நிலையில் உள்ளனர்.**

ஏனெனில் வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தில் எல்லாவற்றையும் இழந்து விட்டனர். இழப்பதற்கு இனிமேல் ஒன்றுமே இல்லாத வேளையில் தான் உதவி கேட்டு நிற்கின்றார்கள். ஒரு காலம் வன்னி மக்கள் வாழ்ந்த வாழ்வைப் பார்த்துப் பொறாமைப்பட்டவர்களும் இருக்கிறார்கள். அந்தளவுக்கு வன்னிப் பகுதியில் வாழ்ந்த மக்கள் விவசாயச் செய்கையில் ஈடுபட்டுத் தமது பொருளாதார வசதிகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுது மீண்டும் அதே நிலைக்கு மீள முடியாமல் யுத்தம் தந்த பரிசு அநாதரவாக ஆக்கிவிட்ட கொடுமை எந்த நாட்டிலும் இடம்பெற்றதாக வரலாறு இல்லை. அதாவது யுத்தம் நடைபெற்ற காலங்களில் கஷ்டங்கள் நிலவும். ஆனால் மீண்டும் யுத்தம் முடிவடைந்து விடின் அந்த மக்கள் தமது வளத்தைப் பெருக்கிக் கொண்டதான வரலாறு உலக நாடுகளில் இடம்பெற்றுள்ளது.

ஆனால் எமது நாட்டிலே தமிழ் மக்கள்தான் யுத்தம் முடிவடைந்தும் இன்னும் மீள முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அந்த மக்களைத் தண்ணீர்ப் பிரச்சினையும் சேர்த்துப் படாதபாடு படுத்துகிறது. அதாவது ஒழுங்கான குளிப்பில்லாமல் இருப்பதால் தொற்று நோய்கள் பரவக் கூடியதான சாத்தியக் கூறுகள் அதிகம் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

வன்னியில் கிராமப் புறங்களில் வசிக்கின்ற மக்களின் வீட்டுக் கிணறுகள் வெட்டிய நிலையில் சிமெந்து கொண்டு பாதுகாப்பாகக் கட்டாத நிலையில் பயன் படுத்தப்பட்டு வருகின்றன.

இதனால் மழை பெய்கின்ற காலங்களில் மண் கரைந்து கிணற்றினுள் செல்வதால் அந்தத் தண்ணீர் மாசடைகின்றது. வேறு தண்ணீர் இல்லாத நிலையில் அந்தத் தண்ணீரையே மக்கள் வேறு வழியில்லாமல் பயன்படுத்துவதாகத் தெரிவிக்கின்றனர்.

அந்தக் கிணற்றுத் தண்ணீரை குளிக்கப் பயன்படுத்துவதுடன் வடிகட்டிக் குடிக்கவும் பயன்படுத்தி வருகின்றனர்.

நல்ல குடிதண்ணீர் எடுப்பதற்கு பல மைல் தூரம் நடந்து சென்று வருகின்றபோது அரைவாசி நாள் எடுப்பதால் அந்தப் பகுதி மக்கள் தொழிலினைச் செய்ய முடியாதுள்ளதாகவும் அடுத்த கட்ட நகர்வு பற்றி சிறுதுளி கூடக் கவனத்தில் எடுக்கமலும் இருக்கின்றனர்.

பல நிறுவனங்களில் இருந்து வந்து பெயரளவுக்குப் பதிவுகளை மேற்கொண்டு விட்டு செல்கின்றனரே ஒழிய அவர்களால் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. தேவையான அடிப்படை உதவிகளைச் செய்யாமல் பல அரச சார்ப்பற்ற நிறுவனங்கள் வந்து ஒரே உதவிகளைச் செய்து விட்டுப் போவதால் ஏனைய தேவைகளுக்கு பெரும் கஷ்டம் நிலவுகிறது. அதாவது பெற்சீற், துவாய், வாளி, பாய், தறப்பாள் போன்ற பொருள்களை மட்டும் அடிக்கடி கொடுப்பதால் அந்த மக்களின் முக்கியமான தேவைகளை கவனத்தில் எடுப்பதாக இல்லை.

வன்னியில் யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் கழியும் நிலையில் பல நல்ல தண்ணீர்க் கிணறுகள் தூர்ந்து போயுள்ளன.

இந்த மக்களுக்கான நல்ல தண்ணீர் கிடைப்பதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கத் தொண்டு நிறுவனங்கள் முன்வருவார்களா என எதிர்பார்த்து இந்த மக்கள் காத்திருக்கின்றனர்.

**குமார்**

## கரித்தாஸ் நிறுவனத்தால் வாழ்வாதாரத் திட்டங்கள்

பூநகரி, மே 7

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி முட்கொம்பன் கிராம மக்களுக்கு கரித்தாஸ் நிறுவனத்தால் வாழ்வாதாரத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி கிராமத்தில் கரித்தாஸ் நிறுவனம் 90 குடும்பங்களை தெரிவு செய்து நீர் இறைக்கும் இயந்திரம் வழங்குதல், ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பசுவளர்ப்பு, வியாபாரம் போன்ற செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த தலா ஒரு குடும்பத்துக்கு 30,000 பெறுமதியான திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. (எ-406)


# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்.

தோற்றம் 07 ★ 02 ★ 1983

மறைவு 26 ★ 03 ★ 2011



## அமரர் சம்பந்தன் சக்திதரன்

(ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

கடந்த 26.03.2011 அன்று இறைபதமெய்திய எங்கள் குடும்ப விளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.05.2011) சனிக்கிழமை கீரிமலையிலும் நாளை மறுதினம் (09.05.2011) திங்கட்கிழமை வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எமது இல்லத்திலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"தயா பவனம்",
குப்பிளான் தெற்கு,
குப்பிளான். (3904)

குடும்பத்தினர்.


## ஆசிரியர்களை ஆளுநர் சந்திக்கிறார்

கிளிநொச்சி, மே 7

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் தற்போது தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களையும், கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளிகளில் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களையும் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி நாளை மு.ப. 10 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் சந்திக்கவுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஆராயப் படவுள்ளதால் அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களையும், முன்பள்ளி ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா அறிவித்துள்ளார். (எ)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அப்புத்துரை இராஜேஸ்வரி
(கொக்குவில்)

மலர்வு: 04.01.1930
உதிர்வு: 18.04.2011

திதி: 08.05.2011

எமக்காகச் சிரித்து எமக்காக அழுது
எமக்காய் வாழ்ந்து உறவுகளை அணைத்து
உத்தமியாய் வாழ்ந்து தெய்வத்திடம்
சங்கமமான எம் அன்புத் தாயே
எம் உயிர் உள்ளவரை உம் நினைவு நீங்காது

இல.60, தலங்காவல்,
திருநெல்வேலி.

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்

# ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் மலர்வு: 18.02.1917
விண்ணில் உதிர்வு: 17.04.2010
திதி: 07.05.2011



அமரர் இராசம்மா செல்லத்துரை

ஆண்டோன்று சேன்றதம்மா
அன்னையே உன் நினைவில்
ஈண்டிருந்து கலங்குகின்றோம்
அம்மா நீ வாராயோ
பூண்டதோர் புண்ணியத்தால்
பொன்னுலகு சென்றணைந்தாய்
தூண்டு சுடரனை யாவும்
பாரில் சாந்தி பெறுக

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

அம்மாவின் நினைவில் வாடும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(48,21,25)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகரசபைப் பணியாளர் மீது தாக்கு; சந்தேகத்தில் மூவர் கைது

மன்னார், மே 7

மன்னார் நகரசபையில் சுத்திகரிப்புப் பணியாளராக இரவு நேரக் கடமையில் ஈடுபட்டிருந்த நிரந்தரத் தொழிலாளியான பத்திநான் (வயது 53) என்பவர் கடந்த புதன்கிழமை இரவு 8.30 மணியளவில் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது மன்னார் தனியார் பேருந்துத் தரிப்பிடத்துக்கு அருகில் உள்ள உணவகத்துக்கு அருகில் வைத்து கடும் மது போதையில் வந்த 5 பேரினால் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்ட நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவத்தினைக் கண்டித்து மன்னார் நகர சபையின் பணியாளர்கள் பணிப் பகிஷ்கரிப்பினை மேற்கொள்ள விருந்தனர்.

எனினும் மன்னார் நகர சபையின் தலைவர் சந்தான்பிள்ளை ஞானப்பிரகாசம் மற்றும் உறுப்பினர்கள் பணியாளர்களுடன் பேச்சுவார்த்தையினை நடத்தியதோடு சம்பவத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையினை எடுப்பதாக அவர்களுக்கு உறுதியளித்தனர். பின்னர் இந்த விடயத்தை மன்னார் நகரசபையின் தலைவர் சந்தான்பிள்ளை ஞானப்பிரகாசம் மன்னார் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

மன்னார்ப் பொலிஸார் மேற்படி சம்பவத்தில் ஈடுபட்டவர்களை அடுத்தநாள் வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு முன் கைது செய்வதாக உறுதியளித்தனர். பின் மன்னார்ப் பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின் போது சம்பவத்தில் ஈடுபட்ட ஐவரில் 3 பேரை கைது செய்துள்ளனர்.

ஏனையவர்களைத் தேடிவருகின்றனர். கடந்த 4 மாதங்களுக்கு முன்னரும் மன்னார் நகரசபையின் பணியாளர் ஒருவர் வர்த்தகர் ஒருவரினால் தாக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (க-601)

# வறுமையுடனும் போராடும் முல்லை. மாவட்ட மக்கள்

கிளிநொச்சி, மே 7

அளம்பில், செம்மலை, உப்புமாவடிப் பகுதிகளில் வாழும் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியான நிலையிலும் அந்தப் பகுதிகளில் தற்காலிக வீடுகள் கூட அமைத்துக் கொடுக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

வெறுங்கையுடன் சென்ற மக்கள் தற்போதும் வறுமையுடனேயே வாழ்கின்றனர்.

கடல் வளம் அவர்களின் முக்கிய வாழ்வாதாரமாகக் காணப்படுகின்றது. ஆனால் அங்கே வாடிகள் அமைக்கப்பட்டு பெரும்பான்மை இனத்தவர்களால் கடல் வளம் சுரண்டப்பட்டு வருகின்றது. ஆனால் சொந்த ஊர் மக்களால் தொழில் செய்ய முடியவில்லை.

மேலும் முல்லை வைத்தியசாலை இராணுவ முகாமாகவே காணப்படுகிறது. மக்கள் தமது அடிப்படை சுகாதார வைத்திய உதவிகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வாறு உரிமைகள் யாவற்றையும் இழந்து தொழிலுமின்றி வறுமையில் இவர்கள் வாடுகின்றனர்.

எனவே மக்களின் பிரதிநிதிகள் மற்றும் அக்கறையுள்ளவர்கள் விரைந்து தமது உரிமைகளைப் பெற்றுத்தர ஆவன செய்யுமாறு கிராம வாசிகள் கேட்டுள்ளனர். (க-8)

# மன்னாரில் ஆங்கில புத்தகக் கண்காட்சி

நானாட்டான், மே 7

மன்னார் மாவட்டத்தில் ஆங்கில அறிவை மேம்படுத்தும் முகமாக இன்று காலை 9 மணிக்கு நானாட்டான் பிரதேச செயலக மண்டபத்தில் ஆங்கில புத்தகக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

நானாட்டான் பிரதேச செயலாளர் மற்றும் ஊழியர்களுடன் 'டயோரியர் கவுஸ் எடிகேசன் ரெக்னோலோஜி' நிறுவனமும் இணைந்து இந்தப் புத்தகக் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளார்கள்.

நானாட்டான் பிரதேச செயலாளர் பி.எ.சந்திரஐயா தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் புத்தகக் கண்காட்சியை மன்னார் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் ஆரம்பித்து வைப்பார்.

சிறப்பு விருந்தினராக சிரேஷ்ட கல்வி ஆலோசகர் ரிச்சாட் நிக்ஷனும், கௌரவ விருந்தினர்களாக மன்னார் மாவட்ட கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதேச செயலாளர்களும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

மன்னார் மாவட்டத்தில் முதல் தடவையாக நடைபெறும் இந்தப் புத்தகக் கண்காட்சி இரண்டு நாள்கள் நடைபெறுவதுடன் புத்தக விற்பனையும் இடம்பெறவுள்ளது. (க-86)

**திறந்த வெளியில்...**



பாதுகாப்பு எப்போது?: கிளிநொச்சி, கறுக்காய்த்தீவு மகாவித்தியாலயம் சுற்றுச்சுவர் எதுவும் இல்லாத நிலையில் திறந்த வெளியில் பாதுகாப்பின்றிக் காணப்படுகின்றது.

# நகரசபை நிர்வாகத்தில் பல முறைகேடுகள்; பெரும் அவதியில் வவுனியா நகர மக்கள்

## நாடாளுமன்றத்தில் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

கொழும்பு, மே 7

சமீபகாலமாக நகரசபை நிர்வாகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பல்வேறு முறைகேடுகள் மற்றும் நிர்வாகத் தாமதங்களால் வவுனியா நகர மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர். இவ்வாறு நாடாளுமன்றத்தில் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

கடந்த 28.04.2011 அன்று நகர சபைச் செயலாளர் வசந்தன் அவர்களால் நகரசபைக்கு வெளியில் வேப்பங்குளம் என்னுமிடத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளை மீள்சுழற்சி செய்வதற்கான இயந்திர நிர்மாண ஆரம்ப நிகழ்வில், செயலாளருக்கும் நகரசபை உறுப்பினரான எஸ்.எஸ்.சுரேந்திரன் அவர்களுக்கும் இடையில் உறுப்பினர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படாமை குறித்து சர்ச்சை எழுந்துள்ளது.

இந்தச்சர்ச்சையைத் தொடர்ந்து 03.04.2011 அன்றிலிருந்து நகர சபை உத்தியோகத்தர்கள் சிற்றூழியர்கள் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளதுடன் நகர சபை நுழைவாயிலும் பூட்டப்பட்டுள்ளது. மேலும் நகரத்தின் மையத்திலுள்ள பொது மலசல கூடங்கள், குளியலறைகள் என்பனவும் பாவனைக்குத் தடை செய்யப்பட்டுள்ளதுடன் பொது நூல்நிலையமும் பூட்டப்பட்டுள்ளது. நகரத்தில் உள்ள குப்பை கூளங்கள் அகற்றப்படாமையினால் வர்த்தக நிலையங்களின் வாயில்களில் அசுத்தங்கள் நிறைந்து துர்நாற்றம் வீசுகின்றது.

இதன் பின்னணியில், உள்ளூராட்சி நிர்வாகத்தை நெறிப்படுத்தும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்கள் செயற்படுவதனையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இவரது தூண்டுதலின் பேரில் ஒருசில ஊழியர்கள் கடைகளைப் பூட்டி ஆதரவு வழங்குமாறு வர்த்தகர்களை வற்புறுத்துகின்றனர். நகரசபை உறுப்பினர் எஸ்.எஸ். சுரேந்திரன் இந்தச் சம்பவத்தில் தவறிழைத்திருக்கும் பட்சத்தில் கட்சி அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கட்சி மீது நம்பிக்கையில்லையாயின் காவல்துறையை அல்லது நீதிமன்றத்தை நாடியிருக்க வேண்டும். அதனை விடுத்து தமது கையில் அதிகாரத்தை எடுத்து ஒருசில அதிகாரிகள் செயற்படுவதானது மக்களுக்குச் செய்யும் துரோகம்.

ஏற்கனவே கீழ்க்காணும் விடயங்கள் தொடர்பாக நகரசபை மற்றும் உள்ளூராட்சி அதிகார சபை அலுவலகத்தால் எதுவித தீர்வும் எட்டப்படாத நிலையில் மேற்குறித்த சம்பவம் இங்கு விஸ்வரூபம் எடுத்துள்ளது.

வவுனியா நகரசபைக்கு அதிகூடிய வருமானத்தை ஈட்டிக் கொடுத்த, ஈட்டிக்கொடுத்து வந்த வவுனியா சந்தை சுற்று வட்டத்துக்குள் அமைந்துள்ள மாட்டு இறைச்சிக்கடை, ஆட்டு இறைச்சிக்கடைகளை எவ்வித கேள்விப்பத்திரமும் கோராமல் தனி நபர் ஒருவருக்கு 2009 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை மிகக்குறைந்த குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இதனால் நகரசபைக்கு லட்சக் கணக்கில் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இதே வேளையில் குருமன்காடு சந்தையில் அமைந்துள்ள மாட்டிறைச்சிக்கடை பகிரங்கக் கேள்விக்கு விடப்பட்டு வருடாந்த 29 லட்சம் ரூபாய்க்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இதனைப் போன்றே பூந்தோட்ட சந்தையில் அமைந்துள்ள மாட்டிறைச்சிக்கடை பகிரங்க கேள்விப்பத்திரம் விடப்பட்டு ஆண்டுக்கு 19 லட்சம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேற்கண்ட இரண்டு இடங்களையும்விட வவுனியா சந்தைக்கு மூன்று முதல் நான்கு மடங்குவரை கூடுதல் வருமானம் கிடைக்கும்.

டெங்கு ஒழிப்பு செயற்றிட்டத்திலும் மோசடி இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது. இதற்காக ஆளுநரால் நகரசபைக்கு எண்பத்திரண்டு லட்சம் நிதிவழங்கப்பட்டுள்ளது. ஆனால் பதினைந்து மாதமாகியும் இதுவரை இதற்கான செலவுக் கணக்கோ அல்லது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்ததோ சபைக்கு அறிவிக்கப்படவில்லை.

கோயில்குளத்தில் பாலர் பாடசாலை கட்டி முடிக்கப்பட்டதாக சபையில் பணக்கொடுப்பனவுக்கான அனுமதி பெறப்பட்டு எவ்.ஜே.வி. என்னும் ஒப்பந்ததாரருக்கு ஒரு லட்சத்து எழுபத்தியேழாயிரத்து நூற்று எண்பது ரூபாய் அறுபத்தியாறு சதம் (177,180.66) வழங்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. ஆனால் அந்த இடத்தில் பாலர் பாடசாலை கட்டப்பட வில்லை என்பது கவனிக்கத்தக்கது.

வீதிகளில் மின்விளக்கு பொருத்துவதற்கு வடமாகாண ஆளுநரால் ரூ.5.5. மில்லியன் வழங்கப்பட்டது. இதற்கான கணக்கறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படவில்லை. வேலை முன்னேற்றம் தொடர்பாகவும் தரவு இல்லை.

வவுனியா குளத்தினை அழகுபடுத்துவதற்கு அரச அதிபரால் ரூ 75 லட்சம் வழங்கப்பட்டது. குளம் அழகுபடுத்தப்படவும் இல்லை. இதற்கான கணக்கறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படவும் இல்லை.

இந்த விடயங்களை அம்பலப்படுத்தி நீதியான தீர்வைப் பெற்றுக்கொள்வதற்காகவும் நகரசபையின் வளர்ச்சிக்காகவும் சபையில் உள்ள ஏனைய ஏழு அங்கத்தவர்களுடன்



தலைமை தாங்கி திரு.எஸ்.எஸ். சுரேந்திரன் செயற்பட்டதால்தான் அவருக்கு எதிராக உயர் அதிகாரிகள் தங்களது அதிகாரத்தைப் பயன்படுத்தி உண்மையை விளங்கிக் கொண்ட நேர்மையான உண்மையான உத்தியோகத்தர்களையும் ஊழியர்களையும் தங்களின் பிடிக்குள் வைத்துக்கொண்டு பணிப்புறக்கணிப்பினை மேற்கொள்ளுமாறு தூண்டிவிட்டுள்ளனர். இதில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் பங்கு முக்கியமானதாகும்.

கடந்த சில தினங்களாக நகரசபையில் இடம்பெற்று வரும் பணிப்புறக்கணிப்பின் பின்னால் நின்று ஊழியர்களைத் தூண்டிவிடும் சம்பந்தப்பட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவியாணையாளரின் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்தி இடம்பெற்ற ஊழல் மோசடிகளை விசாரிப்பதற்கான விசாரணைக்குழுவை நியமித்து இது தொடர்பான நிலையை மக்களுக்குத் தெளிவுபடுத்துமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன் [illegible]று தெரிவித்தார் சி[illegible]னந்தன் எம்.பி. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத் தொழிலாளர்களுக்கு மாத இறுதிக்குள் சம்பள உயர்வு

## சங்கப் பொதுச் செயலாளர் வேலாயுதம் நம்பிக்கை

நுவரெலியா,மே7

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பான பேச்சுக்கள் இம்மாத இறுதிக்குள் முடிவடைந்து தொழிலாளர்களுக்கு திருப்தி தரக்கூடிய சம்பள உயர்வு கிடைக்கும் என இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கே.வேலாயுதம் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் முதலாளிமார் சம்மேளனத்திற்கும் தொழிற் சங்கத்தினருக்கும் இடையிலான இரண்டாம் கட்டப் பேச்சு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும் என தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதனையடுத்து முதலாளிமார் சம்மேளனத்தினர் தம்முடன் கொண்டுவந்த சம்பள அறிக்கையை முன்வைக்கவில்லை.

ஏனைய முதலாளிமார்களுடன் இதுதொடர்பில் பேசிவிட்டு வந்து திருப்திகரமான பதிலை முன்வைப்போம் என உறுதியளித்தனர்.

மூன்றாம் கட்டப் பேச்சு எதிர்வரும் 15 ஆம் திகதிக்குப் பின் இடம்பெறும்- என்றார். (ச)

## நல்ல ஆரம்பம்...



யூ.என்.ஹபடாட் நிறுவனத்தின் அனுசரணையுடன் சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையில் எக்ஸ்ரேப் பிரிவு ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் யூ.என்.ஹபடாட் நிறுவனத்தின் தேசிய திட்டமிடல் முகாமையாளர் எம்.பஹ்மி, சாய்ந்தமருது மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ரி. இப்றாஹிம் உட்பட வைத்தியசாலை அபிவிருத்திக்குழுச் செயலாளர் றியாத் ஏ.மஜீத் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

# யானைகளிடமிருந்து மக்களைக் காக்க பாதுகாப்பு வேலிகள் அமைக்கப் பணிப்பு

மட்டக்களப்பு,மே7

மட்டக்களப்பு மாவட்டத்தில் யானைகளின் தாக்குதல்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு பாதுகாப்பு வேலிகளை உடனடியாக அமைக்குமாறு வனஜீவராசிகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சந்திரவன்ச பத்திராஜ மட்டக்களப்பு அரச அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

வன ஜீவராசிகள் மற்றும் கமநல சேவைகள் அமைச்சின் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் அமைச்சர் சந்திரசேன தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா மட்டக்களப்பு மாவட்டத்தில் யானைகளின் தொல்லை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. கடந்த மாதம் 3 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என்பதையும் சுட்டிக்காட்டி 95 கிலோமீற்றர் தூரத்துக்கு யானைகள் பாதுகாப்பு வேலி அமைப்பதற்கான பொருள்கள் வந்து சேர்ந்துள்ள போதிலும், வேலி அமைப்பதற்கான ஒப்பந்தங்கள் கோரப்படாத நிலையில் அவை தேங்கிக்கிடக்கின்றன. இந்த வேலி அமைக்கும் பணியை கமநல சேவைகள் மற்றும் வனஜீவராசிகள் அமைச்சின் கவனத்துக்கு கொண்டுவந்து துரிதப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

இந்தக்கூட்டத்தில் கலந்து கொண்ட வனஜீவராசிகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சந்திரவன்ச பத்திராஜ வேலிகள் அமைப்பதற்கான ஒப்பந்தத்தை கோரும் அதிகாரம் அரச அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளது என்று இதற்குப் பதிலளித்தார்.

இதனையடுத்து மட்டக்களப்பு அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்துடன் தொலைபேசியூடாகத் தொடர்புகொண்ட பணிப்பாளர் நாயகம் ஒப்பந்தங்கள் கோரல் தொடர்பான அறிவுறுத்தல் எழுத்து மூலம் அனுப்பி வைக்கப்படும். இந்தநிலையில் வேலிகள் அமைப்பதற்குரிய பணிகளை ஆரம்பிக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார். (ச)

# தமிழ்மொழியை சிறப்பாக வளர்க்கும் இலங்கைத் தமிழ், முஸ்லிம் மக்கள்

கண்டி,மே7

தமிழ் நாட்டில் பிறந்து அங்கே வாழ்ந்து தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களைவிட இலங்கைத் தமிழ், முஸ்லிம் மக்கள் தமிழை ஒரு படி மேலாக வளர்க்கின்றனர். இவ்வாறு தெரிவித்தார் இந்தியா, பாண்டிச்சேரி பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரிப் பேராசிரியர் குறிஞ்சி வேந்தன்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை கண்டி விவேகானந்தா தமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

தமிழ்மொழி அழிக்கப்பட்டால் நாம் அகதி ஆகிவிடு வோம். அகதி அந்தஸ்திலிருந்து எம்மைக் காக்கும் கேடயமே இந்தத்தாய் மொழிதான்.

1790 ஆம் ஆண்டில் இந்தியாவில் ஏற்பட்ட பெரும் பஞ்சத்தையடுத்து தமிழர்கள் தமிழகத்திலிருந்து இலங்கை, மலேசியா, மொரிசியஸ்,பிஜிதீவுகள் போன்ற இடங்களிலுள்ள மலைகளில் கோப்பி, கொக்கோ, தேயிலை போன்ற பயிர்களை உற்பத்தி செய்ய கப்பல் மூலம் கொண்டு செல்லப்பட்டனர். இந்த மக்கள் தமது கலை, கலாசாரம், பாரம்பரியம், மொழி போன்றவற்றைப் பாதுகாத்து வருகின்றனர் - என்றார். (ச)

**யா/ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்**

**பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்**

மேற்படி பொதுக்கூட்டம் நாளை (08.05.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். இப்பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்ற அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்.

# கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட இருவர் கைது

அக்கரைப்பற்று பிதேசத்தில் கஞ்சா விற்னையில் ஈடுபட்ட இருவரை நேற்று முன்தினம் வியாழக்கிழமை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவர்களை கைது செய்யும் போது இவர்களிடமிருந்து 150 கிராம் கஞ்சா மீட்டதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (ச)

# வெடிபொருள்கள் மீட்கப்பட்டன

மட்டக்களப்பு, வாகரை மாந்தோட்டம் காட்டுப்பகுதியிலிருந்து வெடிபொருள்கள் சில பொலிஸாரால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது, மறைத்து வைக்கப்பட்டிருந்தநிலையில் இந்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டன. ஒரு கைக் குண்டு, மூன்று மோட்டார் குண்டுகள், மூன்று மிதிவெடிகள், வெடி மருந்துவகைகள் என்பனவே பொலிஸாரால் மீட்கப்பட்டன.

**காரைநகர் பிரதேச சபை**

**கேள்வி அறிவித்தல் - 2011**

பின்வரும் வேலைகளுக்குப் பொருத்தமான அட்டவணையில் காட்டப்பட்டவாறான (ICTAD) தகுதி உடைய ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் திகதி - 09.05.2011 - 23.05.2011 பி.ப. 2 மணி வரை
2. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி - 24.05.2011 நண்பகல் 12 மணிவரை
3. கேள்விகள் திறக்கப்படும் திகதி - 24.05.2011 பி.ப. 12.30 மணி (கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்களோ அல்லது பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்)
4. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் அரக்கு முத்திரையிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயருடன் அந்த வேலைக்கான கேள்வி என எழுதி. ''செயலாளர், காரைநகர் பிரதேசசபை, காரைநகர்'' என முகவரியிட்டு, பதிவுத் தபாலிலோ அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாகவோ சமர்ப்பிக்க முடியும். அதன் பிரதியை ''பிரா/உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரா/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு நேரடியாகவோ, தபால் மூலமோ சமர்ப்பிக்க வேண்டும்.
5. மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

| இல. | வேலையின் விவரம் | பதிவுத்தரம் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்க முடியாதது | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | கேள்விப் பத்திரம் | VAT வரி 12 % | NBT வரி 2% |
| 01 | காரைநகர் சுப்பிரமணியம் வீதி புனரமைப்பு | C9/M8 | 10000.00 | 1000.00 | 120.00 | 20.00 |

இரா. லோகநாதன்,
செயலாளர், பிரதேச சபை,
காரைநகர்.

(சி/578230)



**அராலி ஆவரம்பிட்டி**

**ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்**

**வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2011**

அம்பிகை அடியார்களே!

எமது தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் கர வருஷம் சித்திரை மாதம் 30 ஆம் நாள் (13.05.2011) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வைகாசி 07 ஆம் நாள் (21.05.2011) சனிக்கிழமை பெரும் பொங்கல், கொடி இறக்க வைபவங்களுடன் நிறைவடைகின்றது.

**நாளாந்த உற்சவ நேரம்:**

**பகல் உற்சவம்**
- ★கிரியைகள் ஆரம்பம் - காலை 8.30 மணி
- ★வசந்த மண்டபப் பூசை - மு.ப.10.30 மணி
- ★திருவிழா நிறைவு - பி.ப. 1.00 மணி

**இரவு உற்சவம்**
- ★வசந்த மண்டபப் பூசை - மாலை 6.30 மணி
- ★திருவிழா நிறைவு - இரவு 9.30 மணி

**அன்னதானம்**

அனைத்துத் திருவிழா நாள்களிலும் நண்பகல் அன்னதானம் நடைபெறும்.

**மகா சங்காபிஷேகம்**

வைகாசி 16 ஆம் நாள் (30.05.2011) திங்கட்கிழமை மகா சங்காபிஷேகம் நடைபெறும். பகல் அபிஷேகத்தைத் தொடர்ந்து நண்பகல் அன்னதானம் நடைபெறும்.

மாலை அம்பாள் எழுந்தருளி வீதியுலா வந்து அடியார்களுக்குத் திருவருள் பாலிப்பார்.

வசந்த மண்டபப் பூசை - மாலை 6.30 மணி
திருவிழா நிறைவு - இரவு 9.30 மணி

**அறிவித்தல்**

மஹோற்சவ காலங்களில் தற்காலிக கடைகள் அமைக்க விரும்புவோர் 09.05.2011 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆலய முன் வீதியில் சமுகம் தந்து அன்றைய தினமே உற்சவ காலங்களுக்கான முழு வாடகைப் பணத்தையும் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுத் தங்கள் இடங்களை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

ஆலய பரிபாலன சபை.
ஆவரம்பிட்டி, அராலி.

(3740)(48,21,23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பற்றில்லாத பச்சோந்திகளாலேயே தமிழரின் விடுதலை தாமதமடைகிறது

## மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. அரியநேத்திரன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மே 7

தமிழர்களில் சிலர் தங்களைத் தலைவர்களாக நினைத்துக்கொண்டு எதுவித இனப்பற்றும் இல்லாமல் பண்பாடு, கலாசாரங்களை மறந்து பச்சோந்திகளாக உள்ளனர். இவர்களின் நடவடிக்கைகளினாலேயே எமது இனத்துக்கான விடுதலை தாமதமடைகின்றது.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாக்கிய செல்வம் அரியநேத்திரன் .

மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு கதிரவன் கலைக்கழகத்தின் 35ஆவது ஆண்டு நிறைவையொட்டி உள்ளூர்க் கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கதிரவன் கலைக்கழகம் 35 வருடங்களுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்ட ஒரு பழைமையான கழகமாகும். வடக்கு, கிழக்கில் ஆயுதப் போராட்டம் தொடங்கப்படுவதற்கு முன்பே இந்தக் கழகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தக் கழகத்தின் செயற்பாட்டினால் இந்தக் கிராமத்திலுள்ள இளைஞர்கள் ஒழுக்க சீலர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் இந்தக் கிராமமே சிறந்து விளங்குகின்றது. எமது பாரம்பரியங்கள், கலாசாரங்கள் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன. இந்த நேரத்தில் இவ்வாறான கழகங்கள் மூலமாக எமது பாரம்பரிய கலை, இலக்கியங்களைக் காப்பாற்ற வேண்டும். இந்த வகையில் இந்தக் கழகத்தின் செயற்பாடு பாராட்டத்தக்கது.

தமிழர்கள் தன்மானம் உள்ளவர்கள். எமது சிறந்த பண்பாடுகளை நாம் யாருக்கும் விலை பேசக்கூடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐ.நாவின் அறிக்கையை ஆதரிக்கிறது என்ற காரணத்துக்காக கூட்டமைப்புடன் பேச்சில் ஈடுபட்ட அரச பிரதிநிதித் தலைவர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க அந்தக் குழுவில் இருந்து விலகியிருக்கிறார். அது அவரின் சிங்கள இனப்பற்றைக் காட்டுகின்றது - என்றார். (ச)



## ஒரு வீதிக்கு இருவேறு பெயர்கள்; பயணிகள் குழப்பத்தில்

மட்டக்களப்பு,மே7

மட்டக்களப்பு, கல்லடிப் பிரதேசத்தில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் தெற்கு வீதிக்கு இரண்டு நிறுவனங்கள் வெவ்வேறு பெயர்களை இட்டுள்ளனர். வேறுபட்ட விதத்தில் விவேகானந்தபுரம் குறுக்கு வீதி மற்றும் தரிசனம் பின் வீதி எனப் பெயரிடப்பட்டுள்ளன.

இந்த வீதியைத் தேடிவரும் பிரயாணிகளும் தபால் விநியோகம் செய்பவர்களும் குழப்பமடைகின்றனர்.

இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி உரிய பெயர்ப் பலகையை இடுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (ச)

## கிராமங்களுக்குப் புதிய மின் இணைப்பு

திருகோணமலை,மே7

ஜனாதிபதியின் கிராமிய மின்எழுச்சி வேலைத்திட்டத்தின் கீழ் கிண்ணியாப் பிரதேச சபைப் பிரிவில் கிராமங்களுக்கு புதிய மின் இணைப்பு வழங்கும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கிண்ணியாப் பிரதேச சபைப் பிரதித் தவிசாளர் கே.எம்.நிஹார் கேட்டுக் கொண்டதுக்கு இணங்க திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக்கின் முயற்சியின் பயனாக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

கிண்ணியாப் பிரதேச சபைப் பிரிவில் 14 கிராம சேவை உத்தியோ கத்தர் பிரிவிலுள்ள சுமார் 30 இற்கு மேற்பட்ட வீதிகளுக்கு இந்தப் புதிய மின் இணைப்பு வழங்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## ஆர்ப்பாட்டம்...




ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கம்பளை நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட பேரணியின் கம்பளை ஐயப்ப சேவா சங்க உறுப்பினர்கள் ஈடுபட்டனர். (ச)

## காட்டு யானைகளின் தொல்லை அதிகரிப்பு

மட்டக்களப்பு,மே7

மட்டக்களப்பு மாவட்டம், படுவான்கரைப் பகுதியில் அண்மைக் காலமாகக் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாகப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வெல்லாவெளிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட எல்லையோரக் கிராமங்களை காட்டு யானைகள் மோசமாகச் சேதப்படுத்தி வருகின்றன.

பயன்தரும் தென்னை மரங்கள், மரவள்ளித் தோட்டங்கள் போன்றவற்றையும் குடியிருக்கும் வீடுகளையும் யானைகள் சேதப்படுத்தியுள்ளன.

இது குறித்து சம்மந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்காமல் இருப்பது தமக்கு கவலையளிப்பதாக அந்தப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ச)

# தொழிலாளர்களுக்கு துரோகம் இழைக்கும் நடவடிக்கைகளுக்கு இடமளிக்கக்கூடாது

## மேல்மாகாணசபை உறுப்பினர் தெரிவிப்பு

நுவரெலியா,மே7

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குத் துரோகமிழைக்கும் நடவடிக்கைகள் மீண்டும் தொடருவதற்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது. தொழிலாளர் உரிமைகளுக்காக அர்ப்பணிப்புடனும், தியாக உணர்வுடனும் போராடும் அனைத்து தொழிற்சங்கங்களும், அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டு இன்றைய தினத்தில் உறுதிபூணவேண்டும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும், மேல் மாகாணசபை உறுப்பினருமாகிய எஸ்.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் மே தினக் கூட்டம் அவிசாவளை பென்றித் தோட்டத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சில அரசியல் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும், முதலாளிமார் சம்மேளனத்துக்குமிடையே இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை கைச்சாத்திடப்படும் கூட்டு ஒப்பந்தம் என்ற அடிமைச் சாசனம் முற்றாக இல்லாதொழிக்கப்பட்டு, இந்தநாட்டில் வாழும் ஏனைய தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் அனைத்து உரிமைகளும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

இதனை வென்றெடுக்க அனைத்து மலையக அரசியல், தொழிற்சங்கங்களும் தமது பேதங்களை மறந்து ஒன்றுபட்டுச் செயற்பட முன்வரவேண்டும்.

கூட்டு ஒப்பந்தம் என்ற போர்வையில் இரகசிய உடன்பாடுகளை மேற்கொண்டு தொழிலாளர் வர்க்கத்தின் உழைப்பை - உரிமையைச் சுரண்டியெடுக்கும் போக்குகளை முற்றாகக் களைந்தெறிய வேண்டுமெனில் தொழிலாளர்களும் தமக்கிடையேயான முரண்பாடுகளைக் கைவிட்டு ஒற்றுமையாக ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.

வரவு-செலவுத் திட்டத்தில் கூட தோட்டத் தொழிலாளர்கள் கைவிடப்பட்ட பிரஜைகளாகவே உள்ளனர். ஆனால் அரச ஊழியர்களுக்கும், தனியார் தொழில் துறையினருக்கும் சம்பள உயர்வு மற்றும் விசேட சலுகைகள் வருடத்துக்கு வருடம் அதிகரிக்கப்படுகின்றன.

ஆனால், தற்போது என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவு உயர்வால் மலையகப் பெருந்தோட்ட மக்களே மிக மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் பிரதான உணவுக்காகப் பயன்படும் கோதுமை மாவின் விலை உச்சநிலை உயர்வை எட்டியுள்ளது. ஏனைய அத்தியாவசியப் பொருள்களின் விலையும் நாளுக்கு நாள் அதிகரித்துள்ள நிலையில் மலையக மக்கள் வறுமையின் எல்லைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, காலாகாலமாகத் தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டி ஏப்பமிடும் போலித்தனமான மலையக அரசியல்வாதிகளை உதறித்தள்ளிவிட்டுத் தமது உரிமைகளுக்காக நேர்மையாக குரலெழுப்புபவர்களுடன் மலையக மக்கள் ஒன்றிணைந்து தமது உரிமைகளை வென்றெடுக்க உறுதி பூணவேண்டும் - என்றார். (ச)

# காவலாளி மீது தாக்குதல்

திருகோணமலை பொது வைத்தியசாலையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் காவலாளி கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இனந்தெரியாத நபரொருவரால் தாக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்குள்ளானவர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருகோணமலை துறைமுகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# நாவலப்பிட்டி, வலப்பனையில் வீடமைப்புப் பணிகள் ஆரம்பம்

நுவரெலியா,மே7

ஜனசெவன வீடமைப்புத் திட்டத்தின் கீழ் இன்று நாவலப்பிட்டியில் 100 வீடுகள் அமைக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப் படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இன்று வலப்பனையில் மண்சரிவில் வீடுகளை இழந்த 35 குடும்பங்களுக்குமான வீடுகள் அமைக்கும் பணியும் ஆரம்பமாகும்.

இந்த இரு திட்டங்களும் அமைச்சர் விமல் வீரவன்சவினால் ஆரம்பித்து வைக்கப்படும். அமைச்சர்களான மஹிந்தானந்த அழுத்கமகே, சி.பி.ரத்நாயக்க, ஆறுமுகன் தொண்டமான், மாகாண அமைச்சர் நிமல் பியதிஸ்ஸ ஆகியோரும் கலந்து கொள்வர்.

இந்த வீடமைப்புத் திட்டங்களுக்கு ஒவ்வொரு குடும்பத்துக்கும் அரச காணி 20 பேர்ச் வழங்கப்பட்டுள்ளது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஒவ்வொரு வீட்டுக்கும் தலா 2 லட்சம் ரூபாவைக் கடனாக வழங்குகின்றது. இந்த வீடுகளின் நிர்மாணப்பணிகள் 4 மாத காலத்துக்குள் பூரணப்படுத்தப்படும் என வீடமைப்பு அமைச்சின் ஊடகச் செயலாளர் பிரசாத் மஞ்சு தெரிவித்துள்ளார். இந்தத் திட்டத்துக்காக நாவலப்பிட்டி வீடமைப்புத் திட்டத்துக்கு 3 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது.

வலப்பனைப் பிரதேசத்தில் மண்சரிவினால் வீடுகளை இழந்த 35 குடும்பங்களுக்கு நறந்தலாவை பிரதேசத்தில் 20 பேர்ச் காணி வழங்கப்பட்டு வீடமைப்புக் கடனாக 7 மில்லியன் ரூபாவும் வழங்கப்படுகின்றது என அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
வெளியூரில் இருக்கும் ஒருவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேச முற்பட்டு, அவர்கள் இல்லாமல் போகலாம். வெளியிடங்களுக்குச் செல்லும் போது பொருள்களைக் கவனமாக எடுத்து செல்ல வேண்டும். குடும்பச்செலவு ஒன்றை சமாளிக்க ஏனையோரிடம் பணம் கடன் வாங்கலாம். குல தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும்.

**இடபம்:**
வசதியான வாழ்வுக்குத் தேவையான சில விடயங்களைச் செய்வீர்கள். மற்றவரை நம்பி உறவினர்களுக்கு உத்தரவாதம் கொடுக்க வேண்டாம். புதிய வரவுகளால் கடனாக வாங்கிய பணம் ஒன்றை திருப்பிக் கொடுப்பீர்கள். பல நாள்களாக பிற்போட்ட வெளியூர் பயணங்கள் செல்லலாம். குடும்ப உறுப்பினர் செயற்பாடுகளால் கோபம் அடைவீர்கள்.

**மிதுனம்:**
திட்டமிட்ட காரியங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். ஆரோக்கியக் குறைவைத் தவிர்க்க அலைச்சல்களைக் குறைக்க வேண்டும். பிள்ளைகள் தொடர்பான விடயங்களுக்காக அலைய நேரிடலாம். சேமித்த பணம் ஒன்றை செலவு செய்யலாம். நீண்ட நாள்களாக தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்த ஒருவரை நேரில் சந்திக்கலாம்.

**கடகம்:**
எதிலும் பரந்த மனப்பான்மையுடன் நடந்து கொள்வீர்கள். நண்பர்களுடன் சேர்ந்து புதிய முயற்சிகளில் இறங்குவீர்கள். உறவினர்கள் சந்திப்பால் உற்சாகம் அடைவீர்கள். குறைவான ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த காரியத்தில் அதிகளவில் வருமானம் கிடைக்கும். சக ஊழியர்கள் வழியில் எதிர்பார்த்த பண உதவிகள் கிடைக்கலாம்.

**சிங்கம்:**
திட்டமிட்ட காரியங்களை சரியாகச் செய்து பாராட்டுக்களைப் பெறுவீர்கள். கலைத்துறையினர் நண்பர்களை அனுசரித்துச்செல்ல வேண்டும். ஒரு விடயத்தை பற்றி அதிகளவில் நினைத்து குழப்பிக் கொள்வீர்கள். நிலம், பூமி வாங்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும்.

**கன்னி:**
சக ஊழியர்கள் சிலர் மீது கடும் கோபம் கொள்ளலாம். கொடுக்கல், வாங்கல்களில் நாணயத்தை காப்பாற்ற கடும் பிரயத்தனம் செய்வீர்கள். சேமித்த பணம் ஒன்றுக்கு திடீரென செலவு ஏற்படலாம். முடிந்து விட்டதாக நினைத்த பிரச்னை ஒன்று மீண்டும் தலை தூக்கலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர்கள் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம்.

**துலாம்:**
கவனமாகவும், பொறுமையாகவும் செயற்பட வேண்டிய நாள். சிலருக்காக வெளியிடங்களில் நீண்ட நேரம் காத்திருக்கலாம். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வசூலாவது தள்ளிப் போகலாம். ஆதங்கங்கள், மனக்குறைகள் அதிகரிக்கும். பிள்ளைகளின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். கௌரவத்திற்கு பாதிப்பு ஏற்படும்.

**விருச்சிகம்:**
அனைவரிடமும் கலகலப்பாகப் பேசி அன்பாக நடந்து கொள்வீர்கள். பெண்கள் வகையில் சுபச் செலவுகளை எதிர் கொள்ளலாம். உத்தியோகத்தர்கள் மற்றவர்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைப்பதைத் தவிர்க்கவும். நண்பர்கள் சிலர் உங்களுக்காகச் செலவு செய்யலாம். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரலாம்.

**தனுசு:**
ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவர். குடும்ப பெரியவர்களின் அறிவுரையைக் கேட்டு நடப்பீர்கள். மருத்துவச் செலவுகள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். உதவி செய்த ஒருவருக்கு பதில் உதவி செய்வீர்கள். பல நாள்களாக வராமல் இருந்த கடன் மிகுதி ஒன்றை கேட்டு வாங்குவீர்கள்.

**மகரம்:**
மற்றவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுக்கலாம். உத்தியோகத்தர்கள் உயரதிகாரிகளின் விமர்சனங்களைச் சந்திக்கலாம். தாய்வழி உறவுகள் வழியில் முக்கியமான செய்தி ஒன்றைக் கேட்கலாம். புதிய நண்பர்களின் சந்திப்பு நிகழும். குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு உடல் நலக்குறைவு ஏற்படலாம். வீண் பயம் உண்டாகும்.

**கும்பம்:**
அடுக்கடுக்காக பல வேலைகளைச் செய்ய நேரிடலாம். வீடு, மனை தொடர்பான விடயங்களில் நீங்கள் நினைத்தது, நடப்பது தள்ளி போகலாம். எதிலும் புத்திசாலித்தனமாகச் செயற்பட வேண்டிய நாள். மாமன், மைத்துனர்கள் உங்களிடம் சில கோரிக்கைகளை முன்வைக்கலாம். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும்.

**மீனம்:**
பணம், பொருள் விடயங்களில் நினைத்தது நடக்கலாம். சுயதொழில் புரிவோர் கூடுதல் ஆர்டர்களால் மகிழ்ச்சி உற்சாகமாகக் காணப்படுவர். பாசமிக்க நண்பர்களின் உதவிகள் கிடைக்கலாம். மலை போல் வந்த பிரச்சினை ஒன்று, பனி போல் விலகும் நாள். எந்த வேலையையும் நாளை என தள்ளி வைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள்.



# வச்ச
# தப்ப

தாக்குதல் ஜெரோனிமாவின் முக்கிய இலக்கு பின்லேடன்தான். அதில் சந்தேகம் ஏதுமில்லை. ஆனால் அந்த வீட்டில் பின்லேடன் இருப்பார் என்பதற்குத்தான் அச்சொட்டான உத்தரவாதம் ஏதுமில்லை. அவர் அங்கு இருக்கிறார் என்பது அமெரிக்கர்களின் நம்பிக்கை. அப்படி இருக்காமலும் போகலாம். சாத்தியங்களை மறுத்துவிட முடியாது. அதனால் அங்கிருந்த எந்த ஆண்மகனையும் ஒஸாமாவா இல்லையா என்று பிரித்தறிய 'சீல்' படையினர் முயற்சிக்கவில்லை. எதிர்ப்பட்டால் சுட்டார்கள்.

எவராலும் தமக்கு ஆபத்தில்லை என்று 'சீல்'கள் உறுதியாக நம்பினாலன்றி சாவு அங்கிருந்த அனைவருக்காகவும் காத்திருந்தது. வீட்டிலும் 14 பேர் இருந்தார்கள் என்றும் 16 பேர் இருந்தார்கள் என்றும் முரண்பட்ட தகவல்கள் வருகின்றன.

தாக்குதல் பற்றி அமெரிக்க அதிகாரிகளே முரண்பட்ட தகவல்களை வெளியிட்டார்கள். பத்தாததற்கு இப்போது பாகிஸ்தான் அதிகாரிகளும் வேறு வேறாகத் தகவல்களை அள்ளி வீசுகிறார்கள்.

உண்மையில் என்ன நடந்தது என்று அதில் பங்கேற்ற சீல்கள் தவிர எவருக்கும் சர்வ நிச்சயமாகத் தெரியவில்லை. அந்த உண்மைகள் வெளியே வர இன்னும் சில காலங்கள் பிடிக்கும். ஆனாலும் உள்வீட்டுத் தகவல்கள், பலவற்றை வெளிச்சத்துக்குக் கொண்டுவருகின்றன.

### ஒஸாமாவை நோக்கி...

ஒஸாமா பதுங்கியிருந்த கட்டடத்தின் முதலாவது தளத்தை முழுமையாகச் சுத்திகரித்த சீல்கள் இரண்டாவது தளத்தை நோக்கி முன்னேறின. அந்தத் தளத்தில் ஒஸாமாவின் குடும்பம் இருந்தது. பெரும்பாலானவர்கள் குஞ்சுகுருமன்கள். 4 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்.

அவர்களிடம் இருந்து எந்த எதிர்ப்புகளும் இல்லை; ஆபத்தானவர்களோ ஆபத்தான பொருள்களோ அந்தத் தளத்தில் இல்லை என்பதை உறுதிப்படுத்திய 'சீல்'கள் மூன்றாவது தளத்திற்கு முன்னேறின. முதல் இரு தளங்களிலும் ஒஸாமா இல்லை என்பது சீல்களால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

வோஷிங்டனில் இருந்து நேரடியாகத் தாக்குதலை அவதானித்துக் கொண்டிருந்த அமெரிக்கத் தலைவர்களுக்கோ இதயத் துடிப்பு எகிறிக் கொண்டிருந்தது. ஒருவேளை இந்த நடவடிக்கை தோற்றுப் போகுமோ, தாம் நினைத்தபடி ஒஸாமா அந்த வீட்டுக்குள் இல்லாமல் போய்விடுவாரோ, அவசரப்பட்டுவிட்டோமோ, பாகிஸ்தானின் உதவியும் அனுமதியும் இல்லாமல் இப்படி தடாலடியாக நடவடிக்கை எடுக்கப் போனது பிழை என்று ஆகிவிடுமோ என்ற எண்ணங்கள் குழப்பத்தில் ஆழ்த்த, அமெரிக்க உயர் பீடத்தின் 'சிச்சுவேஷன்' அறை கடும் இறுக்கத்தில் மூழ்கிக் கிடந்தது.

### நேரடி வர்ணனை

அதிபர் ஒபாமா, துணை அதிபர், வெளிவிவகார அமைச்சர் கிலாரி, படைத் தளபதிகள், உயர் செயலர்கள் என எல்லோரும் பதற்றத்துடனும் கேள்விக் குறியுடனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

மறுபக்கத்தில் நடவடிக்கைகளை நேரில் வழிநடத்திக் கொண்டிருந்த சிஐஏ தலைவர் அபோதாபாத்தின் கள நிலையை நேரில் இவர்களுக்கு விளங்கப்படுத்திக் கொண்டிருந்தார்.

''இப்போது எமது படையினர் மூன்றாவது மாடியை நோக்கி முன்னேறுகின்றனர். அனேகமாக அங்கேயே ஒஸாமா மறைந்திருக்கலாம். அவர் பதில் தாக்குதலில் ஈடுபடக்கூடும் என்பதால் 'சீல்'கள் கடும் எச்சரிக்கையுடன் மெதுவாகவே முன்னேறுகின்றன. அந்தத் தளத்தில் ஒரு அறை இருக்கிறது. 'சீல்'கள் அதை நெருங்கிவிட்டார்கள்...'' என்றவாறு தொடர்கிறது சிஐஏ தலைவரின் விவரிப்புகள்.

ஒஸாமா பின்லேடன் பதுங்கியிருந்த அறைக் கதவின் முன்பாக நான்கு 'சீல்'கள் நிலையெடுத்துக் கொண்டன. கதவின் இரு பக்கங்களிலும் ஆளுக்கொருவராக சில கணங்கள் காத்திருப்பு உள்ளிருந்து எந்த எதிர்ப்பும் இல்லை. துப்பாக்கிச் சன்னங்கள் சீறிவரவில்லை.



ஒஸாமாவைக் கொன்ற 'சீல்' படையினர் பயிற்சியின் போது

நீண்ட நேரம் காத்திருக்கவில்லை, கதவை இடித்துத் திறந்து கொண்டு உள்ளே செல்கின்றனர் இரு 'சீல்' படையினர். முதல் படையினன் நேரே கட்டிலில் இருந்தவரைக் குறிவைக்கிறான். ''அசையாதே கொன்றுவிடுவேன்''. அடுத்த நபர் அறையை ஒரு முறை நன்றாகச் சுற்றி நோட்டமிட்டுவிட்டு கட்டிலின் விளிம்போடு தரையில் அமர்ந்திருக்கும் பெண்ணைக் குறி வைக்கிறார்.

### வச்சகுறி தப்பாது

கணப் பொழுதுகளுக்குள், கட்டிலில் அமர்ந்திருந்த நபர், அவரது இடதுபுறம் நோக்கி சரிந்து எதையோ எடுக்க முயற்சிக்கிறார் போன்று தோன்றவே முதலாவது சீல் அவரது நெஞ்சில் குறிவைத்துச் சுட்டான், இரண்டாவது சீல் அவரது தலையைக் குறி வைத்துச்

ரேணுபிரேம்
renuprem06@gmail.co

சுட்டான். குறிகள் தப்பவில்லை. சுருண்டு வீழ்ந்தார்.

சீல்களுக்கு அதுதான் பயிற்சி, ஒன்று வீழ்த்தும் சூடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குறி
# ாது

ற்றையது கொலைச் சூடு. எந்த ஒரு நபர் மீதும் அவர்கள் இந்த இரண்டு சூட்டையும் நடத்துவார்கள். தலைச் சூடு எப்போதுமே கொலைச்சூடுதான்.

கட்டிலில் அமர்ந்திருந்தவர் மீது முதல் சூடு நடத்தப்பட்டதும் தரையில் அமர்ந்திருந்த பெண் கதறிக் கொண்டு எழுந்து அவரைக் காக்க முயற்சிக்க முதலாவது 'சீல்' படையினன் அந்த பெண்ணின் கால்களில் சுட்டான்.

கட்டிலில் இருந்தவர் அப்படியே சரிந்து தரையில் விழ இரத்தம் ஆறாகப் பெருகித் தரையெங்கும் பரவுகிறது. இரத்த வெள்ளத்துக்கு மத்தியில் கிடந்த நபரை ஒரு 'சீல்' படையினன் தன்னிடம் இருந்த படத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கிறான்.

''நாங்கள் இலக்கைத் தாக்கி விட்டோம் என்று நினைக்கிறேன்'' என்று அவர்களின் கட்டளைத் தளபதிக் குத் தகவல் பறக்கிறது. அங்கிருந்து சிஐஏ தலைவருக்கு அந்தத் தகவல் விரைகிறது. தகவல் தெரிவித்த படையினனிடம் மேலதிக தகவல்கள் கோரப்படுகின்றன, அங்க அடையாளங்கள் விசாரிக்கப்படுகின்றன, அங்கே உயிருடன்... இருப்பவர்களிடம் அந்த நபர் யார் என்பதை உறுதிப்படுத்தும்படி கோருமாறு 'சீல்'கள் கேட்கப்படுகின்றனர். அனைத்துத் தரவுகளும் தடயங்களும் அடையாளங்களும் அந்த நபர் ஒஸாமா பின்லேடன் என்று சொல்கின்றன.

### 40 நிமிட தாக்குதல்

அவசர அவசரமாகத் தகவல்கள் பரிமாறப்படுகின்றன. முடிந்தவரையில் அனைத்தும் சரியானவையா என்ற ஒப்பீடுகள் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன. இறுதியில், ''நாங்கள் வென்று விட்டோம். இலக்கைக் கொன்றுவிட்டோம். ஒஸாமா இறந்தார்'' என்று அறிவித்தார் சிஐஏ தலைவர்.

'சிச்சுவேஷன்' அறையில் பதற்றத்தின் உச்சியில் இருந்தவர்களுக்கு உச்சந்தலையில் ஐஸ்கட்டியாக வழிந்திறங்கியது இந்தச் செய்தி. ''அப்பாடா...!'' நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள் அவர்கள். ஒரு வழியாக நொருங்கிப் போன அமெரிக்க இமேஜை தூக்கி நிறுத்தியாயிற்று. இதுதான் அவர்களது நிம்மதிக்கான காரணம்.

தாக்குதல் நடந்த அந்த இடத்தையும் சுற்றுவட்டாரத்தையும் சீல் படையினர் புகைப் படங்களிலும் காணொலியிலும் வீடியோ பதிவு செய்து கொள்கின்றனர். அந்த வீட்டில் இருந்த சிடிக்கள், பிளாஷ் ட்ரைவ்கள், லப்டப், ஹார்ட் டிஸ்க் என்று எல்லாவற்றையும் அள்ளிக் கொண்டனர்.

இந்த எல்லாமும் நாற்பதே நிமிடங்களுக்குள் நடந்து முடிந்தன. அங்கிருந்த தடயங்களையும் ஒஸாமா பின்லேடனின் சடலத்தையும் தூக்கிக் கொண்டு கிளம்ப ஆயத்தமானார்கள் 'சீல்' படையினர். அதுவரை அந்தக் கட்டடத்தின் மேலேயே பறந்தபடி நின்றுகொண்டிருந்தன இரு தாக்குதல் ஹெலிகளும்.

இப்போது அவை தாழ வந்து 'சீல்'களையும் கைப்பற்றப்பட்டவற்றையும் ஏற்றிக்கொண்டு தளம் திரும்ப வேண்டும். தரை நோக்கித் தாழப் பதிந்த போது எதிர்பாராத வகையில் ஒரு ஹெலி கட்டுப்பாட்டை இழந்து, பலாத்காரமாகத் தரையைத் தொடுகிறது. அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு எடுக்கப்பட்ட எந்த முயற்சியும் சரிவரவில்லை.

### வெளியேற்றம்

இனியும் தாமதிக்க முடியாது, பாகிஸ்தானில் எல்லோருக்கும் விவரம் தெரிந்து விட்டது. இஸ்லாமாபாத்திலிருந்து அவர்கள் வோஷிங்டனைத் துளைத்தெடுக்கிறார்கள். அவர்களுக்கு விடய்த்தை விளங்கப்படுத்தியாக வேண்டும். இல்லையேல் இந்தியா தம்மீது திடீர்த் தாக்குதல் நடத்துவதாக அவர்கள் பிழையாக விளங்கிக் கொள்ளவும்கூடும்.

ஏற்கனவே தாக்குதல் தொடங்கிய நேரத்தில் இருந்து உள்ளூர் பாகிஸ்தான் அதிகாரிகளிடமிருந்தும் இராணுவ அதிகாரிகளிடமிருந்தும் வரும் தொலைபேசி அழைப்புக்களை அமெரிக்கப் படை அதிகாரிகள் தவிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே காலத்தைத் தாமதிக்கக் கூடாது.

''பலாத்காரமாகத் தரைதொட்ட ஹெலியை அழித்துவிட்டுத் தளம் திரும்புங்கள்'' உத்தரவு பறக்கிறது. இரண்டு 'சீல்'கள் அந்த ஹெலிக்கு குண்டுகளைப் பொருத்தி விட்டு வெளியேற ஆயத்தமாகினார்கள்.

தாக்குதல் ஹெலிகளுக்குப் பாதுகாப்பாக பின்னாலேயே வந்த 'சினூக்' ரக ஹெலிகள் இரண்டில் ஒன்று அவசரமாகத் தரையிறங்கி 'சீல்' படையினரில் சிலரையும் ஒஸாமாவின் சடலத்தையும் தன் வயிற்றுக்குள் திணித்துக் கொண்டு மேலெழுந்து விரைகின்றன. கீழே குண்டு பொருத்தப்பட்ட ஹெலி வெடித்துச் சிதறுகிறது.

ஆப்கான் தளத்தில் இருந்து புறப்பட்டாலும் அந்த ஹெலிகளுக்கு அதே தளத்துக்குத் திரும்ப உத்தரவில்லை. வட ஆபிரிக்கக் கடலில் நின்றுகொண்டிருக்கும் யுஎஸ்எஸ் கோர்ல் வின்சன் விமானந்தாங்கிக் கப்பலுக்கே அவை வழிப்படுத்தப்பட்டன.

அங்கேதான் ஒஸாமாவின் இறுதிச் சடங்கு நடக்க இருந்தது. *(நாளையும் விரியும் காட்சிகள்)*



ஒஸாமா சுட்டுக் கொல்லப்பட்ட அறை, எங்கும் இரத்தம் சிந்திக் கிடக்கிறது.

# மன்னிப்போம் மறப்போம்



உலகப் புகழ் பெற்ற மனிதர்களில் இயேசு தனியிடம் பெறுகிறார். கருணை பொழியும் அவரது காந்த விழிகளும் அன்பு ததும்பும் அவரது மொழிகளும் உலகப் புகழ் பெற்றவை.

''மன்னிக்கிறவர்கள் மன்னிக்கப்படுவார்கள்; ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு. என்கின்ற அருள் வசனங்களும் அழியாப் புகழ் பெற்று விட்டன. இயேசு இதை அறிவித்த அதே சமகாலத்தில் திருவள்ளுவர் ''இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு'' என்று பாடியுள்ளார்.

சுய சிந்தனையுடன் தெய்வீக அருள் பெறுகின்ற எல்லோரும் ஒரே மாதிரியான அனுபவத்தைத் தான் பெறுகிறார்கள். எனவே மனிதனுக்கும் தெய்வத்திற்கும் எண்ணப் பாலம் அமைத்த இயேசுவும் வள்ளுவரும் ஒரே கருத்தையே கூறுகிறார்கள்.

இன்று நடக்கும் சாதிச் சண்டைகள், மதக் கலவரங்கள் இவற்றுக்கு மூலகாரணம் பல காலப் பகை. எப்போதோ நடந்து விட்ட தவறுகளுக்காகப் பழிவாங்கும் பகை உணர்ச்சி.

மன்னிப்பு என்ற மலரைக் கடவுளுக்கு அர்ப்பணிக்காது பழி வாங்குதல் என்கிற செயலுக்கு மக்கள் தயாராகிறார்கள். மதத்தின் பெயராலும் சாதியின் பெயராலும் கீழே விழும் ஒவ்வொரு பிணமும் தெய்வத்திற்கு எதிரானது. இதைக் கடவுளின் பெயரால் செய்கின்ற மூடர்களைக் கடவுள் மன்னிக்கவே மாட்டார்.

கண்ணன், இயேசு, நபிகள் எல்லோரும் மன்னிப்பை மகத்தான தெய்வீக இயல்பாகச் சித்தரிக்கும் போது அவர்கள் பெயரால் அடித்துக் கொள்ளும் தீவிர மதவாதிகள் யாவரும் தேவனின் எதிரிகளே.

மன்னிப்பதன் மூலம் மன்னிப்பவன் உயர்கின்றானோ இல்லையோ மன்னிக்கப்படுபவன் உயர்கின்றான். எனவே பழியுணர்ச்சி, பகை இன்றி மன்னிப்பது மிக மிக அவசியம்.

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோது ஒரு கொள்கையில் மிக உறுதியாக இருந்தார். தன்னிடத்தில் கருணை மனுக் கேட்கும் மரண தண்டனைக் கைதிகளை மன்னித்துத் தண்டனைக் காலத்தைக் குறைத்து விடுவார். மரண தண்டனையை நீதிமன்றங்கள் விதித்தாலும் அவர் ஜனாதிபதி என்கிற அதிகாரத்தை உபயோகப்படுத்தி இரத்துச் செய்து விடுவார்.

ஒரு சமயம் யுத்தம் முடிந்து போர்க்களத்தை அவர் பார்வையிட்ட போது ஓர் இராணுவ வீரன் தன் கழுத்தில் இருந்த சங்கிலியின் பேழையை முத்தமிட்ட படி இறந்து கிடந்தான். அந்தப் பேழையில் அவன் மனைவி அல்லது காதலியின் படம் இருக்கலாம்; அதை அவர்களிடம் சேர்க்க வேண்டும் என்று கருதி எடுத்த ஆபிரகாம் லிங்கன் அதிர்ந்து போனார். காரணம் அதில் இருந்தது அவரின் படம்.

விசாரித்த போது உண்மை தெரிந்தது; அவன் மரண தண்டனை பெற்ற குற்றவாளி என்பது. லிங்கனால் மன்னிக்கப்பட்டு சிறைத் தண்டனை பெற்றிருந்தான். போர் வந்தபோது சிறைக் கைதிகளுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டு போரில் ஈடுபடுத்தப்பட்டனர். போரில் அவன் நாட்டுக்காகத் தன் உயிரைத் தியாகம் செய்தான்.

அதே உயிர் மரண தண்டனை மூலம் போயிருந்தால் அவமானம். அது நாட்டுக்காகப் பிரிந்ததால் அது வெகுமானம். மன்னிப்பு அவனைத் தியாகி ஆக்கி விட்டது. அந்த நன்றியுணர்வில் அவன் லிங்கன் படத்தை முத்தமிட்டபடி இறந்து போனான்.

மன்னிப்பதன் மூலம் துரோகிகளைத் தியாகிகள் ஆக்கலாம். தன்னைச் சிலுவையில் அறைந்தவர்களைக் கூட மன்னிக்கும் படி பரம பிதாவிடம் மன்றாடினார் இயேசு. ஆபிரகாம் லிங்கன் ஓர் உண்மையான கிறிஸ்தவர்.

தொண்டு செய்கிற சிலர் உண்மையான நன்மைகள் செய்வார்கள். ஆனால் உலகம் அதற்காகத் தன்னை அங்கீகரிக்க வில்லை என்னும் போது சோர்ந்து போவார்கள். ஒரு சில சமூக இயக்கங்களை நடத்துபவர்கள் தங்கள் உழைப்பை, தியாகத்தை உலகம் கண்டு கொள்ளாத போது ''என்ன செய்து என்ன பயன்? என்னுடைய அருமை யாருக்கும் தெரியவில்லையே'' என்பார்கள். தியாகத்தில் கொஞ்சம் அசுர வாசனை வீசுவதன் அடையாளம் இது.

காந்தியடிகள் கூறுவார்; தியாகம் செய்தவர்கள் தியாகம் செய்திருக்கிறோம் என்ற உணர்வோடு இருப்பது சரியல்ல; தியாகம் செய்திருக்கிறோம் என்ற எண்ணத்தையும் தியாகம் செய்தால் தான் தியாகம் பரிபூரணம் அடைகிறது'' என்பார்.

இன்றைய பத்திரிகைச் சிறுகதைகள் , சினிமாத் தொடர்கள் எல்லாமே பகையுணர்ச்சியை உரமூட்டி வளர்க்கின்றன. இதற்கு மத்தியில் ஒற்றை மனிதனாக மெல்லிய குரலில் கீதையும் பைபிளும் சொல்வது உங்கள் இதயங்களில் நுழையுமா தெரியவில்லை. என்றாலும் உணர்ச்சி பூர்வமாகச் கூறினால் மன்னிப்பு உங்களைத் தேவனாக்கும். உங்களுக்கு எதிராக நடந்து கொண்ட எல்லோரையும் மனப்பூர்வமாக மன்னியுங்கள்.

சுகி.சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுநீரக சத்திரசிகிச்சைக்கு கோப்பாயைச் சேர்ந்த சிறிசாந்தன் திலக்ஷன் என்ற சிறுவனுக்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை வழங்கினார். சிறுவனுடன் அவரது பெற்றோர் பணத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். அருகில் ஆளுநரின் செயலாளர் எஸ்.ரங்கராஜாவும் காணப்படுகிறார். (த)

# பணியாளர் நலனில் அக்கறை கொண்டது கூட்டுறவுப் பணியாளர் நலன்புரி சங்கம்

யாழ்ப்பாணம்,மே 7

கூட்டுறவுப் பணியாளர்களது நலனில் அக்கறை கொண்டது யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் பணியாளர் நலன் புரி சங்கம்.

இந்தச் சங்கத்தின் அமைப் பானது தொடர்ந்து பல வரு டங்களாக இயங்கி வருகின் றமை பாராட்டுக்குரியது.

இதற்கு முக்கிய காரணமாக கூட்டுறவுப் பணியாளர்களின் ஒற்றுமையும் புரிந்துணர்வும் விடாமுயற்சியுமே எனத் தெரி வித்தார் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் இ.ராஜாராம்.

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் பணியாளர் நலன் புரிச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு யாழ்.வீர சிங்கம் கூட்டுறவுச் சபையில் யாழ்.மாவட்டக் கூட்டுறவு நலன்புரிச் சங்கத்தின் தலைவர் சு.சுரேஸ்குமார் தலைமையில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சங்கம் தொடர்ந்து வளர்ச்சிபெற வேண்டுமா னால் கூட்டுறவுப் பணியாளர் களின் ஒத்துழைப்பு இன்றிய மையாதது.

புதிய பல முயற்சிகளை உருவாக்கி, வருமானங்களை அதிகரிப்பதன் மூலம் பணியா ளர்கள் பல்வேறு நன்மை களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கூட்டுறவுப் பணியாளர் களின் உழைப்புக்கு ஏற்ப கூட்டுறவுச் சங்கங்களும் வளர்ச்சி யடையும். அதனூடாக ஏனைய பயனாளிகளும் பல நன்மை களைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பாக அமையும்.

நட்டத்தில் இயங்கும் கூட் டுறவுச் சங்சங்களில் உள்ள பணியாளர்களும் மேலும் ஊக் கத்துடன் பணியாற்றுமிடத்து நட்டத்திலிருந்து மீண்டு கொள்ள லாம்.

இன்றைய நிலையில் புதி தாக இணைந்த பணியாளர்கள் சபையின் வரலாற்றையும் நன்கு கற்றறிந்து கொள்ள வேண்டும்.

பணியாளர்களின் ஒற்று மையே கூட்டுறவை உயர்த் தும் என்பதில் ஐயமில்லை- என்றார். (ம-311)

# ஊழியர்கள் செயற்றிறனுடன் பணிபுரிந்தால் கூட்டுறவு நிறுவனங்கள் இலாபமடையும்

யாழ்ப்பாணம்,மே 7

அனைத்துக் கூட்டுறவுப் பணியாளர்களும் செயற்றிறனு டனும் செயல் ஊக்கத்துடனும் ஒற்றுமையாகச் செயற்படு மிடத்துக் கூட்டுறவு நிறுவனங் களை இலாபகரமாகச் செயற் படுத்த முடியும்.

கூட்டுறவு நிறுவனங் களின் லாபத்தின் அடிப்படை யிலேயே பணியாளர்களின் சம்பள உயர்வையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் செயலாளர் திருமதி வே.செல்வரத்தினம்.

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் பணியாளர் நலன் புரிச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு யாழ். கூட்டுறவுச் சபையில் சங்கத் தலைவர் சு.சுரேஸ்குமார் தலை மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டுறவுச் சபைப் பணிப் பாளர்களின் நலனை மையப் படுத்தியும் அவற்றை மேம் படுத்தும் நோக்கிலும் அமைக் கப்பட்டதே யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் பணி யாளர் நலன்புரிச் சங்கம். இந்தச் சங்கம் கூட்டுறவுப் பணியாளர்களுக்குப் பல சேவைகளை வழங்கி வருகின் றது.

கூட்டுறவுப் பணியாளர் களின் ஒற்றுமையையும் புரிந் துணர்வையும் பரஸ்பரத்தை யும் ஏற்படுத்துவதே இந்தச் சங்கத்தின் நோக்கமாகும்.

இந்த அடிப்படையில் எந்த ஒரு நிறுவனத்தின் வெற்றிக் கும் தோல்விக்கும் அங்கு உழைக்கும் பணியாளர்களே காரணம்.

கூட்டுறவுப் பணியாளர் களுக்கான ஊதியத்தையோ, பணி உயர்வுகளையோ வேறு எந்த நிறுவனங்களும் வழங்கமாட்டா. கூட்டுறவுச் சங்கங்களே இதனை வழங்கமுன்வரும். இதற்குக் கூட்டுறவுச் சட்டம் ஒரு போதும் தடையாக இருக்கமாட்டாது.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை கடந்த காலங்களில் பல நெருக்கடிகளைச் சந்தித்து நட் டத்தில் இயங்கி வந்தது. இவை இலாபகரமாக இயங்க பயிற்சிகள் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன- என் றார். (ம-311)

# சமயக் குரவர்களின் குருபூசை தினங்களை ஒரு வாரத்துக்கு அனுஷ்டிக்க வேண்டும்

யாழ்ப்பாணம்,மே 7

சைவ சமயத்துக்காகத் தொண் டாற்றிய சமயக் குரவர்கள், நாயன்மார்களின் குருபூசைத் தினங்கள் ஒருவாரமாக அனுஷ் டிக்கப்படவேண்டும்.

இவர்கள் வழங்கிய தொண்டு கள் சமயத்தின் வளர்ச்சிக்கு மட்டுமல்லாது இளைய தலை முறையினரை ஒழுக்க சீல ராகவும் மாற்றக்கூடியவை.

இவ்வாறு தெரிவித்தார் நல்லை ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமா சார்ய சுவாமிகள்.

சுன்னாகம் பருத்திக்கலட்டி ஞான வைரவர் ஆலயத்தில் கடந்த புதன்கிழமை நாவுக்கரசு நாயனாரின் குருபூசைத் தினத்தை முன்னிட்டு அனுஷ்டிக்கப் பட்ட வாகீசர் வாரத்தின் இறுதி நாள் நிகழ்வில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த் தும் போது:

நாயன்மார்கள் சைவசமயத் தின் வளர்ச்சிக்குத் தம்மையே அர்ப்பணித்தவர்கள். இதன் மூலம் அனைத்து மதத்தவர்களும் சைவ சமயத்தின் பெருமையை அறிந்துகொள்ள முடிந்தது.

நாயன்மார்கள் கூறிச் சென்ற கருத்துக்கள் இன்றைய இளம் தலைமுறையின் சிறந்த முன் னேற்றமான நல்வாழ்க்கைக்கு வழிகாட்டியாக உள்ளன.

இவற்றைக் கருத்திற் கொண்டு நாயன்மார்களுடைய குருபூசை தினங்களை அவர்களின் மறைவு நாளில் மட்டும் கொண்டாடாமல் அனைத்து நாயன்மார்களையும் ஒன்றிணைத்து நினைவுகூரும் வகையில் அதனைக் குருபூசை வாரமாகப் பிரகடனப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

இதன்மூலம் தான் நாயன் மார்களுடைய பணிகளை அனை வரும் உணர்ந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும்- என்றார்.

இந்த நிகழ்வில் வலிகாமம் வலய ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் சத்தியதாசன் 'வாகீசர்' எனும் தலைப்பில் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த் தினார்.

அத்துடன் 'மாவை சிவ நாதன்' பட்டிமன்றக் குழுவின ரின் சிறப்புப் பட்டிமன்றமும் இடம்பெற்றது. (ம-313)

# பட்டம் வழங்கிக் கௌரவிப்பு



அகில இலங்கை ஆயுள்வேத சம்மேளனம் பரம்பரை வைத்தியர் செல்லத்துரை பரம சிவம் பிள்ளைக்கு 'வைத்திய சிரோன்மணி பண்டித' என் னும் பட்டம் வழங்கிக் கௌர வித்துள்ளது.

சம்மேளனத்தின் 80 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் சுதேச வைத்தியத்துறை அமைச் சர் சாலிக திஸ்ஸ நாயக்கா இந்தக் கௌரவத்தை வழங்கி னார்.

அரச சேவையில் சேவை யாற்றி ஓய்வுபெற்ற பின்னர் இலங்கா சித்த ஆயுர் வேத மருத் துவக் கல்லூரியில் வருகை தரு விரிவுரையாளராகக் கட மையாற்றி வருகின்றார்.

அராலி வடக்கு கிராம முன்னேற்றச் சங்கத் தலை வராகவும் மயிலியற்புலம் கந்தசுவாமி கோயில் தேர்த் திருப்பணிச் சபைத் தலைவராக வும் சமூக சேவை செய்து வரு வதும் குறிப்பிடத்தக்கது. (ம)

# பண்ணிசை வகுப்புக்கள்

யாழ்ப்பாணம்,மே 7

யாழ். சிவதொண்டன் நிலை யத்தின் ஆதரவில் அகில இலங் கைத் திருமுறைமன்ற வட இலங்கைச் சங்கீத சபையின் ஏற்பாட்டில் இலவச தேவாரப் பண்ணிசை வகுப்புக்கள் நடை பெற்று வருகின்றன.

இந்தப் பயிற்சி நெறியில் ஆர்வமுடைய இருபாலாரும் வயது வேறுபாடின்றிக் கலந்து கொள்ளலாம்.

தேவாரப் பண்ணிசைப் பாடத்திட்டம் தரம் ஒன்று, தரம் 2, தரம் 3 இற்குரிய பயிற்சிகள் நடைபெறுகின் றன.

அத்துடன் பஞ்சபுராணம் பாடல் பயிற்சி நெறியும் இடம் பெறுகின்றது.

இதற்கான பயிற்சி நெறிகள் யாவும் சிவத்தொண்டன் நிலைய நூலக மண்டபத் தில் வாராந்தம் சனி, ஞாயிறு தினங்களில் மாலை 4.15 மணி முதல் 5.30 மணிவரை நடை பெறுகின்றன என்று மன்ற அமைப் பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார். (ம-313)

# வழிகாட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம்,மே 7

கல்வி நிர்வாக சேவை வழிகாட்டல் செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகப் பணிப்பாளர் பா.தன பாலன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் யாழ். பல்கலைக்கழக வர்த்தக முகா மைத்துவப் பீட பீடாதிபதி பேரா சிரியர் க.தேவராஜா ''பாட சாலை அதிபர் தலைமைத்து வம்'' தொடர்பான கருத்துரை நிகழ்த்துவார். (ம-323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைப் பணியாளர்கள் மீது ஜோர்தானில் தாக்குதல்

கொழும்பு, மே 7

ஜோர்தானில் இருக்கும் இலங்கைப் பணியாளர்கள் சிலர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பணிப் பகிஷ்கரிப்பு ஒன்றை அடுத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தாக்குதலுக்கு இலக்கான இலங்கை பணியாளர்களில் ஒருவரான டப்ளியூ. ஏ.கே.டயஸ்குமார தெரிவித்துள்ளார்.

தாம் உள்ளிட்ட குழுவினரின் உயிருக்கு அச்சுறுத்தல் நிலவுவதால் தம்மை உடனடியாக இலங்கைகுத் திருப்பி அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவர் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்கவிடம் வினவியபோது, ஜோர்தானில் உள்ள இலங்கைப் பணியாளர்களின் இரண்டு குழுக்களிடையே இந்த மோதல் இடம் பெற்றுள்ளது எனத் தெரிவித்தார்.

# ஜனாதிபதியின் சர்வாதிகார வெளிப்பாடே தேர்தல்கள் ஆணையாளரின் புதிய நியமனம்

### சாடுகிறது ஐ.தே.கட்சி

கொழும்பு, மே 7

தேர்தல்கள் ஆணையாளரை ஜனாதிபதி நியமிக்க முடியாது. அவ்வாறான ஒரு சட்டமும் இலங்கையில் கிடையாது. 18 ஆவது திருத்தத்திலும் இப்படிக் குறிப்பிடப்படவில்லை. எனவே, இதனூடாக ஜனாதிபதி சர்வாதிகாரப் போக்கு வெளிப்படுத்தப்படுகின்றது.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா நேற்று முன்தினம் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பது தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவித்தவை வருமாறு -

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழ் பிற்போடப்பட்டன. அந்தத் தேர்தல்களைப் பிற்போடவே அவசர காலச் சட்டத்தை அரசு பயன்படுத்தியது. இந்த நிலையில், எப்போது இந்தத் தேர்தல்கள் நடத்தப்படும்? இதனால் யாருடைய உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன?

18ஆவது அரசமைப்புத் திருத்தத்தின்படி ஜனாதிபதி தேர்தல்கள் ஆணைக்குழுவையே நியமிக்க முடியும். ஆனால் தேர்தல்கள் ஆணையாளரை ஜனாதிபதி நியமித்துள்ளார். சட்டமா அதிபர் திணைக்களம் இன்று ஜனாதிபதியின் கைக்குள் உள்ளது. தண்டனையை அதிகரித்தல், வழக்குத் தொடுத்தல் மற்றும் வழக்குத் தேவையில்லை என்று வாபஸ் பெறவும் ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது சர்வாதிகாரப் போக்கையே சுட்டி நிற்கின்றது.

விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டமையை எதிர்க்க முடியாது. அதை தேவைக்கு அதிகமாக எடுத்துக் காட்டி மனித உரிமை, ஊடகச் சுதந்திரம், நீதிமன்ற சுயாதீனம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த முயல்கின்றபோது சர்வதேசம் எமது நாட்டுக்கு எதிராக விரல் நீட்டுகின்றது. இலங்கையில் வாழமுடியாது என்று பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள் எனப் பலர்நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர்.


19ஆவது அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்றில் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது. இதன் ஊடாகப் பிரதம நீதியரசரின் சேவைக் காலம் மேலும் ஐந்து வருடங்களுக்கு நீடிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் தற்போதைய அரசமைப்பின்படி 65 வயதில் பிரதம நீதியரசரின் சேவைக் காலம் முடிவடைகிறது.

ஹெஜிங் ஒப்பந்தம் குறித்து வங்கிகள் மீதே குற்றஞ்சாட்டப்படுகின்றது. ஏராளமாக பணத்தை தவறான முறையில் ஒப்பந்தம் செய்தபோது அரசு பார்த்துக் கொண்டா இருந்தது?

அத்துடன், தனியார் ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. ஆனால் தனியார் துறையினர் உத்தேச ஓய்வூதியச் சட்டமூலத்தில் சில திருத்தங்கள் சேர்க்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திப் போராடுகின்றனர்.

இதனைப் பொருட்படுத்தாமல், மூன்றிலிரண்டு பெரும்பான்மையை வைத்துக் கொண்டு பலவந்தமாக அந்தச் சட்டத்தை அமுல்படுத்த முற்படும்போது அதை ஜனநாயகம் என்று கூற முடியாது. இது எமது நாடா என்று கூடக் கேள்வி எழுகின்றது-என்றார். (சி)

### ஆரம்பிப்பு....




ஜேர்மன் நிதியுதவியுடன் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட 450 இற்கும் மேற்பட்ட வேலைத் திட்டங்களுடன் கூடிய புதிய இணையத்தளமொன்று இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜென்ஸ் புளொட்னரால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படுகின்றது. அருகில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் காணப்படுகின்றார். (ச)

### தோட்டத் தொழிலாளரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த

# பிரஜாசக்தி மற்றும் ஈகியோஸ் நிலையங்களுக்கு ரூ. 20 கோடி

கொழும்பு, மே 7

தோட்டத் தொழிலாளர் சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக செளமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் மூலம் பிரஜாசக்தி மற்றும் ஈ கியோஸ் நிலையங்களை ஆரம்பிக்க 20 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அமைச்சரவைக்கு சமர்ப்பித்த அறிக்கையின்படி 35 ஈ-கியோஸ் நிலையங்களை ஆரம்பிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இதற்குத் தேவையான 270 கணினித் தொகுதிகளைக் கொள்வனவு செய்ய 20 கோடி ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தோட்ட மக்களுக்காக பிரஜாசக்தி நிலையங்கள் பத்து வருடங்களுக்குள் நிறுவப்பட உள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 45 பிரஜா சக்தி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இவற்றுக்கும் கணினி மற்றும் உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

# சஜித் பிரேமதாஸ மீது ஒழுக்காற்று நடவடிக்கை

### ஐ.தே.க. முன் எச்சரிக்கை

கொழும்பு, மே 06

கட்சிக்குள் பிளவு ஏற்படும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தொடர்ந்தும் கருத்துக்களை தெரிவிப்பாராயின் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியேற்படும் - என ஐ.தே.கவின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

ஐ.தே.கவின் தேசிய அமைப்பாளர் பதவி கட்சியாப்பிற்கு முரணானது என நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பது அவரின் தனிப்பட்ட கருத்தாகும்.

எனினும் அவர் கட்சியில் பிளவு ஏற்படும் வகையில் தொடர்ந்து கருத்து வெளியிடுவாரானால் கட்சிச் செயற்குழு அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் - என்றார்.

ஐ.தே.கவின் தேசிய அமைப்பாளராக கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகருணா நாயக்க நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சி)

# தனியார் ஓய்வூதியத் திட்ட சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது அல்ல

### உயர்நீதிமன்றம் அறிவிப்பு

கொழும்பு,மே 7

அரசின் தனியார் ஓய்வூதியத் திட்டம் தொடர்பிலான சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது அல்ல என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் அமர்வு ஆரம்பமான போது சபாநாயகர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அரசின் உத்தேச ஓய்வூதியத் திட்டம் தொடர்பாகப் பல்வேறு தரப்பினர் மத்தியிலும் நிலவிய கருத்து முரண்பாடு காரணமாக அது குறித்து நீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்கமைய இந்த விடயம் தொடர்பிலான தமது நிலைப்பாட்டை உயர் நீதிமன்றம் சபாநாயகருக்கு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

# காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி; இலங்கை-இந்திய ஒப்பந்தம் விரைவில்

கொழும்பு, மே7

யாழ்ப்பாணம், காங்கேசன்துறைத் துறைமுகத்தை இந்தியாவின் உதவியுடன் அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பிலான உடன்படிக்கை விரைவில் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வேலைத்திட்டம் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்த யுத்தகாலத்தின் போது காங்கேசன்துறை துறைமுகம் கைவிடப்பட்டிருந்தது.

இலங்கைக்குக் காணப்படுகின்ற 10 கடல் வழி உட்காவுகை வாயில்களில், காங்கேசன்துறைத் துறைமுகமும் ஒன்றாகக் காணப்படுகிறது.

இந்தத் துறைமுகத்தின் அபிவிருத்திப் பணிகள் நிறைவடைந்த பின்னர், இந்தியாவில் இருந்து பொருள்களை இறக்குமதி செய்யப் பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. வடக்கிலிருந்து தெற்குக்கான பொருள் மற்றும் பயணிகள் பரிமாற்றத்துக்கும் இந்தத் துறைமுகம் பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவீந்திரநாத் தாகூரின் பல்துறை ஆளுமை



இந்தியாவில் பல்துறை ஆளுமையுள்ள அறிஞர்கள் உருவாகியுள்ளார்கள். உருவாகிக் கொண்டும் வருகின்றார்கள். இந்த நிலையிலே இரவீந்திரநாத் தாகூரும் குறிப்பிடத்தக்க ஒருவராவர். இந்தியாவின் வங்க நாட்டைச் சேர்ந்த தாகூரின் (1861-1941) 150 ஆவது பிறந்த தின விழாவை அனைத்துலக மக்களும் கொண்டாடும் இந்த வேளையில் தாகூரின் பல்துறை ஆளுமை பற்றிய கட்டுரையாக இது அமைகிறது. அவருடைய இலக்கியங்கள், கட்டுரைகள், கலைப் படைப்புகள், நூல்கள் போன்றவற்றைக் கொண்டு நோக்குகின்ற போதே தாகூரின் பல்துறை ஆளுமையை அறிந்து கொள்ளலாம். அவருடைய முக்கிய படைப்புக்களாக

I. Sadhana
II. Towards universal man
III.Personality
IV. Creative Unity
V. Religion of man
VI. Religion of Artist

போன்றவை மிகக் குறிப்பிடத்தக்கவையாகும். தாகூரின் சிந்தனையில் குறிப்பாக அவரது எழுத்துக்களில் மனிதநலப் பொதுமை வாதம் சிறந்தொன்றாகும். உபநிடதம், பௌத்தம், கிறிஸ்தவம் சூபித்துவம் போன்றவற்றில் காணப்படுகின்ற பொதுமை வாத மெய்யியல் சிந்தனைகள், அவரது கட்டுரைகள் உள்ளிட்ட பல்வேறுபட்ட ஆக்க இலக்கியங்களினூடாக வெளிப்படுத்தப்படுகின்றன. இந்த மரபை மேலைத்தேச தத்துவ மரபுகளில் குறிப்பாக பிளேட்டோவின் மெய்யியல் சிந்தனைகளில் இருந்து அறிந்து கொள்ளலாம். பிளேட்டோ தமது நூல்களில் பொதுமை வாதம் பற்றி விளக்குகின்ற போது பல கனியங்கள் சேர்ந்த கூட்டே பொதுமையாகும். உதாரணமாக மனிதர்களை எடுத்துக் கொண்டால் இனரீதியாகவும் சமய ரீதியாகவும் சாதி ரீதியாகவும் வேறுப்பட்ட தன்மை காணப்பட்டாலும் மனிதத்துவம், மனிதசாரம் எல்லோருக்கும் பொதுவாக விளங்குகின்ற தொன்றாகும். அத்தோடு தத்துவ ஞானிகளையும் தத்துவ ஞானி அல்லாதவர்களையும் விளக்குகின்ற போது யாருக்கு முழுமையான பார்வை இருக்கின்றதோ அவனே தத்துவஞானி ஆவான். (Who is having total vision is philosopher) எனப் பிளேட்டோ கூறுகின்றார். இத்தகைய மரபை தாகூரின் சிந்தனைகளிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

திரவியநாதன் திலீபன்
உதவி விரிவுரையாளர்,
மெய்யியல் உளவியல் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

இந்தியாவின் மனிதத்துவப் பொதுமைவாதம் பற்றிய மெய்யியலானது மிகப் பழைய இலக்கியமாகக் கருதப்படும். உபநிடதங்களில் ஆழமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அத்தோடு உபநிடதங்களில் பரவலாக வளர்ச்சியடைந்த நிகழ்விய ஒருமைவாதம் தாகூரின் அனைத்துப் படைப்புக்களிலும் வெளிப்படுகின்றது. அவரது கீதாஞ்சலி எனும் கவிதைத் தொகுப்பு நோபல் பரிசு பெற்றதனூடாக உலகத் தரத்தைப் பெற்றுக் கொண்டது. நோபல் பரிசுபெற்ற ஏற்புரையில் இந்திய மரபின் சாரமான பொதுமைத்துவம் என்ற விடயத்தை வெளிப்படுத்தும் உபநிடத மகா வாக்கியத்தை நினைவுபடுத்தினார்.

*''எவனொருவன் தன்னில் எல்லாவற்றையும்*
*எல்லாவற்றில் தன்மையும் காணுகின்றானோ*
*அவனே பிரமஞானி''*

என்பது அதுவாகும்.

மேலும் அவரது பொதுமை மெய்யியல் பரஸ்பர பொதுமைத் தளத்தை வெளிப்படுத்துகின்றது இத்தகைய பொதுமை மரபு, எல்லாக் கலாசாரங்களையும் உள்வாங்குகின்ற பரந்த மனப்பாங்கும் ஆழமான பொதுமை சார் அறிவியலாகவும் வெளிப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

இத்தகையதொரு மரபை இலங்கையில் ஒரு தேசம் ஒரு நாடு என்பதனூடக அறிந்து கொள்ளலாம். தாகூர் மேற்குறிப்பிட்ட சிந்தனைகளை சீதாஞ்சலியில்

*எங்கே மனம் அச்சமற்றும் சிரம்*
*பெருமிதத்தால் உயர்ந்தும் இருக்கின்றதோ*
*எங்கே அறிவு சுயமாக செயற்படுகின்றதோ*
*எங்கே உலகம் உறவுகளின் குறுகிய*
*எல்லைகளினால் துண்டாடப்படாமல் இருக்கின்றதோ*
*எங்கே வார்த்தைகள் உண்மையின்*
*ஆழத்திலிருந்து வெளிப்படுகின்றதோ*
*எங்கே சோர்வுற்ற முயற்சிகள்*
*முதுமையைத் தேடி விரைகின்றதோ*
*எங்கே நியாயத்தின் தெளிந்த நீரோடை*
*வழிமாறி அநீதியின் பாலை நிலத்தினூடாகப்*
*பாயாமலிருக்கின்றதோ*
*எங்கே மனம் எப்போதும் விசாலமுறும்*
*எண்ணங்களினாலும் செயல்களினாலும்*
*உன்னால் வழி நடத்திச் செல்லப்படுகின்றதோ*
*அங்கே அந்த விடுதலையின் சுவர்க்கத்தில்*
*என் பிதாவே என் தாய்நாடு விழிப்புறட்டும்*

*[கீதாஞ்சலி 35]*

தாகூர் இந்தியக் கலை மெய்யியலுக்கும் பெரும் பங்காற்றியவர் என்ற சிறப்பையும் பெற்றுக் கொள் கின்றார். சிறுகதை, நாவல், இலக்கியம், கவிதை, ஓவியம், இலக்கிய விமர்சனம் போன்ற பலதுறைகளிலும் செல்வாக்குப் பெற்று விளங்கினார்.

(வளரும்)

# கேள்வி கேட்பதன் மூலம் மனிதன் தன்னைத் தானே அறிந்து கொள்கிறான்

கல்வி பயிலும் காலத்தில், விஞ்ஞானப் பாடத்தில் ஆசிரியர் எங்களைப் பார்த்துக் கேள்வி கேட்டார், ''நமது சூழலிலுள்ள பொருள்களை என்ன வகையாகப் பிரிக்கலாம்?'' நாமும் அந்நேரத்தில் மூளையைப் போட்டு உடைத்து ரொம்ப நேரத்துக்குப் பின் ''உயிர் உள்ளன, உயிர் அற்றன'' என விடை சொன்னோம். மேலும் விளக்கமாக அசையும் பொருள்கள், சடப் பொருள்கள் எனத் தெரிந்து கொண்டோம். பல கேள்விகள் கேட்பதன் மூலம்தான் நாம் வாழ்க்கையில் பல விளக்கங்களையும் தெளிவுகளையும் அறிவு சார்ந்த விடயங்களையும் பெற்றுக் கொள்கிறோம்.

கேள்வி கேட்பதன் மூலம் ஒரு மனிதன் தன்னைத் தானே அறிந்துகொள்கிறான். தினமும் மது பானம் அருந்தும் மனிதன் ஒருவன் ஒருநாள் ''குடி தேவை தானா?'' எனக் கேள்வி கேட்பானாயின், பல நன்மைகளைப் பெறமுடியும். கேள்வியால் சரி, பிழை என்பன அவனால் உணரமுடிகின்றது. இதனால் எதனைச் செய்ய வேண்டும், எதனைச் செய்யக்கூடாதென்ற தீர்மானத்தை அவனால் எடுக்க முடிகின்றது.

பல வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த ஷோக்கிரட்டீஸ் என்ற அறிஞர் ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகளை மனிதர்களைக் கேட்கச் சொன்னார். இந்தக் கேள்விகள் எம் மனக் கதவைத் திறக்கின்றன. இதனால் உள்ளே வெளிச்சம் போக அறியாமை என்கிற இருள் மெல்ல வெளியே போகின்றது. என்னதான் மனிதன் பல கதைகள் பேசி ஆட்டம் போட்டாலும், மனிதன் தனக்குள் அறிவுள்ளவனாக, சுய சிந்தனையும் ஞானமும் பெற்றவனாக இருந்தால் மாத்திரமே அவனால் அடுத்த கட்ட நகர்வை- தான் அடைய வேண்டிய குறிக்கோளை- தீர்மானித்து முயற்சிகள் செய்து தனது இலட்சியத்தை அடையமுடியும்.

எனவே மனிதர்கள் அப்பாவிகளாக- அறியாக் குழந்தைகளாக- அளவுக்கு மீறிய விசுவாசமும் தமக்கு உதவி செய்தவர்களைத் தெய்வங்களாக மனதில் நிறுத்திக் காலம் முழுவதும் துதிபாடிக் கொண்டு இருந்தால் விமோசனம் இல்லை. இப்போது கிணற்றுத் தவளைகள் கூட வெளியே வந்து கொண்டிருக்கின்றன. ஒரு மனிதனுக்கு அறியாமை என்னும் இருள்போக, வாழ்வு நிறைவு அடைய, அவனுக்கு எழுத்துப் படிப்பு முக்கியமானது. கட்டாயம் ஒரு மனிதன் படித்திருத்தல் அவசியமானதாகும்.

எமது கல்விச் சமூகத்தைச் சேர்ந்த அறிஞர்கள் பலர் அடிக்கடி இதைக் கூறி வருகிறார்கள். எமது சமுதாயத்தில் எவ்வளவு பேர் எழுதப்படிக்கத் தெரிந்திருக்கிறார்கள்? சமூகம் சார்ந்த சேவைகளில் ஈடுபடுபவர்கள் இதனைக் கண்டுகொண்டிருப்பீர்கள். கல்வியறிவு, படிப்பு வாசனை இல்லாத மனிதனால் நாம் நினைக்கும் எண்ணங்கள், செயற்றிட்டங்கள் சொல்லும் விடயங்கள் அவர்களுக்கு நாம் நினைக்கும் அளவுக்குச் சென்றடைகின்றனவா? உங்களுக்குத் தெரியும் அதில் உள்ள பிரச்சினையை....

தனது பிறப்பு மொழியைப் பேசுகின்ற மனிதன் அந்த மொழியை எழுதவும் படிக்கவும் தெரியாமல் தனது தேவைக்காகத் தனது பெயரை எழுத முடியாமல் இருப்பது எவ்வளவு கொடுமையான விடயம். சமூகம் சார்ந்த தனியார் நிறுவனங்கள் எத்தனை விடயங்களை மக்களுக்குச் சொல்லிக்கொண்டு போகின்றார்கள். நாட்டில் எத்தனை விடயங்கள் மறுபடியும் மறுபடியும் மக்களுக்குச் சொல்ல வேண்டியுள்ளது. எய்ட்ஸ் நோய் தொடங்கி குடிநோய்வரை நீண்டதாக உள்ளது.

தொல்புரம் சி.கதிர்காமநாதன்.

தனிய நாங்கள் திரையில் கலர் கலராகக் காண்பித்தும் மேடையில் பேச்சுக்களைப் பேசியும் மனிதர்களை மாற்றிவிட முடியுமா? சொல்லவந்த கருத்துக்களை, விடயங்களை அவர்கள் எவ்வளவு தூரம் ஏற்றுக் கொண்டு விளங்கிக் கொண்டார்கள் என்பதை நாம் உடன் அறிந்து கொள்ள முடியாது. நாம் சொல்லும் விடயங்களைத் துண்டுப் பிரசுரம், சிறு புத்தகங்கள் மூலம் கொடுத்தால் கல்வியறிவுள்ள அந்த மக்களால் எவ்வளவு விடயங்களை இரசித்துக் கொள்ள முடியும்.

நாம் என்ன விடயங்களைச் சொல்ல வருகிறோம் என்பதற்கு முன் அவர்களை நாம் என்ன விதத்தில் தயார்ப்படுத்தி வைக்கின்றோம்?. ஆனால், அவர்களுக்கு ''எழுத்தறிவு ஊட்டல்'' என்னும் தயார்ப்படுத்தலை மேற்கொண்டு கிராமம் கிராமமாகச் சென்றதை நமது தமிழ் நாட்டு எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வன் தனது நூலான 'இருளும் ஒளியும்' என்ற புத்தகத்தில் பல விடயங்களைச் சொல்கின்றார். அதில் வருபவை எல்லாம் அனுபவம் சார்ந்தவையாக உள்ளன.

அவர் மக்களுக்குச் சேவை செய்வதை விரும்பும் மனிதர்களை இணைத்து, அறிவொளி இயக்கம் என்பதை ஆரம்பித்து, அந்தத் தொண்டர்களோடு கிராமத்தில் மக்களைக் கால்நடையாக நடந்து (பல மைல் தூரங்கள் நடை பயில்வதன் மூலந்தான் கிராமத்தைத் தெரிந்து கொள்ளமுடியும் சொகுசு வாகனத்தில் போனால் தெருவைத்தான் பார்க்கமுடியும்) மக்களைத் தேடி இணைத்து எழுத்தறிவு புகட்டினார்கள். தனது பெயரைக் கடிதம் எழுத, கதையை வாசிக்க.... மக்களைத் தூண்டி இலக்கை அடைந்தார்கள். முதன் முதலாகத் தனது பெயரை எழுதிய மனிதனுக்கு மகிழ்ச்சி என்ன நிலையில் இருந்திருக்கும்?

அங்கே தெருவில் தர்ப்பூசணி விற்கும் பெண்ணுடன் நடந்த உரையாடலைப் பாருங்கள். ச. தமிழ்ச்செல்வனின் நடை தேவையானதுதானே. நீங்க யாருக்கு ஓட்டுப் போடப் போறீங்க? வாக்கு ஜெயலலிதா அம்மாக்குத்தான். ஏன்? நாங்க எப்பவுமே ரட்டை இலைதான். எம்.ஜி.ஆர் சொத்தையெல்லாம் ஜானகியம்மாவுக்கு எழுதி வைச்சார். இந்த அம்மாவுக்கு ஒண்ணுமே செய்யலியே? பாவம் இல்லியா? ஆனா இவங்களும் சசிகலாவும் உடம்பெல்லாம் தங்கமும் வைரமுமாய் போட்டு டி.வியிலே காட்டினாங்களே நீங்க பாக்கலியா?

எந்த டி.வி.யிலே காட்டினாங்க? சன் டி.வி.யிலே சன் டி.வி. யாரு டி.வி? யாரு டி.வின்ன என்ன?

அங்கதான் விசயமே இருக்கு சன்டிவியாரு டி.வி? கருணாநிதி டி.வி அவன் அப்படித்தான் காட்டுவான்.

யாரு டி.வி யாக இருந்தாலும் நகையாலே குளிப்பாட்டி வந்தது ஜெயலலிதா அம்மா தானே?

அங்கதான் சூது இருக்கு. அந்த நகை எல்லாமே கருணாநிதியோட நகை, இதை அம்மாவுக்குப் போட்டுவிட்ட மாதிரி டி.விக்காரன் படம் எடுத்திட்டான்.

அது எப்படியம்மா அவரு நகையைப் போட்டு படம் எடுக்க முடியும்? அதுதான் கருணாநிதியோட சாணக்கியம். கருணாநிதி லேசுப்பட்ட ஆளா?

அட தமிழ் மக்களே நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? எமது ஊருக்கு யார் வருவார்கள் என கேள்வி எழுகிறதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்ககால மக்கள் வாழ்வியல் [இல்] ஆடல்கள்



சங்ககாலம் எனக் கொள்ளப்படுகின்ற காலப்பகுதி தமிழ் நாட்டு வரலாற்றில் ''முந்து வரலாற்று காலம்'' (Early Historic Peried) என்று கூறப்படுகிறது. சங்க காலப் பகுதியாகக் கி.பி. முதலாம் நூற்றாண்டு தொடக்கம் 3 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி என வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். இந்தக் காலத்துக்குரிய நூல்களாகத் தொல்காப்பியம், 8 தொகை, 10 பாட்டு என்பன விளங்குகின்றன. இவற்றில் எட்டுத் தொகையில் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறனானூறு, பதிற்றுப் பத்து, ஐங்குறுநூறு, பரிபாடல், கலித்தொகை என்னும் எட்டு நூல்களும் பத்துப் பாட்டில் திருமுருகாற்றுப்படை, பொருணராற்றுப்படை சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநெல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் எனும் பத்து நூல்களும் அடங்குகின்றன. சங்கால மக்களின் வாழ்க்கை முறைமைகள் அக்கால புவியில் அமைப்புக்கு ஏற்ப வகைப்படுத்தப்பட்டு அமைந்திருந்தன. நில வேறுபாட்டுக்கு ஏற்ப ஐந்து பிரிவாக மக்கள் வாழ்ந்து வந்தாலும், அவர்களின் வாழ்க்கை முறைகள் பொதுவாக அகம், புறம் என்ற இரண்டினூடாக விளக்கப்படுகின்றன. இங்கு அகம் என்பது ஆண், பெண் காதல் உணர்ச்சியைக் களவு, கற்பு என்கின்ற இரு நிலைகளில் விவரித்துக் கூறுவதுடன், புறம் என்பது வீரதீரச் செயல்கள் அறம், தொழில் போன்றவற்றின் இயல்புகளை விளக்கிக் கூறுகின்றது.

இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடிகள் என்று கூறுவதற்கு இணங்க, சங்ககால மக்கள் அமைப்பு மன்னர் ஆட்சி, இயற்கை, புவியியல் மாற்றங்கள் என்பனவற்றை அந்தக்காலத்தின் இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. எனினும், சங்ககால மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கையும் இலக்கியங்களில் உள்ளது போன்றே அமைந்தது என்பதை உறுதியாகக் கூற முடியாது. ஏனெனில் புலவர்கள் பெரும்பாலும் தமது மனதிற்பட்டதை கற்பனையில் பாடியிருக்கக் கூடும். இருப்பினும், சங்க காலம் பற்றிப் புவியியலாளர்கள், அகழ்வராய்ச்சியாளர்கள் போன்றோரின் ஆய்வுகளும் முடிவுகளும் இலக்கியங்களுடன் ஒத்துப் போவதையும் காணலாம்.

ஆடற் கலையினுடைய ஆரம்பம் பற்றிய ஆய்வானது சமூக மானிடவியல் ரீதியாக மேற்கொள்ளப்படுவதால், மக்கள் வாழ்வியலுடனான கலை வெளிப்பாடுகளை அறிந்துகொள்ள முடிகிறது. அந்த வகையில் ஆடற் கலை பற்றிய தேடலைச் சங்ககால சமூக மானிடவியல் முறைகளில் இருந்து மேற்கொள்வது சிறந்தது. எனினும், இந்தக்காலத்து இலக்கியங்கள் இந்த ஆடல் சார்ந்த விளக்கங்களைக் கொண்டுள்ளதைக் காணலாம்.

சங்ககால மக்கள் வாழ்க்கை மன்னர் ஆட்சியின் கீழானது. வேட்டையாடல், விவசாயம், மீன்பிடி, தேன் இறக்கல் என்ற தொழில்களை முக்கிய தொழில்களாகக் கொண்டி ருந்தனர். இதன்போது நிகழும் அகம், புறம் சார்ந்த செயற்பாடுகள் மூலமாக மக்கள் ஆடிப்பாடி மகிழ்ந்த செய்திகளைக் காண்கின்றோம். ஐந்திணை மக்களினதும் அகத்திணை வாழ்க்கைப் பண்புகளில் காதல் பேசும் விதமாக ஆடல், இசை, வாத்திய இசை அதிகம் பயன்படுத்தப்பட்டதையும் புறத்திணை வாழ்க்கைப் பண்புகளில் வீரத்தின் எழுச்சியின் பொருட்டு ஆடல் நெறி புனைந்திருந்தமையையும் அறிகின்றோம்.

அநேகமாக சங்க காலத்து போர் மரபை ஒட்டியதாகத் துணங்கைக் கூத்து, குரவைக் கூத்து, களவேள்வி, வாடாவள்ளிக் கூத்து மற்றும் காதல் நோயால் மேற்கொள்ளப்பட்ட வெறியாடல் என்பன இந்தக் கால மக்கள் வாழ்வியலுடன் இணைந்திருந்த கூத்து வகைகள் ஆகின்றன.

(வளரும்)

**அ.உமாமகேஸ்வரி,**
உடுவில் தெற்கு, மானிப்பாய்.

# மழை விட்டும் தூவானம் போகவில்லை

கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியாரே நீதான் துணையென்று மன்றாடியவாறு அங்கிருந்த 'லொட்ஜில்' நானும் எனது நண்பனும் தங்கினோம்.

பிற்பகல் 4 மணியிருக்கும் ஹற்றன் நஷனல் வங்கியில் 'ஏ.ரி.எம்' கார்ட்டில் பணம் எடுக்கப் போன நண்பன் 5 மணியளவில் திரும்பி வந்தான். அவனது முகத்தில் பரிதவிப்பு படர்ந்திருந்தது. ஏதோவென்றைப் பறிகொடுத்த உணர்வு ஊசலாடியது; அத்தோடு ஒருவித அச்சமும் காணப்பட்டது.

''என்ன? ஏது?'' எனப் பதற்றத்துடன் கேட்டேன். மௌனம் தான் சில நிமிடங்கள் பதிலாக இருந்தது.

''என்ன நடந்தது ப்ளிஸ் சொல்லடா?''என்று மீண்டும் நெருக்கினேன்... நெருங்கினேன். நடந்ததை விவரித்தான்.

''ஏ.ரி.எம். இல் காசு எடுத்துக் கொண்டு வரும் போது வெள்ளை நிற அரைக்கை சேட்டுடன் தன்னை சி.ஐ.டி. என்று அடையாளப்படுத்திக் கொண்டு நெருங்கி வந்த நண்பர் என்னைப் பார்க்க எல்.ரீ.ரீ. போல இருக்கு விசாரிக்க வேணுமெண்டு ஓர் இடத்துக்குக் கூட்டிக் கொண்டு போனான். அவனைப் பார்க்க அப்படித்தான் தெரிஞ்சது...




முதலில பேர்ஸைத் தரச் சொன்னான். கொடுத்தேன். அதற்குள் இருந்து 5 ஆயிரம் ரூபாவை எடுத்துத் தன் பொக்கற்றுக்குள் வைத்தான். ''விசாரணை யெண்டியள் ஏன் காசை எடுத்தனீங்கள்?'' என்றதற்கு.... ''சத்தம் போடாதே 4 ஆம் மாடிக்கு ஏத்துவம்'' என்று மிரட்டினான்.

'' கையில் கிடக்கிற மோதிரத்தைக் கழற்றடா?'' ''அது என்ர எழுத்து மோதிரம் கழற்றக்கூடாது'' என்றேன். (அவனுக்குக் கடந்த ஆறு மாதத்துக்கு முன்னர்தான் பதிவுத் திருமணம் நடந்தது) மோதிரத்தைக் கழட்டித் தராட்டா உன்ர தலை வெழுத்தே மாறிவிடும்'' என்று மீண்டும் கடுந்தொனியில் அதட்டினான். (கொச்சைத் தமிழில் உரையாடினான்) வேறு வழியின்றி அதையும் கழட்டிக் கொடுத்துவிட்டேன்.

தன் பேர்ஸுக்குள் வேண்டி வைத்துக் கொண்டு 'எஸ்கேப்' ஆயிட்டான் என்று தழதழத்த குரலில், சோகம் ததும்பக் கூறி முடித்தான்.

''புலி இல்லையெண்டு அறிவிச்சாச்சுப் பிறகேன் எங்கட சனத்தைப் பிழியிராங்கள்'' என்று எனக்குப் பக்கத்தில் நின்று கதையைக் கேட்டுக் கொண்டிருந்த வயதில் மூத்தவர் கூறினார். பார்த்தீர்களா? மேற்படி சம்பவம் 26 ஆம் திகதி கொச்சிக்கடையில் இடம்பெற்றுள்ளது. சில நிமிடங்கள் புலியென்ற முத்திரை குத்திக் கையில கிடந்த ஒன்றரைப் பவுண் மோதிரத்தை களவாடிப் போட்டுட்டான்.

இப்படியான விடயங்கள் கொழும்பில நடக்குது பாருங்கோ. சிலதுகள் எங்கட கண்ணுக்கு எத்துப் படுகுது. மழை விட்டும் தூவானம் போகவில்லை. வேதாளம் மீண்டும் ஏறிட்டு துங்கோ!

புலியைச் சாட்டி முந்தி பிழைப்பு நடத்தினவை இப்பவும் அதே பாணியைத்தான் பின்பற்றுகினம். இதை விட்டால் அவர்களுக்கு ஏது வேறுவழி.

முப்பது வருட போரின் வலியைச் சுமந்த எம்மக்கள் இப்போதுதான் ஓரளவு நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதிகாரத்தால் மற்றவர்களைச் சுரண்டிப் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கும் சண்டித்தனக்காரர்களே! புலிச் சாயம் பூசி ஏற்கனவே பல உயிர்களைத் தின்றுவிட்டீர்கள். கப்பம் என்ற போர்வையில் பலரை ஏப்பம் விட்டுவிட்டீர்கள்.

இன்னுமா? உங்கள் வெறித்தனம் அடங்கவில்லை. எத்தனை காலம்தான் எம் மக்களை ஏமாற்றப் போகிறீர்கள்?

ஒருவருடைய ஏமாற்றம் என்பது மற்றவர்களுக்கொரு பாடமாக அமைய வேண்டும் என்பதற்காகவே இந்தச் சம்பவம் இங்கு சுட்டிக் காட்டப்படுகின்றது.

தமிழ் உறவுகளே! எதிலும் கொஞ்சம் அவதானமாக இருங்கள். ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களும் வாழத்தான் பார்ப்பார்கள்.

**கவிநேசன்**

# 'குடி' மகனே கேள்



ஊற்றி ஊற்றி ஏற்றியபின்
'எனக்கென்ன வெறியா...?'
எனப் போதையில் புலம்பும்
'பெரும்' குடிமகனே...!
உன்னால் எனக்கு வந்த
வேதனையைப் பார்!
சோதனையைக் கேள்!!

நோய்க்கு மருந்து செய்யப் புறப்பட்டால்...
கள்ளுச் சாராயம்
எத்தனை லீற்றர் அடிப்பீர்-?
இப்போதில்லா விடினும்
முன்பு இதெல்லாம் செய்தீரா-?

மண்டையில் சம்மட்டி கொண்டடிப்பது போல்
மருத்துவர் ஏவும் கேள்விக் கணைகள்
'ஷெல்' துண்டுகளாய்த் துளைத்தெடுக்கும்...
இத்தனையும் எனக்குத் தேவை தானா-?

குடித்தேனா... வெறித்தேனா...
கூத்தியருடன் கும்மாளமடித்தேனா-?

அட,பாவி மகனே!
தாம்பூலம் கூடத் தரிப்பவனல்லனே...

உனக்கு வருகின்ற நோய்
எனக்கு வரலாகாதா-?

விஞ்ஞானம் எங்கோ விண்ணை முட்டி விரிந்து பரந்து
உலகமே சுருங்கிக் கையகப்பட்ட போதும்
இப்படியொரு கேள்வியை மருத்துவர் எறிந்தால்
என்னிதயம் சுக்குநூறாய்ச் சிதறாதா-?

வருகின்ற நோய் பெரிதாயின்
எழுகின்ற வினாவும் அஃதே!
உண்மையை உரைப்பதும் நம் கடனே!!
குடிவகை இல்லையெனின்
இவை சாத்தியமிலவே!

'மதுவருந்தாதே... புகைப்பிடிக்காதே...
இவை சிறுகச் சிறுகக் கொல்லும்!'
அரசு அழுத்திச் சொல்லும்
தாரக மந்திரம் இதுவே!

ஊருக்கு உபதேசம் உரைக்கின்ற அரசே
மானிடனைச் சிறுகச் சிறுகக் கொல்வது
மதுவெனவறிந்தும் மதுபானச்சாலைகட்கு
அனுமதியளிப்பதேன்-?

என் செய்யலாம்-?
அரசுக்கு அதுவே வருமானமீட்டும்
இறைவரியாகும்!

போதையில் மூழ்க நீ விரும்பியிராவிடின்
மதுவகைதான் உற்பத்தியாகுமா?
எல்லாமே உன் குடியால் வந்த வினைதானே..!

வலியவரு நோயென்பதனால்
நானும் உன் குலத்தவனாவேனா-?

- கலா.மகேஸ்வரன்


# ஆற்றுப்படை

நான் பிறக்கும் போது
கத்திய கத்தல்கள் கூட
கவிதைகளாய்த் தான்
இருந்திருக்கும்
என்று நினைக்கிறேன்
அதன் அர்த்தம்
தெரிந்ததால்தான்
என் அம்மா
அடிக்கடி முத்தம்
தந்தாளோ தெரியவில்லை
குருடனாய் பிறந்திருந்தால்
கவிஞனாகியிருக்க மாட்டேன்
இப்போ கவிஞனானதால்
குருடனாக ஆசைப்படுகிறேன்
எத்தனையோ எழுதியும்
ஆற்றாமையே மிஞ்சியது

**யோகேஸ்வரன்,** நெடுந்தீவு-13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
04.05.1969

உதிர்வு:
28.04.2009

## அமரர் புஸ்பராசா உதயகுமார்

(இந்திரன்)

திதி: சதுர்த்தி 07.05.2011

இடிபோல் உன் செய்தி கேட்ட நாள்முதல் இன்றுவரை
ஈர விழிகள் இன்னும் காயவில்லை இதயத்தின் வேதனையும் தாழவில்லை
ஓயாத கடல் அலைபோல் ஓயவில்லை உன் நினைவலைகள்
காலமெல்லாம் எங்களுடன் கலந்திருப்பாய் என்றிருந்தோம்
பாதி வழியில் எமை தவிக்கவிட்டு அவசரமாய் சென்றதேனோ
ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கும்

(48,22,24)

இல.448/08, தருமபுரம் கிழக்கு,
தருமபுரம், பரந்தன். [#/578178]

பெற்றோர், மனைவி, பிள்ளைகள்,
சகோதரர் மற்றும் உறவினர், நண்பர்கள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

நன்றி நவிலலும்



தோற்றம்:
1940.05.15

மறைவு:
2011.04.07

## அமரர் நாகலிங்கம் முருகையா

கடந்த 07.04.2011 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் நாகலிங்கம் முருகையா அவர்களது மரணச் செய்தி அறிந்து சகல விதத்திலும் உதவி புரிந்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் நேரடியாகவும் தொலைபேசி, இணையத்தளம், துண்டுப்பிரசுரங்கள் மூலமும் அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (07.05.2011) சனிக்கிழமை பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

பருத்திக்கலட்டி, சுன்னாகம். [3864] (48,23,50)

# நினைவலைகள்

5 ஆம் ஆண்டு — 11 ஆம் ஆண்டு





தோற்றம்
04.11.1926

மறைவு
09.05.2008

## கனகரட்ணம் நாகம்மா

தோற்றம்
20.03.1913

மறைவு
18.12.2000

## முருகேசு கனகரட்ணம்

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் நீங்காது உங்கள் நினைவுகள் மண்ணில் நாங்கள் வாழும்வரை
எங்களுக்கு உயிர் தந்த எம் பெற்றோரே எப்படி மறப்போம் உங்களை நாம்?
காலங்கள் சென்றாலும் கனவுகள் கலைந்தாலும் கண்முன்னே நீராடுது உங்கள் நினைவுகள்
வற்றாது என்றென்றும் மாறாத பாசத்துடன் ஏங்கித் தவிக்கும்....

32, திருமகள் வீதி,
அரியாலை. (49,26,50) [3860]

உங்கள் பிள்ளைகள், மருமகள், மருமகன்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம்,
நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி ஆறுமுகம் சொர்ணம்மா அவர்களின்

# ஓராண்டு நினைவலைகள்



மண்ணின் மகளாக
பிறப்பு
16.04.1929

இறைவெளியுடன்
இணைவு
18.04.2010

திதி:
சதுர்த்தசி (07.05.2011)

மண்ணின் மகளானாய்
இல்லத்தின் தலைவியானாய்
இல்லறத்தில் உவமையானாய்
நன்மக்களுக்கு அன்னையானாய்
பேரப்பிள்ளைகளுக்குப் பாட்டியானாய்
பூட்டப்பிள்ளைகளுக்குப் பூட்டியானாய்
மொத்தத்தில் குல விளக்காய்......

பார் புகழ வாழ்ந்து இறை வெளியுடன் இணைந்த
எமது அன்னையின் ஓராண்டு நினைவலைகள்.
ஓர் ஆண்டென்ன உலகம் உள்ளவரை உங்கள்
நினைவுடனேயே நாங்கள்.......
"வாழ்க வையகம் வாழ்க வளமுடன்"
உங்கள் ஆத்மா முழுமைப் பேறடையப்
பிரார்த்திக்கும்.

(49,21,50)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

இல.160, (184) நாவலர் வீதி.
யாழ்ப்பாணம். [3763]

# 45 ஆம் நாள் நினைவலைகள்

## திருமதி J.நோர்லின்

(கணக்காளர்- ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
ஊர்காவற்றுறை)



முத்தாக
1978.08.14

வித்தாக
2011.03.24

காலை விடிந்ததும் எம்
கண்முன் நிற்பாய் பெரியவளே- இன்று
கண்விழித்துத் தேடுகின்றோம்-நீ
கானல் நீராய் ஆனதேனம்மா-உன்
கனவுகளுடன் எம்மை வாழ விட்டு
கடவுளிடம் சென்றதேனக்கா? -நாம்
கதறுகின்றோம் கண்ணீருடன்-உம்
கனிந்த முகம் காண்பதேப்போ-எங்கள்
அம்மா...!

இவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:
பிள்ளைகள்,
யேசுதாசன் குடும்பம்.

இல.69, முகாம் வீதி,
ஊர்காவற்றுறை. [3863] (49,21,50)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடபகுதியில் வைத்தியத்துறை அபிவிருத்தி செய்யப்படுமா...?

வட பகுதியிலிருந்து வைத்தியர்களாக வெளியேறுவோர் தமது பகுதிகளில் வைத்திய சேவையை முன்னெடுக்க வேண்டும் என்ற மன நிலையைக் கொண்டிருக்க வேண்டும்.

இவ்வாறான மனோநிலை ஏற்படாதவரை வடக்கு மாகாணத்திலுள்ள வைத்தியர் பற்றாக்குறைக்குத் தீர்வு காண்பது என்பது சிரமமானதாகும்.

வடக்கு மாகாண சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளமை அறிந்த விடயமே.

அமைச்சின் செயலாளரின் இந்தக் கருத்துத் தொடர்பாக முன்வைக்கப்படும் சில விடயங்களை ஆராய வேண்டியது காலத்தின் தேவையாகும்.

வட பகுதியில் வைத்தியர்களுக்கான பற்றாக்குறை நிலவுவது இன்று நேற்று மட்டும் உள்ள பிரச்சினை அல்ல. தொடர்கதையாகவே இது இடம்பெறுகிறது.

சுகாதார அமைச்சின் செயலாளர் கூறியுள்ள கருத்தைப் போன்றே காலாகாலமாக இடம்பெற்றுவரும் சுகாதார மருத்துவத்துறை சார்ந்த நிகழ்வுகளில் துறை சார்ந்த அதிகாரிகளாலும் அரசியல்வாதிகளாலும் வலியுறுத்தப்பட்டு வந்தது.

ஆனால், இன்றுவரை இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. அது தொடர்கதையாக முற்றுப் பெறாத ஒரு பிரச்சினையாக இருக்கிறது.

இந்த நிலையில் வைத்தியர்களின் மன நிலையில் மாற்றம் வேண்டும் என்று கூறிக் கொண்டிருப்பதால் மட்டும் எந்தப் பயனும் கிட்டப் போவதில்லை.

வட பகுதியில் உள்ள வைத்தியர்களில் அதிகமானவர்கள் தமது பகுதிகளில் தமது மக்களுக்கு சேவை வழங்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர்கள்தான்.

கடந்த கால மிகக் கொடூரமான யுத்தத்தின் மத்தியில்- பல்வேறு துயரங்களுக்கு மத்தியில்- மருத்துவப் படிப்பை நிறைவு செய்து வெளியேறியுள்ள வைத்தியர்களுக்குத் தமிழ் மக்களின் துன்ப, துயரங்கள் நன்கு தெரியும்.

சாவின் விளிம்பில் அவல வாழ்வு வாழ்ந்த மக்களுக்கு சேவை செய்யவேண்டும் என்ற மனோநிலை நிறையவே உள்ளது.

வைத்தியர்கள் பற்றாக்குறைக்கு உண்மையான காரணம் என்ன என்று கண்டறிந்து, அதற்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியம்.

வைத்தியர்கள் பற்றாக்குறை நிலவுவதற்கு வைத்தியர்களின் மனோநிலையே காரணம் எனக் கூறி சுகாதாரத்துறை அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் தப்பித்துக் கொள்ளமுடியாது.

வட பகுதியிலுள்ள வைத்தியசாலைகளில் சிறப்பான வைத்திய சேவையை முன்னெடுக்கக் கூடியதான வசதி வாய்ப்புகள், ஆளணி வளங்கள் உள்ளனவா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஆதார வைத்தியசாலைகள், பிரதேச வைத்தியசாலைகள், சுற்றயல் கூற்று வைத்திய சாலைகள் ஆகியவை வைத்திய சேவைக்கான வசதிகளையும் ஆளணி வளங்களையும் கொண்டிருக்கவில்லை.

இந்த நிலையில் ஏழு வருடங்களுக்கு மேலாக மருத்துவப் படிப்பைத் தொடர்ந்து வைத்தியர்களாக வெளியேறுவோர் மக்களுக்குச் சிறப்பான முறையில் வைத்திய சேவையை வழங்கவே விரும்புவார்கள்.

அப்படிச் சிறப்பான சேவையை வழங்குவதற்கு ஏற்றதாக வட பகுதி வைத்தியசாலைகள் இல்லை.

இதன் காரணமாகவே வைத்தியர்கள் வட பகுதியில் சேவையை முன்னெடுக்கத் தயங்குகின்றனர் என்ற கருத்தும் நிலவுகின்றது.

துறைசார்ந்த உயர் அதிகாரிகள் மற்றும் மக்களால் தெரிவு செய்யப்படும் அரசியல் பிரதிநிதிகள் வட பகுதி வைத்தியசாலைகளின் குறைபாடுகளைக் களைவதற்குத் தம்மாலான அர்ப்பணிப்பான ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டும்.

அரச அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் வட பகுதி வைத்தியசாலைகளில் உள்ள குறைபாடுகளைக் களைவார்களாயின் வட பகுதியிலுள்ள வைத்தியர்களில் அதிகமானவர்கள் தமது பகுதிகளில் சேவையை வழங்க முன்வருவார்கள்.

வட பகுதியிலுள்ள பிரதேச வைத்தியசாலைகள் பலவற்றில் தாதிய உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமலேயே இருக்கின்றன.

அத்துடன், மருத்துவ ஆய்வு கூடத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களும் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளன. ஆய்வுகூட வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

இந்த நிலைமைதான் ஆதார வைத்திய சாலைகளிலும் உள்ளன. அத்துடன் யாழ். போதனா

**உமா**

வைத்தியசாலையில் நீண்ட காலம் சேவையாற்றிவரும் வைத்தியர்கள் கூட அங்கிருந்து இடமாற்றம் பெற்று பிரதேச வைத்தியசாலைகளுக்குச் செல்லப் பின்னடித்து வருகின்றனர். ஏன் என்றால் வட பகுதியிலுள்ள போதனா வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளில் ஓரளவேனும் சிறப்பான முறையில் வைத்திய சேவையை வழங்க முடியாது எனக் கருதியே இடமாற்றம் பெற்றுச் செல்லப் பின்னடிக்கிறார்கள்.

கிளிநொச்சி, முல்லைத் தீவு ஆகிய பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளுக்கு வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தங்குவதற்கு விடுதி வசதி இல்லை.

தென்பகுதி வைத்தியசாலைகளில் கடமையிலுள்ள வைத்தியர்களுக்குக் கிடைக்கும் வசதி வாய்ப்புக்கள், ஊக்குவிப்புகளை வடபகுதி வைத்தியசாலைகளில் சேவைசெய்து வரும் வைத்தியர்களுக்குக் கிடைக்க வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலமே வட பகுதியில் நிலவும் வைத்தியர்கள் பற்றாக்குறைக்குத் தீர்வு காணமுடியும்.

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது வல்வெட்டித்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் எஸ்.மயிலேறுபெருமாள் கருத்துக் கூறும்போது, பிரதேச, ஆதார வைத்தியசாலைகளுக்கு வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தியிருந்தார்.

வட பகுதியிலுள்ள பிரதேச, ஆதார வைத்தியசாலைகளில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி அவற்றுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சுகாதார அமைச்சு அந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு வட பகுதி வைத்தியத் துறையுடன் தொடர்புடைய அதிகாரிகள் அரசியல் வசதிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதன் மூலமே வட பகுதியில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறைக்குத் தீர்வுகாண முடியும். இந்த விடயம் தொடர்பாக வடக்கு மாகாண சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு உரிய நடவடிக்கை எடுக்குமா?

# 29 ஆண்டுகள் நிறைவில் துர்க்கா மகளிர் இல்லம்

வானுயர்ந்த கோபுரங்கள் அமைத்து குதூகலிப்பதைக் காட்டிலும் வானமே கூரையாக மழை, காற்று, வெயில் ஆகிய விருந்தினர்கள் அடிக்கடி சென்று வருகின்ற குடிசைகளை சீரமைத்து அங்கு வாழும் மக்களின் வாழ்வாதாரத்துக்கு ஆதாரம் தேடும் கைங்கரியங்களை எமது சமயம் மேற்கொள்ள வேண்டும். ஆலயங்கள் வெறுமனவே பூசை வழிபாடுகளோடு நின்றுவிடாது அது சார்ந்து இருக்கின்ற சமூகத்திற்கு வழி காட்டுகின்ற ஒளி ஊட்டுகின்ற உயர்ந்த நிறுவனமாகத் திகழவேண்டும்.

சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டது போல் ''சமயம் வாழ வேண்டுமானால் சமூகம் வாழ வேண்டும்'' அந்த வகையில் ஆலயத்தினூடாக சமூகப் பணியில் தம்மை இணைத்துள்ள தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தின் பணிகள் பல்வேறு வடிவங்களில் பரிணாமம் பெற்றிருக்கின்றன. அந்த வகையில் அங்கு மேற்கொள்ளப்படுகின்ற சமூகப்பணிகளில் ''துர்க்கா மகளிர் இல்லம்' தன்னை சமூக நீரோட்டங்களில் முழுமையாக இணைத்துள்ளது.

ஒரு பெண் கல்வியை கற்றுக் கொண்டால் ஒரு சமூகம் கல்வியைக் கற்றுக் கொண்டதற்குச் சமம் என்பார்கள். அதனைக் கருத்திற் கொண்டு சிறிய வயதில் தாய், தந்தையரை இழந்து அல்லது ஆதரவு அற்று ஏதிலிகளாகத் தவிக்கின்ற ஐந்து வயதுக்குட்பட்ட பெண் பிள்ளைகளைத் தத்தெடுத்து அதனூடாக எமது சமயத்துக்கும் சமூகத்துக்கும் ஒரு ஆரோக்கியத்தை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையில் சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி, தங்கம்மா அப்பாக்குட்டி 1952 ஆம் ஆண்டு ஸ்தாபித்த இல்லமே துர்க்கா மகளிர் இல்லம்.

உள்ளத்தில் நல்ல சிந்தனையோடு தொடங்கும் எக்காரியமும் தோற்றுப் போகாது என்பதற்கு இணங்க ஆறு பெண்பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த இல்லம் இன்று 158 பெண் சிறார்களை அரவணைத்து அறிவூட்டி அவர்களின் வாழ்வுக்கு வழிகாட்டி வருகின்றது.

இந்தப் பிள்ளைகளுக்கு சகல வசதிகளையும் ஏற்படுத்தி கல்வி, இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பிள்ளைகள் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள ஆரோக்கியமான அமைதியான ஒரு சூழலில் இந்த நிறுவனம் அமைந்துள்ளது. மல்லாகம் சிவத்தமிழ் வித்தியாலயம், சைவப்பிரகாச வித்தியாலம் ஆகியவற்றில் ஆரம்பக்கல்வியையும், மருதனார் மட இராமநாதன் மகளிர் கல்லூரியில் உயர் கல்வியைத் தொடரவும் வசதிகள் உரியமுறையில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த மாணவர்கள் விளையாட்டு, கல்வி, கலை எனப் பல்வேறு துறைகளில் தமது சாதனைகளை நிலைநிறுத்தி வருகின்றனர். அத்துடன் பல்கலைக் கழகப் பட்டப்படிப்பு, கல்வியியல் கல்லூரி என உயர் கல்விச் சாலைகளையும் இவர்கள் அலங்கரிக்கின்றனர். எல்லாத் துறைகளிலும் மாணவர்களை மிளிர வைத்து ஒழுக்கத்தில் மேன்மையுற்றவர்களாகவும் சைவ சமயத்தின் அடையாள சின்னங்களாகவும் இந்த மாணவிகளை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஒரு தாயாக இருந்து அரவணைத்து நெறிப்படுத்தினர். இந்த நிலையில் 2008 ஆம் ஆண்டு சிவத்தமிழ்ச் செல்வி இறையடி இணைந்தார்.

அவரது இழப்பு இந்த இல்லத்துக்கு மட்டுமல்ல, தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்துக்கு மட்டுமல்ல சைவ சமயத்துக்கே பேரிழப்பானது.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் சிறந்த ஆன்மீகவாதியாக இருந்து சமய, சமூகப் பணிகளை பல்வேறு தளங்களில் மேற்கொண்டு வருகின்ற செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் ஆலயத்தையும் அதைச் சார்ந்த இந்த இல்லத்தையும் பொறுப்பேற்றுக் கொண்டார். தான் வெளிநாடு செல்கின்ற போதெல்லாம் அங்கு நடத்துகின்ற ஆன்மீகப் பேருரைகளில் ஈழத்தில் சைவ மக்களின் தேவைகள் அதனை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்பது குறித்தெல்லாம் புலம்பெயர் உறவுகளுடன் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வார். அதன் பயனாக அந்த உறவுகளின் பேருதவிகள் எமது சமயத்துக்கு, சமூகத்துக்கு கிடைத்து வருகின்றன. எனவே துர்க்கா மகளிர் இல்லத்துக்கு இவரது வருகை மேலும் ஒரு படி எழிச்சியை ஏற்படுத்தியுள்ளது.

முள்ளிவாய்க்காலில் இறுதி யுத்தத்தின் போது தாய், தந்தையரை இழந்த 102 பெண் பிள்ளைகளை இந்த இல்லம் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. இதனால் அந்த இல்லத்துக்கு மாணவிகளுடைய எண்ணிக்கையும் அதிகரித்து நிற்கின்றது. அத்தோடு அவர்களுடைய தேவைகளை நிவர்த்தி செய்யப் பல்வேறு தேவைகளும் அதிகரித்து இருக்கின்றது. எதுவந்த போதும் இறை நம்பிக்கையோடு எதையும் செய்து முடிக்கலாம் என்ற மன உறுதியுடன் எந்தவித தளர்வும் இன்றி மகளிர் இல்லம் மிளிர்ந்து கொண்டிருக்கின்றது. ஆலயத்தின் ஊடாகக் கிடைக்கும் நிதியையும், புலம்பெயர் உறவுகளின் ஆதரவுக் கரங்களின் கொடையையும் எமது சமூக வள்ளல்கள் சிலரது அர்ப்பணிப்பான உதவிகளையும் ஒருங்கே இணைத்து இந்தப் பிள்ளைகளை எந்தவித குறைவுமின்றி அது ஒரு இல்லம் என்பதற்கு அப்பால் மங்கையர் வாழும் கோயில் என்று சொல்லும் அளவுக்கு திறம்பட இயக்கி வருகின்றது.

இங்கே வாழும் பிள்ளைகளுடைய எதிர்கால நலனுக்காகப் பல்வேறு வகையிலான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஒழுக்கம் நிறைந்த மங்கையர்களாக வளர்க்கப்படும் இந்தப் பிள்ளைகள் எதிர்காலத்திலும் எமது சமயத்தின் மேல் பற்றுள்ளவர்களாகவும் சமூகத்தில் அக்கறை உள்ளவர்களாகவும் திகழவேண்டும். எனவே தான் ஒழுக்கத்தில் சிறந்த ஆண்கள் இங்குள்ள பிள்ளைகளை திருமணம் செய்ய முன் வருகின்ற போது துர்க்கையம்மனின் ஆசியுடன் அந்த இல்லத்தின் ஊடாக வழங்கக் கூடிய வரதட்

**அபிமானன்**

சணையை வழங்கி அவர்களை இல்லற பந்தத்திலும் இணைத்து வைக்கின்ற கைங்கரியங்கள் மேற்கொள்ளப்படுவதாக செஞ்சொற் செல்வன் ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.

இன்றைய தினம் 29ஆம் ஆண்டை நிறைவு செய்கின்ற துர்க்கா மகளிர் இல்லம் மென் மேலும் வளர்ச்சிபெற்று எமது சமூகத்துக்கு ஆரோக்கியமான, புனிதமான பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்று வாழ்த்திக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடாபியை கொல்வது எமது நோக்கமல்ல: பிரான்ஸ் வெளியுறவுத்துறை தெரிவிப்பு

லிபிய அதிபர் கடாபியையோ அவரது குடும்பத்தின ரையோ கொல்வது எங்கள் நோக்கம் அல்ல என்று பிரான்ஸ் வெளியுறவுத் துறை அமைச்சர் அலைன் ஜீபே தெரிவித்தார்.

லிபியாவில் கடந்த 42 ஆண்டுகளாக சர்வாதிகார ஆட்சி நடத்தும் கடாபிக்கு எதிராக பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி போராட்டம் வெடித்தது.

இந்தப் புரட்சிப் போராட்டத்தை ஒடுக்கத் துருப்புகள் கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்துவதில் ஆயிரக்கணக் கான பொது மக்கள் கொல்லப்படுகின்றனர்.

அப்பாவி மக்களை பாதுகாக்கும் நடவடிக்கையாக பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா, கனடா படைகள் லிபியாவில் முகாமிட்டுள்ளன.

லிபிய ராணுவத்திற்கு எதிராக கூட்டுப் படைகள் நடத்திய தாக்குதலில் கடாபியின் மகன் செய்ப் கொல்லப்பட்டார். அவர் கொல்லப்பட்ட விவகாரம் கூடுதல் பாதிப்பாக உள்ளது என்று பிரான்ஸ் தெரிவித்தது. (ம)



பிரேசிலில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஜேர்மனி அதிபர் கிறிஸ்டியன் ஊல்ப்(இடது) பிரேசில் தலைநகர் பிரேசிலியாவில் உள்ள பிளானல்டோ அரண்மனையில் அதிபர் டில்மா ரூஷெப்பை சந்தித்தார்.

# கனடாவில் உள்ள அமெரிக்க தூதரகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது

கனடாவில் உள்ள ஆர்.சி.எம்.பிக்கு கடந்த 2004 ஆம் ஆண்டில் அல்கொய்தா தலைவர் பின்லேடனுடன் தொடர்புடைய நபர் ஒரு மர்மக்கடிதம் அனுப்பினார்.

அந்தக் கடிதத்தில் மொன்றில் மெட்ரோ சிஸ்டத்திலும், கனடாவில் உள்ள அமெரிக்க தூதரகத்திலும் வெடிகுண்டு வைத்து இருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்த ரகசியத் தகவல் அமெரிக்க தூதரகம் மூலம் அமெரிக்க தலைமையகத்துக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த தகவலை ஜூலியன் அசாஞ்சேயின் விக்கிலீக்ஸ் இணையத்தளம் தற்போது வெளியிட்டுள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் திகதி கடிதத்தால் அதிர்ச்சி அடைந்த அமெரிக்கா தனது தூதரகத்தில் பாதுகாப்பை பலப்படுத்தியது. இது போன்ற மிரட்டல் கடிதங்கள் தொடர்ந்து வருகின்றன. இருப்பினும் இந்த கடிதத்தில் நம்பகத் தன்மை இல்லை. எனவே பயப்பட வேண்டாம் என ஆர்.சி.எம்.பி. குறிப்பிட்ட போதும் அமெரிக்கா இதனை ஏற்காத நிலையில் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டன.

**விக்கிலீக்ஸ் அதிர்ச்சித் தகவல்**

மர்மக் கடிதம் பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்டிருந்தது. மொன்றிலில் உள்ள ஆர்.சி.எம்.பி தலைமை அலுவலகத்துக்கு இந்த மர்மக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அந்தக் கடிததத்தில் மர்ம நபரின் பெயரும் அவரது கைத்தொலைபேசி எண்ணும் குறிப்பிடப்பட்டிருந்தது.

கடிதத்தை எழுதிய நபர் தான் ஒசாமா பின்லேடனின் அல்கொய்தா இயக்கத்தை சேர்ந்தவர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. (ம)

# சுவிஸ் வங்கிகளில் கடாபி வைப்புச் செய்யவில்லையாம்

சுவிஸ் வங்கிகளில் லிபிய அதிபர் முஹம்மர் கடாபி பணம் எதனையும் வைப்புச் செய்யவில்லை என்று அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதிபர் கடாபியின் சொந்தப் பணம் சுவிஸ் வங்கிகளில் கிடையாது என தெரிவித்துள்ளது.

கடாபி மற்றும் அவரது சகாக்களினால் சட்டவிரோதமான முறையில் சுவிஸ் வங்கிகளில் 360 மில்லியன் சுவிஸ் பிராங்குகள் பெறுமதியான பணத்தை வைப்புச் செய்திருக்கலாம் என அண்மையில் தகவல்கள் வெளியாகி யிருந்தன.

எவ்வாறெனினும் லிபிய அரசின் 25 மில்லியன் சுவிஸ் பிராங்குகள் பெறுமதியான சொத்துக்கள் சுவிஸில் காணப்படுவதாக அந்த நாட்டு பிரதி வெளிவிவகார அமைச்சர் காலட் காயிம் தெரிவித்துள்ளார்.

லிபியாவுக்கும், சுவிஸுக்கும் இடையில் முறுகல் நிலைமை ஏற்பட்டதனைத் தொடர்ந்து ஐந்து பில்லியன் சுவிஸ் பிராங்குகள் பெறுமதியான பணத்தை லிபியா மீளப் பெற்றுக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மரண அறிவித்தல்

### தியாகராஜா தியாகேஸ்வரிஅம்மா



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் யோகபுரம், மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா தியாகேஸ்வரி அம்மா 04.05.2011 புதன்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா-நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், தியாகராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நவமணி மற்றும் தர்மகுலசிங்கம், அருணகுலசிங்கம் காலஞ்சென்றவர்களான அழகுலசிங்கம், கருணாநிதி மற்றும் ஜெகதீசன், யோகலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04.05.2011 புதன்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.தியாகராஜா -கணவர்.
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
(3908) (39)

# பணிக்கு திரும்பிய ஜப்பான் அணு உலை ஊழியர்கள்

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட ஜப்பான் புகுஷிமா அணு உலை கட்டடத்துக்கு 3 மாதங்களுக்கு பின்னர் நேற்று முன்தினம் தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பினர்.

ஜப்பானின் மார்ச் 11ஆம் திகதி 9 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் அணு உலையைக் குளிர்விக்கும் குழாய் பகுதி செயல் இழந்ததால் ஹைதரசன் வெடிப்பு ஏற்பட்டு கதிர்வீச்சு பரவியது. இந்த நிலையில் அணு உலையின் கட்டடம் ஒன்றில் 12 தொழிலாளர்கள் பணிக்கு வந்ததாக அணு மின் நிலையத்தை நிர்வகிக்கும் ரோக்கியோ எலக்ட்ரிக் பவர் நிறுவனம் தெரிவித்தது. அணு உலையில் தற்போது கதிர்வீச்சு இல்லை. இதனை ரோபோ மூலம் பிடிக்கப்பட்ட படம் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.- என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் மாட்டின் லேனில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 6அடி நீளமான D-பிறிஜ்ஜும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 0750407723

**இறைச்சிக் கோழி விற்பனை**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.




சீட்டிழுப்பு இலக்கம் 747 திகதி 05-05-2011

வெற்றி எண்கள்

ஆங்கில எழுத்து
12 14 27 52 H

ஜக்பொட் பரிசு ரூ. 10,000,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 10,000,000/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 17 | 2,000/= | 34,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 395 | 1,000/= | 395,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 654 | 1,000/= | 654,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16108 | 60/= | 966,480/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7574 | 40/= | 302,960/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 190492 | 20/= | 3,809,840/= |
| | | மொத்தம் ரூ. 6,962,280/= | |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகளை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கம்பஹா | 701014639-3-43 |
| புத்தளம் | 701007273-0-20 |
| மொனராகலை | 701000653-4-14 |
| அம்பாந்தோட்டை | 701006947-4-24 |
| மாத்தளை | 701013958-4-24 |
| கம்பஹா | 701015985-0-20 |
| பதுளை | 701005313-1-41 |
| களுத்துறை | 701009112-0-20 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,362,280/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 10,516,180/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2011 மே 09 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

NOTICE

CITY COLLEGE OF ENGLISH

இது வரை காலமும் British College of English என்ற பெயருடன் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த எமது நிறுவனம் City of London College உடன் இணைந்து பல்வேறு கல்வி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இருப்பதால் மே மாதம் 16ம் திகதியிலிருந்து City College of English என்ற பெயரில் கல்வி நடவடிக்கைளை மேற்கொள்வோம் என மாணவர்களிற்கும், பெற்றோர்களுக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

CITY COLLEGE OF ENGLISH
Affiliated With

UNIVERSITY of CAMBRIDGE ESOL Examinations
English for Speakers of Other Languages
City & Guilds
BRITISH COUNCIL

DIRECTORS

Mr.K.NAGARAJAN. B.A (cey)
* M.A (Kelaniya)
* TKT (Cambridge. UK)

Rev. Fr. A. SAHAYATHASAN
* Bachelor of Arts (English), University of Jaffna.
* Master of Arts (English Literature), University of Sydney, Australia.
* Master of Arts (50% research, English Literature), Griffith University, Australia.

கடந்த 08 வருடங்களாக நூற்றுக்கணக்கான மாணவர்கள் எமது கல்லூரியில் படித்து சர்வதேச சான்றிதழ்களை பெற்றிருக்கிறார்கள். வருங்காலங்களிலும் தொடர்ந்தும் எமது பணியை செய்வோம் என உறுதிகின்றோம்.

City College LONDON



CITY COLLEGE OF ENGLISH
143, Adiyapatham Road,
Thirunelvely.
0213216027, 0778803887

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்லேடனைக் கொன்ற கொமாண்டோ பிரிவு படைச் சிப்பாய்களைச் சந்திக்கிறார் ஒபாமா

வாஷிங்டன், மே 07

சர்வதேச தீவிரவாதி பின்லேடன் கடந்த திங்கட்கிழமை பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் அருகிலுள்ள அபோதாபாத்தில் தங்கியிருந்தபோது அமெரிக்கப் படை சுட்டுக் கொன்றது.

நியூயோர்க் வர்த்தக மைய கட்டடத் தகர்ப்பைத் தொடர்ந்து 10 ஆண்டுகளாகப் பின்லேடனைத் தேடி வந்தது. தற்போது பின்லேடன் கொல்லப்பட்டதால் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும், அமெரிக்க மக்களும் நிம்மதி பெருமூச்சு விட்டனர். நியூயோர்க் கட்டடம் தரை மட்டமான இடத்தில் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டு உள்ளது. அங்கு ஜனாதிபதி ஒபாமா வியாழக்கிழமை மலர் வளையம் வைத்து பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

நியூயோர்க் தாக்குதலில் பலியானவர்களின் குடும்பத்தினரையும் ஒபாமா சந்தித்து ஆறுதல் கூற திட்டமிட்டுள்ளார். இதற்கிடையே பின்லேடனை தாக்கி அழித்த அமெரிக்க கடற்படையின் கொமாண்டோ பிரிவுத் தலைவர் அட்மிரல் வில்லியம், வாஷிங்டனில் ஜனாதிபதி ஒபாமாவை சந்தித்தார். அப்போது பின்லேடன் மீதான தாக்குதல் விவரங்களை விளக்கினார். அதே வேளை, படைச் சிப்பாய்களையும் அவர் சந்திக்கவுள்ளார்.

# ஆப்கன் புலனாய்வு அதிகாரிகள் முன்கூட்டியே தகவல் சேகரிப்பு

காபூல், மே 07

கடந்தாண்டு ஓகஸ்ட் மாதம் ஒசாமா பின்லேடன் தங்கியிருந்த வீட்டை அல்- குவைதா தீவிரவாதிகளுக்குப் பாதுகாப் பான இடம் என்று ஆப்கன் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், இந்த வீட்டில் தலிபான் பயங்கரவாத அமைப்பு கொமாண்டர் மவ்லி அப்துல் கபீர் வசித்து வருகிறார் என்றே அவர்கள் கருதி உள்ளனர். அபோதாபாத் அருகில், ஹர்ல்பூரிலுள்ள அகதிகள் முகாமில் தங்கி, இந்த வீட்டின் இரகசியங்களை ஆப்கன் முகவர்கள் திரட்டி வந்துள்ளனர். உலக நாடுகளின் கோபம் தற்போது பாகிஸ்தான் பக்கம் திரும்பியுள்ளது. இந்த நிலையில், பாகிஸ்தானின் இராணுவ தலைமை ஜெனரல் அஷ்பாக் பர்வேஸ் கயானி, ஐ.எஸ்.ஐ. தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் அகமது ஷூஜா பாஷா ஆகிய இருவரும் அமைதி காத்து வருகின்றனர். இது தொடர்பாக, ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரியைச் சந்தித்து ஆலோசனைநடத்தினர்.

இதுகுறித்து பாகிஸ்தான் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் பிர்டஸ் ஆசிக் அவான் கூறுகையில், ''மலைப்பகுதி என்பதாலும், மரத்திற்கு மேல் பறந்து சென்றதாலும் ரேடாரின் கண்காணிப்பிலிருந்து அமெரிக்க ஹெலிக்கொப்டர்கள் தப்பிவிட்டன'' என்று தெரிவித்துள்ளார்.



இத்தாலி நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், ரோம் நகரில் பிரதமர் சில்வியோ பெர்லஸ்கோனி(வலது)யை சந்தித்தார்.

# பாக்.புலனாய்வுத்துறை தோல்வி: உயர்மட்ட விசாரணை அவசியம்

## முன்னாள் ஜனாதிபதி முஷாரப் சீற்றம்

வாஷிங்டன், மே 07

''அல்-குவைதா தலைவர் ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் தங்கியிருந்தார் என்ற தகவல் எனக்கு ஆச்சரியம் அளிக்கிறது. பாகிஸ்தான் புலனாய்வுத்துறையினரால் இதைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

புலனாய்வுத்துறையின் இந்தத் தோல்வி குறித்து விசாரணை நடத்த வேண்டும் என பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப், தனியார் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியதாவது:-

அல்-குவைதா தலைவர் பின்லேடன், பாகிஸ்தானில் இராணுவப் பாதுகாப்பு மிகுந்த அபோதாபாத் நகரில் தங்கியிருந்தார் என்ற தகவல் எனக்கு ஆச்சரியம் அளிக்கிறது.

இது பற்றிய எந்தத் தகவலும், பாகிஸ்தான் புலனாய்வுத்துறைக்குத் தெரியாமல் போனது ஆச்சரியமாக உள்ளது. புலனாய்வுத் துறையின் இந்தத் தோல்வி குறித்து, உயர்மட்ட அளவிலான விசாரணை நடத்த வேண்டும். பின்லேடனுக்கு பாகிஸ்தான் இராணுவமோ, பாகிஸ்தான் உளவுத்துறையோ அடைக்கலம் கொடுத்து, ஆதரவு அளித்திருக்கக் கூடும் என்பதை என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை.

இதுபற்றிய தகவலைக் கண்டுபிடிக்க முடியாமல் போனதற்கான பொறுப்பு புலனாய்வுத்துறையினருக்குத்தான் உள்ளது. இதில், தொடர்புடையவர்களைக் கண்டுபிடித்து, சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும்.

பாகிஸ்தான் அரசின் அனுமதி பெறாமல் அங்கு ஊடுருவி தாக்குதல் நடத்திய அமெரிக்காவின் நடவடிக்கை கண்டனத்துக்குரியது. இது, பாகிஸ்தானின் இறையாண்மையை மீறிய செயல். - என்று முஷாரப் கூறியுள்ளார்.

# ஒசாமா குறித்த விசாரணையை ஏற்றது பாகிஸ்தான் இராணுவம்

வாஷிங்டன், மே 07

இஸ்லாமாபாத் அருகே கொல்லப்பட்ட தீவிரவாதி ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் வசித்துவந்தமை தொடர்பான விசாரணையை பொலிஸாரிடமிருந்து பாகிஸ்தான் இராணுவம் ஏற்றது.

ஒசாமா வீட்டின் பக்கத்து வீட்டுக்காரர் உட்பட 11 பேரைக் காவலில் எடுத்து விசாரித்து வருகிறது. இஸ்லாமாபாத் அருகே இராணுவக் கோட்டை யாக விளங்கும் அபோதாபாத்தில், உலகின் 'நம்பர் வண்' தீவிரவாதி ஒசாமா பின்லேடனை அமெரிக்கா சுட்டுக் கொன்றது.

இச்சம்பவத்தால், பாகிஸ்தான் அரசும், இராணுவமும் அதிர்ச்சியில் உள்ளன. ஆரம்பத்தில் இது தொடர்பான விசாரணையை பொலிஸார் மேற்கொண்டனர். தற்போது, இராணுவம் விசாரணைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது என பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விசாரணையின் முதல் கட்டமாக, ஒசாமா வசித்த வீட்டின் பக்கத்து வீட்டுக்காரர் உட்பட 11 பேரை இராணுவம் காவலில் எடுத்து விசாரித்து வருகிறது. பக்கத்து வீட்டுக்காரர் ஒசாமா வீட்டுக்கு அடிக்கடி சென்று வந்துள்ளார்.

ஹிஸ்புல் முஜாகிதீன் பயங்கரவாத இயக்கத் தலைவர் சயித் சலாவுதீன் பயன்படுத்தி வந்த வீடு, பாதுகாப்பு வசதிகளுக்காக ஒசாமாவுக்கு அளிக்கப்பட்டது என கனடா பத்திரிகை செய்தி வெளியிட்டது.

# கினியாவில் இனக்கலவரம்: 26 பேர் பலி

ஆபிரிக்க நாடான கினியாவில் இடம்பெற்ற இனக் கலவரத்தில் 26 பேர் கொல்லப்பட்டனர். 100இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். கினியாவின் தென்கிழக்கு மாகாணமான கேலாபையோக் நகரில் கடந்த செவ்வாயன்று கிப்ளீஸ் எனும் இனத்தவருக்கும், மலின்கீஸ் எனும் இனத்தவருக்கும் மோதல் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து இருதரப்பிலும் ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டதில் 26 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 10 பேர் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டனர் என கேலாப்பையோ நகர பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

காயமடைந்தவர்கள் கிரிக்கோர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். சம்பவ இடத்தில் தற்போது பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

# பின்லேடனை காட்டிக் கொடுத்தது தீவிரவாதி ஜவாஹிரியின் ஆள்களா?

## பதவிப் போட்டியால் கசிந்தது ரகசியம்

துபாய்,மே 07

அல்-குவைதா தலைவர் பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டமை குறித்து தினமும் புது புதுத் தகவல்கள் வெளியாகின்றன. பின்லேடன் கொல்லப்பட்டமை தொடர்பான தகவல்கள், படங்கள் ஆகியவற்றை வெளியிட அமெரிக்கா திட்டவட்டமாக மறுத்துவிட்டது.

இதனால் வளைகுடா நாட்டு தொலைக்காட்சிகளும், பத்திரிகைகளும் பல்வேறு தகவல்களை வெளியிடுகின்றன.

அல்-குவைதா இயக்கத்தில் நடந்த பதவிப்போட்டி காரணமாக பின்லேடன் பதுங்கி இருந்த இடத்தை அமெரிக்க உளவுத்துறை மிக மிக எளிதாக கண்டுபிடித்து விட்டது என சவூதி பத்திரிகை ஒன்றில் தகவல் வெளியாகியுள்ளது.

இது இஸ்லாமிய நாடுகளில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அல்-குவைதா இயக்கத்தில் பின்லேடனுக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் இருப்பவர் அய்மன் அல்-ஜவாஹிரி. இவர் எகிப்திலுள்ள அல்-குவைதா படைப் பிரிவுக்குத் தலைமையேற்று நடத்தி வருகிறார்.

2004ஆம் ஆண்டு பின்லேடன் உடல்நலக் குறையால் பாதிக்கப்பட்டார். அப்போது அல்-குவைதா இயக்கத்தை தன் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டுவர அல்-ஜவாஹிரி முயன்றார்.

இதனால் பின்லேடனுக்கும் ஜவாஹிரிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அல்-குவைதா இயக்கத்தில் ஜவாஹிரிக்கு ஆதரவாக உலகின் பல நாடுகளில் ஆதரவாளர்கள் உள்ளனர். அவர்கள்தான் அமெரிக்கப் படைகளிடம் பின்லேடனை சிக்க வைக்க திட்டமிட்டு அந்தச் சதியை மெல்ல, மெல்ல அரங்கேற்றியுள்ளார்கள்.

ஆப்கானிஸ்தான் எல்லையில் பழங்குடி இன மக்கள் ஆதரவுடன் மிகப் பாதுகாப்பாக இருந்த பின்லேடனை அபோதாபாத் நகர பங்களாவுக்குள் கொண்டு வந்ததே ஜவாஹிரி ஆள்கள்தான். அந்த விடயத்தில் ஜவாஹிரி ஆள்களின் வார்த்தையை நம்பி பின்லேடன் ஏமாந்து விட்டார் எனக் கூறப்படுகிறது.

அமெரிக்கப் படைகள் அதன் பின்னர் ஒரு கூரியர் தபாலை வைத்து பின்லேடன் மறைவிடத்தை கண்டுபிடித்தனர். அந்த கூரியர் தபாலை பின்லேடன் பெயரிட்டு அனுப்பியது ஜவாஹிரியின் வலதுகரமாகத் திகழ்ந்தவர் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தவிர பின்லேடன் அபோதாபாத் நகரில் பதுங்கி இருக்கும் தகவலை ஜவாஹிரி ஆதரவாளர்களில் ஒருவரான சைக் அல்-அடேல் என்பவர்தான் கசியவிட்டார் எனத் தெரிய வந்துள்ளது.

இதற்காகவே அவர் கடந்த ஆண்டு ஈரானிலிருந்து பாகிஸ்தானுக்குள் வந்தார் எனக் கூறப்படுகிறது.

அல்-ஜவாஹிரியும், அவரது ஆதரவாளர்களும் திட்டமிட்டு இரகசிய சதியை அரங்கேற்றிவிட்டனர் என சவூதி பத்திரிகையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து அல்-குவைதா சார்பில் இதுவரை எந்த மறுப்பும் வெளியிடவில்லை. பின்லேடன் தொடர்பான இந்தப் புதிய தகவல் அரபு நாடுகளில் பரபரப்பை உண்டாக்கி இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு- கிழக்கு மாகாணங்களை இணைத்து தமிழகப் பாணியில் உரிமைகள் வழங்கவேண்டும்

## மா.கம்யூ.மாநிலச் செயலர் வலியுறுத்து

திருச்சி, மே 7

தமிழர்கள் வாழும் வடக்கு, கிழக்குமாகாணங்களை இணைக்க வேண்டும். சட்டம், ஒழுங்கு, சுகாதாரம், கல்வி போன்ற அனைத்து உரிமைகளை தமிழர்களுக்கும் வழங்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் ஜி. ராமகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவில் தமிழ்நாடு, கேரளம், மேற்குவங்கம், அசாம் போன்ற மாநிலங்கள் இருப்பதைப் போல இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிக்கு உரிய அந்தஸ்து வழங்க வேண்டும்.

இலங்கைத் தமிழர் உரிமைகளைப் பாதுகாக்க இந்திய அரசு தலையிட வேண்டும் என்பதை வலியுறுத்தி, திருச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற அந்தக் கட்சியின் ஆர்ப்பாட்டத்தில் அவர் மேலும் பேசியபோது:

இலங்கையில் போர் முடிந்து இரண்டு ஆண்டுகள் முடிந்தும் தமிழர் களுக்கு பாதுகாப்பற்ற நிலை தொடர்வது குறித்து தி.மு.க. மௌனம் சாதிக்கக் கூடாது.

இலங்கையில் மனித உரிமை மீறப்பட்டுள்ளது. தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மருத்துவமனைகளும் தாக்குதலுக்குள்ளாகியிருக்கின்றன. இவையனைத்தும் ஐ. நா. சபையின் ஆய்வறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளன.

எதிர்வரும் 13 ஆம் திகதி சட்டப் பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணப்பட்ட பின்னர் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படப் போவது உறுதி. ஆனால், அதுவரையும் ஆட்சி அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் தி.மு.க. அரசு, மத்தியில் செல்வாக்கு மிகுந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி இந்த அறிக்கையைத் தொடர்ந்து இலங்கை அரசு மீது நடவடிக்கை எடுக்க வற்புறுத்த வேண்டும்.

காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர் கே.வீ. தங்கபாலு, மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் உள்ளிட்டோர் முதல்வர் கருணாநிதியைச் சந்தித்திருக்கின்றனர். அவர்களிடம் முதல்வர் மேற்கண்ட விடயத்தை வலியுறுத்த வேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் அடிப்படை- சராசரி உரிமைகளும் கூட மறுக்கப்பட்டுள்ளன.

எனவே, இலங்கையில் தமிழ் மக்களுக்கான சம அந்தஸ்துக் கோரும் போராட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து ஆதரிக்கும்.

போர் நிறைவடைந்து இரண்டு ஆண்டுகள் முடிந்தும்கூட, லட்சக்கணக்கான தமிழர்கள் வாழ்வுரிமைகளை இழந்து சிறைப் படுத்தப்பட்டுள்ளனர். இனியும் இந்திய அரசு வேடிக்கை பார்க்க கூடாது. தி.மு.க. மௌனம் சாதிக்கக் கூடாது.

மீனவர்கள் தொடர்ந்து இலங்கை ராணுவத்தினரால் படுகொலை செய்யப்படுவது குறித்து அந்த நாட்டு அரசுடன் இந்திய அரசு பேச்சு நடத்த வேண்டும். சுமுகமான தீர்வு காண வேண்டும்' என்றார் அவர்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகரச் செயலர் கே. அண்ணாதுரை தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் எஸ். ஸ்ரீதர், மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் கே.வீ.எஸ். இந்துராஜ், ஆர். ராஜா, பழனிச்சாமி, எஸ். ரங்கராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இலங்கையில் தமிழர்களைப் படுகொலை செய்த ராஜபக்ஷவைக் கண்டித்தும், மனித உரிமைகளை மீறிய இலங்கை ராணுவ அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், இலங்கைத் தமிழர் உரிமைகளைப் பாதுகாக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டத்தில் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. (வ)

# அருணாச்சல பிரதேச புதிய முதல்வராக ஜம்போம் கேம்பிளின்

அருணாச்சல முதல்வராக ஜர்போம் கேம்ளின் பதவியேற்றுள்ளார். ஆளுநர் ஜே.ஜே.சிங் பதவிப் பிரமாணம் செய்து வைத்துள்ளார்.

இதேவேளை அருணாச்சல் முதல்வராக இருந்த டோர்ஜி காண்டு ஹெலி கொப்டர் விபத்தில் மரணமடைந்ததைத் தொடர்ந்து புதிய முதல்வர் யார் என்ற கேள்வி எழுந்தது.

டோர்ஜி அமைச்சர் குழுவில் அமைச்சர்களாக இருந்த நபாம் துகி, ஜர்போம் காம்லின், டாகோ டாபி, செடாங் சேனா, முன்னாள் முதல்வர் முக்தி மித்தி மற்றும் லோக்சபா எம்.பி. தகாம் சஞ்சய் ஆகிய 6 பேர்களுக்கிடையே போட்டி நிலவியது.

இதற்கிடையில் சில சட்ட சபை உறுப்பினர்கள் தமது விருப்பத்தை மேலிடத்துக்குத் தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இடைக்கால முதல்வராக ஒருவரை நியமித்து விட்டு பின்னர் சட்டசபை உறுப்பினர்களின் கருத்தைக் கேட்டு நிரந்தர முதல்வரை நியமிக்கலாம் என்ற யோசனையும் மேலிடத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அருணாச்சல பிரதேசத்தின் அடுத்த முதல்வரைத் தெரிவு செய்யும் அதிகாரத்தை காங்கிரஸ் தலைவர் சோனியாவுக்கு அளித்து அருணாச்சல பிரதேச காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர் தீர்மானம் நிறைவேற்றினர். (வ)

# அமெரிக்காபோல தன்னிச்சையாக செயற்பட்டால் பேரழிவு ஏற்படும்

## இந்தியாவுக்குப் பாகிஸ்தான் எச்சரிக்கை

சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடனை சுட்டுக்கொல்ல அமெரிக்கா தன்னிச்சையாகச் செயற்பட்டமைபோல தன்னிச்சையாகத் தாக்குதல் நடத்த இந்தியா உள்ளிட்ட வேறு நாடுகள் முயற்சித்தால் பயங்கரமான பேரழிவுகளைச் சந்திக்க நேரிடும் என பாகிஸ்தான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தானில் கடந்த 6 ஆண்டுகளாக பதுங்கி இருந்த சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடனை அமெரிக்க ராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர். பாகிஸ்தான் அரசு மற்றும் ராணுவத்துக்குத் தெரியாமலேயே அந்த நாட்டுக்குள் புகுந்து அமெரிக்க ராணுவத்தினர் இந்தத் தாக்குதலை நடத்தினர். இதனால், உலக நாடுகள் வியப்பில் ஆழ்ந்துள்ளன.

இதற்கிடையே, இந்திய இராணுவத் தலைமைத் தளபதி வி.கே.சிங், 'பின்லேடனை கொலை செய்த அமெரிக்க சிறப்புப் படையினர் நடத்திய தாக்குதலைப் போலவே தாக்குதல் நடத்தும் சக்தி இந்திய ராணுவத் துக்கும் உள்ளது' எனத்தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (வ)


### களஞ்சிய அறை வாடகைக்கு

பலாலி வீதி, திருநெல்வேலியில் (விவசாய பாடசாலைக்கு அருகாமையில்) 3000 சதுர அடி பரப்புக் கொண்ட களஞ்சிய அறை வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: முருகன் ஹாட்வெயர், கண்டி வீதி, சாவகச்சேரி.
(1671) T.P:021 2270002

### வீடு விற்பனைக்கு

1½ பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு. 4 அறைகள், கோல், அற்றாச் பாத்றூம், கிச்சின், கிணறு, சுற்றுவர மதில் என வசதிகளும் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு.
நேரில் தொடர்பு கொள்ளவும்:- ஞாயிறு, திங்கள், புதன் காலை 9 தொடக்கம் 12 மணிவரையும் மாலை 4 தொடக்கம் 6 மணிவரையும்
மு.விமலநாதன், 5/3 கருவப்புலம் லேன், கோணாவளை, திருநெல்வேலி.
குறிப்பு- யாழ்.பல்கலைக்கழக சுற்றாடலில் ஆடியபாதம் வீதியில்

### ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்
வாரம் 224 — சீட்டிழுப்புத் திகதி 06.05.2011

வெற்றி இலக்கங்கள்: 05 50 58 60 — சுப்பர் இலக்கம்: 10

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 19,840,610/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதும் 1 இலக்கத்துக்கும் | 68671 | ரூ. 20/= | ரூ. 1,373,420 |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதும் 1 இலக்கத்துக்கும் | 6230 | ரூ. 40/= | ரூ. 249,200 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதும் 2 இலக்கங்களுக்கும் | 5307 | ரூ. 100/= | ரூ. 530,700 |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதும் 2 இலக்கங்களுக்கும் | 503 | ரூ. 200/= | ரூ. 100,600 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதும் 3 இலக்கங்களுக்கும் | 129 | ரூ. 1,500/= | ரூ. 193,500 |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதும் 3 இலக்கங்களுக்கும் | 4 | ரூ. 3,000/= | ரூ. 12,000 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதும் 4 இலக்கங்களுக்கும் | - | ரூ. 1,000,000/= | |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதும் 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 19,840,610/= | |
| மொத்த எண்ணிக்கை | 80844 | | ரூ. 2,459,420/= |

ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 20,050,220/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
356, சுவாமி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk

### மணமகள் தேவை

வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவர். கொழும்பில் பிரபல தனியார் நிறுவனத்தில் தொழில் புரிகின்றார். வயது 32, உயரம் 5 அடி. நட்சத்திரம் மகம். 9ல் செவ்வாய், மொ.கி. பா-60. உத்தியோகம் பார்க்கும் பெண் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:- 0777149162, 0779944775

### உடனடியாக வேலையாள் தேவை

உழவு இயந்திர (ரக்டர்) சாரதி தேவை. சாரதி அனுமதிப் பத்திரமுடைய நல்ல தேகாரோக்கியம் உடைய சாரதி விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 306/7, பிரதான வீதி, கத்தலிக் பிரஸ் கொம்லக்ஸ், யாழ்ப்பாணம்
(3912) T.P:0778350478

### ஆங்கில வகுப்புக்கள்

3 - A/L வரை பாடசாலை மாணவர்களுக்கும் (புத்தக கல்வியுடன் மேலதிக இலக்கண வகுப்பு) G.A.Q & B.A மாணவர்களுக்கு ஆங்கில வகுப்புக்களும் வேலை செய்பவர்களுக்கான Spoken with Grammar வகுப்புக்களும் நடைபெறுகின்றன. பிள்ளையார் கோவில் வீதி, சித்தன்கேணி.
(3903) தொடர்பு: 0779123998

### வாடகைக்குண்டு

நல்லூர் கோயிலுக்கு மேற்குப்பக்கமாக பருத்தித்துறை வீதியில் கடைத் தொகுதியும், குடியிருப்புப் பகுதியுமாகவுள்ள வீடும் காணியும் வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 0776197865, 0775141160.

### புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட்ஸ், நியாயமான விலைகளில் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். (திங்கள், புதன், சனி, ஞாயிறு, 12 மணிவரை) குமரன் பாம், 227, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

### வீடு வாடகைக்கு

பலாலி வீதியில் இலுப்பையடி சந்தி, கந்தர்மட சந்தி ஆகியவற்றுக்கு இடையில் (அம்மன் றோட் அருகில்) 7 அறைகள் 2 HALL கள், சமையலறை, குளியல் அறைகளுடன் கூடிய திருத்தியமைக்கப்பட்ட வீடு உடன் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள், கம்பனிகள், விரும்பத்தக்கது.
(சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வீடு பார்வையிடலாம்).
தொடர்பு- 0718475531
இல. 42, பலாலி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

### கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 கிலோவுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய No-1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 11.05.2011 விநியோகிக்கப்படும்.
விலை 90/=. மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்குக் கழிவு வழங்கப்படும். மீண்டும் இறைச்சிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.
* றாஜீவ்-நவாலி வீதி, ஆனைக்கோட்டை
* ஜென்சிபாம், முதலாம் கட்டை, பருத்தித்துறை
* துர்க்கா பாம்- ஸ்ரேசன் றோட், சுன்னாகம்
* P.ரவி தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி
T.P.: 021 222 2867, 0776090926
(3906)(05-03)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா கொம்பனி உத்தரவாதத்துடன் தரமான பிறிமா No. 1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (80/=) 12.05.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவுசெய்யவும்.
★ சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை- 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு- 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி- 0774656377
★ முகுந்தன், பருத்தித்துறை- 0771392593
இறைச்சிக் கோழிகள் திருப்பிக் கொள்வனவு செய்யப்படும்.
நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர்,
தொ.பே இல:- 021 222 6944.
(3601)



இந்தியாவில் இருந்து தற்போது இறக்குமதி செய்யப்பட்ட இதுவரை இல்லாத அழகிய பலவர்ண டிசைன்களில் திருமண அழைப்பிதழ்கள்

## திருமண அழைப்பிதழ்களின் ஆலயம்

போஸ்கோ
இல. 310/3(252) பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக) தொ.பே: 021 222 0370


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு இந்தியா உதவி செய்யாவிட்டாலும் துணைபோகாமலாவது இருக்க வேண்டாமா?

## வீரபாண்டியன் கேள்வி

இந்தியா எங்களுக்கு எல்லா வகையிலும் உதவியாக இருக்கிறது என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சொல்லியிருப்பது இந்தியாவுக்கு அவமானம் இல்லையா? எனவே இந்தியா இலங்கைக்கு உதவிசெய்யாவிட்டாலும் குறைந்த பட்சம் இலங்கைக்கு துணை போகாமலாவது இருக்க வேண்டும் அல்லவா? என்று திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழர் படுகொலை பற்றி ஐ.நா. குழு அறிக்கையும் மத்திய அரசின் கடமையும் என்ற திராவிடர் கழக பொதுக்கூட்டம் அண்மையில் புரசைவாக்கம் தானா வீதியில் நடைபெற்றது. இந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை என்பதை ஐ.நா.மனித உரிமை குழுத் தலைவராக இருந்த நவிப்பிள்ளை 2009ஆம் ஆண்டே சுட்டிக் காட்டினார். இலங்கையில் நடைபெற்ற தமிழினப் படுகொலையை எதிர்த்தது முதலில் ஸ்விட்சர்லாந்து தான். அதற்குக் காரணம் அந்த நாடு இராணுவத்தை வைத்துக் கொள்ளாத நாடு யுத்தத்தில் காயமடைவோரை செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் காப்பாற்றுகின்ற நாடு.

இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று கூறியதும் சுவிட்சர்லாந்து. இலங்கைக்கு எதிராக சுவிட்சர்லாந்து கொண்டு வந்த தீர்மானத்தை எதிர்த்த நாடு இந்தியா. இந்தியாதான் முதலில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்க வேண்டும். இலங்கைக்கு ஆதரவாக சீனா ரஷ்யா செயல்பட்டன. கியூபாவும், வெனிசுலாவும் இலங்கையை ஆதரித்தது.

இலங்கையின் உள்நாட்டு பிரச்சினையில் தலையிட முடியாது என்று இந்தியா ஒதுங்கிக் கொண்டது. மூன்றாயிரம் அமெரிக்கர்களை கொன்றதற்கே 40 நிமிடத்தில் பாகிஸ்தான் நாட்டிற்கே தெரியாமல் பின்லேடன் கதையை முடித்தது அமெரிக்கா. மூன்று லட்சத்து முப்பதாயிரம் தமிழர்கள் இலங்கையிலே கொல்லப்பட்டார்களே. எந்த நாடாவது கேள்வி கேட்டதா? இந்தியாவைச் சேர்ந்த தமிழன் கொல்லப்பட்டானே இந்தியா கேட்டிருக்க வேண்டாமா? இந்தியாவில் தமிழ்நாடு இல்லை என்று கருதி விட்டது.

முள்ளிவாய்க்கால் பகுதி யுத்தமற்ற பகுதி என்று அறிவிக்கப்பட்ட பகுதி. அந்தப் பகுதியில் இருந்த அவ்வளவு தமிழர்களையும் இலங்கை இராணுவம் அழித்தது. இதைப் பார்க்க ஐ.நா.குழு வருகிறோம் என்று சொன்னால் உங்களுக்குப் பாதுகாப்புத்தர முடியாது என்று இலங்கை சொல்லி விட்டது. அதேபோல யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்ற வந்த செஞ்சிலுவை சங்கத்தையும் நாட்டை விட்டே வெளியேறு என்று சொல்லி விட்டது இலங்கை.



பிரபாகரன் முப்படைகளையும் வைத்திருந்ததோடு நான்காவது படையையும் வைத்திருந்தார். அது தான் தற்கொலைப் படை. பெண் புலிகளை பெண் தற்கொலைப் படையை வைத்திருந்த ஒரே அமைப்பு விடுதலைப் புலிகள் அமைப்புதான். சொந்த மண்ணில் கௌரவமாக வாழ நினைத்தார்கள் நிம்மதியாக வாழ நினைத்தார்கள்.

மஹிந்த ராஜபக்ஷவை எப்பொழுது தண்டிக்கப் போகிறீர்கள் என்ற குரல் உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களிடையே ஓங்கி ஒலிக்க ஆரம்பித்து விட்டது. உள்ளூர் அரசியலைப் பற்றிப் பேசவேண்டாம். ஈழமக்களுடைய பிரச்சினைகளை மட்டும் பேசுவோம். இதற்கு எத்தனைக் கட்சிகள் தயாராக உள்ளன? இவ்வாறு அவர் கூறியுள்ளார். (வ)

## இந்தியத் தூதரகங்களுக்கு அதி உச்சக்கட்டப் பாதுகாப்பு

பாகிஸ்தானில் அல்குவைதா தலைவர் பின்லேடன் கொல்லப்பட்டதன் எதிரொலியாக ஆப்கானிஸ்தானில் உள்ள இந்தியத் தூதரகங்களை அதி உச்சக்கட்ட உஷார்நிலையில் இருக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காபூல் நகரில் இந்தியத் தூதரகம் இருந்தாலும், காந்தஹார், ஜலாலாபாத், மஸார்-இ-ஷரீப் மற்றும் ஹெராத் நகரங்களில் உள்ள தூதரக அலுவலகங்களுக்கு எப்பொழுதுமே கடுமையான அச்சுறுத்தல் இருந்து வருகிறது. தற்போது பின்லேடன் கொல்லப்பட்ட நிலையில் இந்தியத் தூதரகங்கள் மீதான அபாயத்தின் அளவு அதிகரித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பின்லேடனின் தாக்குதலைத் தொடர்ந்து தலிபான்களும், இதர பயங்கரவாத அமைப்புக்களும் தாக்குதல்கள் நடத்தக்கூடும் என்பதால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. தூதரகங்களைத் தவிர இந்தியர்கள் மேற்கொண்டு வரும் மறுகட்டமைப்புத் திட்டப் பணிகளுக்கும் அச்சுறுத்தல் உள்ளதாக உளவுத்துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

## 2ஜி வழக்கில் கனிமொழி குற்றவாளியல்ல; சதிச்செயலுக்குக் ராசா தான் காரணம்

### நீதிமன்றில் சட்டத்தரணி வாதாட்டம்




2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்குத் தொடர்பாக டில்லி சி.பி.ஐ. நீதி மன்றத்தில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி நேற்று ஆஜரானார். அவருக்காக பிரபல வழக்கறிஞர் ராம்ஜேத்மலானி நீதிமன்றத்தில் ஆஜராகி வாதாடினார்.

கனிமொழி பெண் என்பதால் அவருக்கு பிணை வழங்க வேண்டும் என ராம் ஜேத்மலானி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். கலைஞர் தொலைக்காட்சியில் கனிமொழி வெறும் பங்குதாரர்தான் என்றும், தினசரிச் செயற்பாடுகளில் அவருக்கு எந்த விதத் தொடர் பும் இல்லை என்றும் அவர் வாதாடினார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மகள் என்பதாலேயே கனிமொழி குறிவைக்கப்படுகிறார் என ராம் ஜேத்மலானி குற்றம்சாட்டினார். கருணாநிதியின் மகளாகப் பிறந்தது அவர் செய்த தவறா என அவர் கேள்வி எழுப்பினார். 2ஜி வழக்கில் கனிமொழியைக் குற்றம்சாட்ட எந்தவிதமான ஆதாரமும் இல்லை. இந்த ஸ்பெக்ட்ரம் ஊழலில் அவர் எதுவும் செய்யவில் லை.சதிச்செயலை முன்னாள் அமைச்சர் ராசாதான் செய்திருக்க முடியும். கனிமொழி அல்ல. 17 ஆவது குற்றவாளியான கனிமொழி எந்த ஆவணங்களிலும் கையெழுதிடவில்லை என வாதாடினார் சட்டத்தணி.

## அஞ்சலி....



காங்கிரஸ் கட்சியின் முக்கிய கூட்டம் டில்லியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அந்தக் கட்சியின் தலைவர் சோனியா, அருணாசல பிரதேச முதல்வரின் மரணத்துக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நடைபெற்றது. அதன் பின்னர் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் இது குறித்து கேட்டறிந்தார்.

## அல்குவைதா தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் ஊடுருவும் அபாயம்

இந்தியாவுக்கும் அல்குவைதா தீவிரவாதிகள் குறி வைக்கலாம் என்று உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனைத் தொடர்ந்து கன்னியாகுமரி கடல் பகுதியில் தீவிரவாதிகளின் நடமாட்டம் எதுவும் இருக்கிறதா என்பதை கண்காணிக்க மரைன் பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

விசைப்படகில் சென்று கன்னியாகுமரி முதல் ராஜாக்கமங்கலம்துறை வரையிலான கடல் பகுதியில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர். இதனால் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மத்தியில் பரபரப்பு நிலவியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பின்லேடன் கொலை செய்யப்பட்டமைக்கு பழிவாங்கும் வகையில் பல நாடுகளில் தாக்குதல் நடத்தப்படும் என தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர். (வ)

## மஹிந்தவைக் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தக்கோரி இலங்கைத் தூதரகம் முன்பாக இன்று ஆர்ப்பாட்டம்

### புதிய நீதிக்கட்சி அறிவிப்பு

சென்னை, மே 7

மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வலியுறுத்தி இலங்கைத் தூதரகம் முன்பு புதிய நீதிக்கட்சி சார்பில் இன்று ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் - என்று புதிய நீதிக் கட்சியின் நிறுவனத் தலைவர் ஏ.சி.சண்முகம் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:

இலங்கையில் இராணுவத்தினர் விடுதலைப்புலிகளை அழிப்பதாக கூறிக்கொண்டு ஒட்டுமொத்த தமிழினத்தையே அழித்துக் கொண்டிருக்கின்றனர்.

வயதானவர்கள், பெண்கள், குழந்தைகள் என்று போர் விதிகளின்படி பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் மீது குண்டுமழை பொழிந்து சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள்.

உலகில் உள்ள அத்தனை நாடுகளும் இலங்கை அரசின் இச்செயற்பாடுகளை வன்மையாகக் கண்டித்துள்ளன. ஐ.நா. சபை இலங்கை அரசின் மீது மனித உரிமைகளை மீறி படுகொலைகள் நிகழ்த்தியது என அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

இந்தத் தருணத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு ஒருவேண்டுகோளை முன்வைக்க விரும்புகிறேன். அமெரிக்காவில் 4 ஆயிரம் பேர்களுக்கு மேல் பலியான இரட்டைக் கோபுரத் தகர்ப்புச் சம்பவத்திற்கு காரணமானவர்களைக் கண்டுபிடித்துத் தண்டித்து நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் ஐ.நா.சபை அறிக்கையின்படி 40 ஆயிரம் பேர்களை ஈவிரக்கமற்ற முறையில் படுகொலை செய்த அந்த நாட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும், அதற்கு உறுதுணையாய் இருந்த மற்றவர்களையும் சர்வதேச நீதிமன்றத்தில் குற்றவாளிகளாக நிறுத்தி, உரிய தண்டனை பெற்றுத்தர வேண்டும்.

இலங்கையில் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றத் தில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தித் தண்டிக்க வலியுறுத்தி சென்னை மாவட்டத்தின் சார்பில் இன்று (சனிக்கிழமை) காலை 10 மணியளவில் இலங்கைத் தூதரகம் முன் கட்சியின் பொதுச்செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ. ஏ. வெள்ளைச்சாமி தலைமையிலும், பொருளாளர் ஏ.சி.எஸ்.ஏ. ரவிக்குமார் முன்னிலையிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

இதில் சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த கட்சியின் மாநில, மாவட்ட, தொகுதி நிர்வாகிகள், இளைஞரணி, ஏ.சி.எஸ்.பேரவை, திரு.வி.க.தொழிற்சங்கம், மருத்துவரணி, அனைத்து முதலியார் முன்னேற்றப் பேரவை, மாணவரணி, சட்டத்தரணிகள் அணி, தொண்டரணி, வ.உ.சி. பேரவை, செங்குந்தர் பேரவை ஆகிய சார்பு அணிகளைச் சேர்ந்த தொண்டர்களையும் நிர்வாகிகளையும் திரளாக கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

-இவ்வாறு அவர் கூறியுள்ளார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் நிபுணர் குழுவினர் வழங்கிய அறிக்கை

பகுதி - 08

(29)

76. கிளிநொச்சியில் இருந்து ஐக்கிய நாடுகள் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற அமைப்புக்களின் சர்வதேச ஊழியர்கள் வாபஸ் பெறப்பட்டது யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் முக்கியமானதொரு திருப்பத்தைக் குறிப்பதாகவிருந்தது. அத்தருணம்முதல் வன்னியில் என்ன நடந்தேறுகிறது என்பதை வெளியுலகுக்கு அறிவிப்பதற்கு இயலுமான சர்வதேச அவதானிகள் எவரும் அங்கிருக்கவில்லை. இலங்கை இராணுவத்துடன் இருந்த அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளுடன் செயற்பட்ட ஊடகவியலாளர்கள் மாத்திரமே தொடர்ச்சியாகச் செய்தி அறிக்கைகளை விடுத்தனர்.

சர்வதேச அமைப்புக்களின் உள்நாட்டு ஊழியர்கள், சமயத் தலைவர்கள், உள்நாட்டு அரச ஊழியர்கள், வைத்தியர்கள் அல்லது தமிழீழ விடுதலைப்புலியினருக்கு ஆதரவான தமிழ்நெட் இணையத்தளம் போன்றவற்றில் இருந்து கிடைத்த குறுந்கவல், மின்னஞ்சல்கள், தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் ஏனைய மூலங்களில் இருந்து அறிக்கைகள் வெளியாகின. இந்த மூலங்கள் அனைத்தும் தமிழர்களிடம் இருந்து கிடைத்ததால் அவற்றை அரசு கிரமமாக கேள்விக்குட்படுத்தி அல்லது நிராகரித்துவிட் டது.

77. 2009 ஜனவரியில், மிக முக்கியத்துவம் வாய்ந்த பல வெற்றிகளை அரசு ஈட்டியது. 2008 நவம்பரில், யுத்த வியூகக் கண்ணோட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்த பூநகரியையும் மேற்குக் கரையோரத்தின் பெரும்பாலான பகுதிகளையும் இலங்கை இராணுவம் கைப்பற்றி ஏ- 32 வீதியைத் திறந்தது, மீண்டும் 2009 ஜனவரி 2 ஆம் திகதி, இலங்கை இராணுவத்தின் 57 ஆவது மற்றும் 58 ஆவது படைப்பிரிவுகள் கிளிநொச்சியைக் கைப்பற்றின. ஜனாதிபதியும் சர்வதேச சமூகமும் ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிளை வலியுறுத்தினர். 2009 ஜனவரி 9 ஆம் திகதி இலங்கை இராணுவத்தின் 53 ஆவது மற்றும் 55 ஆவது படைப்பிரிவுகள் ஆனையிறவைக் கைப்பற்றி ஏ-9 வீதியைத் திறந்து, 23 வருடங்களில் முதற்தடவையாக நெடுஞ்சாலை முழுவதையும் அரசகட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தது. பின்பு அதே மாதத்தில், ஜனவரி 25 ஆம் திகதி, 59 ஆவது படைப்பிரிவு மேலுமொரு முக்கிய தமிழீழ விடுதலைப்புலிகளின் தளமான முல்லைத்தீவைக் கைப்பற்றியது. இந்த நிகழ்வுகள் ஆயுதப் போராட்டத்தின் வேகம் மற்றும் தீவிரத் தன்மையில் புதியதொரு கட்டத்தைக் குறித்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் தோல்வி நிச்சயம் என்பதை உறுதிப்படுத்தியது.

(30)

**2. போர்முனைகள், ஜனவரி 2009**
**மூலம்: இலங்கை அரசாங்க பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளம்**

2. மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான அரசின் தடைகள்

78. ஐக்கிய நாடுகளின் சர்வதேச பணியாள்தொகுதியினர் கிளிநொச்சியில் இருந்து வெளியேறிய பின்னர், இலங்கையில் உள்ள ஐ.நா.வின் வதிவிட/ மனிதாபிமான கூட்டிணைப்பாளர் மற்றும் உலக உணவுத் திட்டத்தின் தலைவர், உணவு, தங்குமிட வசதிகள் மற்றும் மருந்துகளை வன்னிக்கு வாராந்தம் எடுத்துச் செல்வதற்கான வாகனத் தொடர்களைக் கொண்ட மனிதாபிமான உதவியைத் தொடரவதற்காக அரசின் அங்கீகாரத்தைப் பெற்றனர். இருந்தபோதிலும், பாதுகாப்பு அமைச்சு வாகனத் தொடரில் செல்பவர்கள் மற்றும் உணவு சாராத பொருள்கள், அவை இராணுவத் தேவைகளுக்காகப் பாவிக்கப்படலாம் எனக் கூறிக் கடினமான கட்டுப்பாடுகளை விதித்தது. கீழே விவரமாக விளக்கப்பட்டுள்ளது போன்று எடுத்துச் செல்லக் கூடிய மருந்து மற்றும் உணவுப் பொருள்களின் அளவுகள் மீதும் அவர்கள் கட்டுப்பாடுகளை விதித்தனர்.

2008 ஒக்டோபர் 8ஆம் திகதி முதலாவது வாகனத்தொடர் வவுனியாவைச் சென்றடைந்தது.

ஐந்து மாத காலப்பகுதியொன்றில் மொத்தம் 11 வாகனத்தொடர்கள், 7,435 மெட்ரிக் தொன் உணவுப் பொருள்களுடன், அது பொதுமக்களுக்குப் போதுமானதாக இல்லாவிடினும், வவுனியாவுக்குச் சென்றன.

79. வாகனத்தொடரின் பயணத்தை சூழ்ந்த நிலைமைகள் மிகவும் ஆபத்தாக இருந்தன. 9 ஆவது மற்றும் 10 ஆவது வாகனத்தொடர்களின்போது, வீதியில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் செல்வெடிகள் விழுந்ததோடு, இலங்கை இராணுவமும் தமிழீழவிடுதலைப் புலியினரும் வாகனத்தொடரைப் பாவித்து மறைந்திருந்தும் இராணுவ நிலைகளை முன்னகர்த்துவதில் ஈடுபட்டனர். 2009 ஜனவரி 16 ஆம் திகதி வவுனியாவிலிருந்து ஓமந்தை ஊடாக புதுக்குடியிருப்புக்கு (பிரிகே) அதன் பதினொராவது வாகனத்தொடரை ஐ.நா. அனுப்பியது. மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்குப் புறம்பாகத் தொடரில் இருந்த சிலர் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இருந்து ஐ.நா. தேசிய ஊழியர்களையும் அவர்களைச் சார்ந்தவர்களையும் விடுவிப்பதற்காகப் பேசுச்சுக்களில் ஈடுபடநாடினர்.

11 ஆவது வாகனத்தொடரில் 7 சர்வதேச ஊழியர்கள் இருந்ததோடு அத்தியாவசியப் பொருள்களான அரிசி, சீனி, எண்ணெய் மற்றும் கோதுமை ஆகியவற்றை ஏற்றிய சுமார் 50 லொறிகள் அதில் அடங்கின. வாகனத்தொடர் பொருள்கள் இறக்கிய போதிலும் வவுனியாவுக்கான வீதியில் கடும் சண்டை நடைபெற்றதால் அங்கிருந்து செல்ல அவர்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை. யுத்தம் நான்கு நாள்கள் நீடித்தது.

**3. யுத்த சூன்ய வலயத்தில் பொதுமக்கள் மீதான இலங்கை இராணுவத்தின் செல்லடித் தாக்குதல்**

80'முல்லைத்தீவின் விடுவிக்கப்படாத பிரதேசங்களில் சிக்குண்டுள்ள அல்லது தமிழீழ விடுதலைப்புலிகளினால் தடுத்துவைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு ஆகக்கூடிய பாதுகாப்பை வழங்குவதற் குப்பாதுகாப்புப் படையினர் முழுமையாக உறுதிபூண்டுள்ளதால், இதனை இரா்ணுவத் தலைமையகம் பாதுகாப்பு வலயமாகக் குறித்துள்ளது' என வன்னிக்கான கட்டளைத் தளபதி, மேஜர் ஜெனரல் ஜயசூரிய அறிவித்தார்.

யுத்த சூன்ய வலயத்தின் மற்றும் எல்லைகள் பற்றிய படங்கள் அரச அதிபர்களினால் தெளிவுபடுத்தப்பட்டன. தம்மைக்கட்டுப்படுத்துவதாக யுத்த சூன்ய வலயத்தைத் தமிழீழ விடுதலைப் புலி கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

(31)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மேற்கு மற்றும் தெற்குப் பாதுகாப்புக் கோடுகள் மற்றும் முன்னேறிவரும் இலங்கை இராணுவத்தினரின் முன்னிலைக்கு 800 மீற்றர் வடக்கே ஏ 35 வீதியின் எல்லை அமைந்திருப்பது ஆகியவற்றை நோக்குமிடத்து அங்கு யுத்த சூன்ய வலயத்தை அமைப்பதற்கான விவேகம் தெளிவாகவில்லை.

**3. யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின் போதான யுத்த சூன்ய வலயங்கள்**

81. ஜனவரி 19 இல் இருந்து 21 வரை அல்லது அதற்கு அண்மித்த தினங்களில், இலங்கை இராணுவத்தினரின் செல்குண்டுகள் முதலாவது யுத்த சூன்ய வலயத்தில் அமைந்திருந்த வல்லிபுரம் ஆஸ்பத்திரியில் விழுந்து அதனால் நோயாளிகள் இறந்தனர்.

யுத்தத்தின் இறுதிக் கட்டங்கள் முழுவதிலும், குறிப்பாக காயமடைந்த தமிழீழ விடுதலைப்புலியினர் இருந்த வன்னியிலுள்ள நிரந்தர மற்றும் தற்காலிக ஆஸ்பத்திரிகள் அனைத்தும் பலமுறை பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காகின.

82. 2009 ஜனவரி 21 ஆம் திகதி, தேசிய ஊழியர்கள் மற்றும் அவர்களைத் சார்ந்தவர்களையும் ஏற்றிக்கொண்டு வாகனத்தொடர் 11 பிரிகேட்இல் இருந்து வவுனியா செல்ல முயற்சித்தது. ஆயினும் தேசிய ஊழியர்கள் இருந்ததால் வாகனத்தொடரை வவுனியா நோக்கிச் செல்லத் தமிழீழ விடுதலைப் புலிகள் அனுமதிக்கவில்லை. தேசிய ஊழியர்களுடன் இருக்க விரும்பிய இரு ஐ.நா. சர்வதேச ஊழியர்களை அங்கேயே விட்டு விட்டு அநேகமான சர்வதேச ஊழியர்கள் வவுனியாவுக்குத் திரும் பினர்.

(32)

83. 2009 ஜனவரி 23 ஆம் திகதி, புதுக்குடியிருப்பு (பிரிகே) மீது இலங்கை இராணுவத்தின் பாரிய தாக்குதல் ஒன்று கட்டாயமாக நடைபெறப்போகிறது என்பதால் ஐ.நா.வின் ஊழியர்கள் முதலாவது யுத்த சூன்ய வலயத்துக்கு இடம் பெயர்ந்தனர். ஏ 35 வீதியினூடாக சுதந்திரபுரம் சந்திக்கு அருகில் தளம் அமைத்த் அவர்கள், தாம் இருக்கும் இடம் பற்றி வன்னிக் கட்டளைத் தளபதிக்கு அறிவித்தனர்.

அதிக எண்ணிக்கையிலான பொதுமக்களும் யுத்த சூன்ய வலயத்துக்கு இடம்பெயர்ந்து தம் தங்குமிடங்களை ஐ.நா. தலத்தைச் சுற்றி அமைத்துக் கொண்டனர். யுத்த சூன்ய வலயத்தின் ஏனைய பகுதிகள் தங்குமிடங்களை அமைப்பதற்கு ஏற்றதாயில்லை என்பதால் ஏ-35 வீதிக்குச் சற்று வடக்கே அவர்கள் நிலைகொண்டனர். அருகில் உணவு விநியோக மத்தியொன்றை உதவி அரச அதிபர் அமைத்தார். பகல் வேளையில் அரசகட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து செலுத்தப்பட்ட செல்வெடிகள் அவ்வப்போது யுத்த சூன்ய வலயத்தில் விழுந்தன. இரவில், உணவு விநியோக மத்தியில் விழுந்த செல்வெடிகளால் அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு பலர் காயமடைந்தனர்.

84. ஜனவரி 24 ஆம் திகதி அதிகாலையில் யுத்த சூன்ய வலயத்தில் நூற்றுக் கணக்கான செல் வெடிகள் வந்து விழுந்தன. ஐக்கிய நாடுகளின் பதுங்கு குழிக்குச் செல்ல முடிந்தவர்கள் பாதுகாப்புக்காக அதற்குள் விரைந்தனர். பெரும்பாலான உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்குப் பதுங்கு குழிகள் இருக்கவில்லை என்பதோடு பாதுகாப்புத்தேடி அவர்களால் எங்குமே செல்ல முடியவில்லை. மக்கள் உதவி கோரிக் கூச்சலிட்டு அழுது கொண்டிருந்தனர். நன்கு அனுபவம் உள்ள இராணுவ அதிகாரியான ஐ.நா. பாதுகாப்பு அதிகாரியும் ஏனையவர்களும் செல்வெடிகள் இலங்கை இராணுவத்தினரின் தெற்குத்திசையில் அமைந்த நிலைகளில் இருந்து வருவதை அவதானித்தனர். கொழும்பிலுள்ள ஐ.நா. பாதுகாப்புத் தலைவருக் கும் வவுனியாவில் உள்ள வன்னிப் பாதுகாப்புப் படைத்தளபதியின் தலைமை அலுவலகத்துக்கும் கொழும் பிலுள்ள இணைந்த நடவடிக்கைகள் தலைமையகத்துக்கும் அவர் அவசர மாகத் தொலைபேசியில் கதைத்து செல் வெடிகளை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டார். சிறிது நேரத்தில் செல்வெடி கள் திசையை சரிசெய்தபின் மீண்டும் செல்வெடிகள் வந்து விழ ஆரம்பித்தன.

இரவு முழுவதும் செல் தாக்குதல் தொடர்ந்தது. ஐக்கிய நாடுகள் தலத்தையும் உணவு விநியோக மத்தியையும் தாக்கியதில் பல பொதுமக்கள் கொல்லப்பட்னர்.

85. பொழுது புலர்ந்தவுடன் ஐக்கிய நாடுகள் ஊழியர்கள் பதுங்கு குழியில் இருந்து வெளியே வந்து பார்த்ததும், பெண்கள் மற்றும் சிறார்களை உள்ளிட்ட பலரின் துண்டிக்கப்பட்ட உடல்களும் உடல் உறுப்புக்களும் அங்கு சிதறிக் கிடப்பதைக் காணக் கூடியதாக இருந்தது. சிறு குழந்தைகளின் உடல்கள் சிதறிமேலே மரங்களில் சிக்குண்டிருந்தன. முந்திய நாள் பதுங்கு குழியை அமைக்க உதவியவர்களும் இறந்தவர்களுள் இருந்தனர்.

86. யுத்த சூன்ய வலயத்தில் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் இருந்தபோதிலும், ஐ.நா. தலத்தினுள் தமிழீழ விடுதலைப் புலியினர் எவரும் இருக்கவில்லை. 500 மீற்றர்களுக்கு அப்பால் மற்றும் யுத்த சூன்ய வலயத்தின் பின்னால் தூரத்தில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் பீரங்கிக் குண்டுகளைச் செலுத்திய போதிலும் ஐ.நா. தலம் இருந்த இடத்தில் தெளிவாகப் பொதுமக்களே இருந்தனர். யுத்த சூன்ய வலயத்தில் இருந்த ஒரேயொரு சர்வதேசத் தொடர்பான ஐ.நா. தலத்தை நோக்கி அது ஏன் செல் வெடிகளை ஏவியது என்பதற்கான விளக்கத்தை அரசு வழங்கவேயில்லை.

(33)

87, கடுமையான செல்தாக்குதல் இடை விடாது தொடர்ந்தது. ஜனவரி 24 ஆம் திகதி, யுத்த சூன்ய வலயத்தில் அதுவும் அமைந்திருந்த மற்றும் சின்னங்களால் தெளிவாக அடையாள மிடப்பட்டிருந்த உடையார்கட்டு ஆஸ்பத்திரி பல செல்வெடிகளினால் தாக்கப்பட்டது. ஜனவரி 25 ஆம் திகதி இரவில், முதலாவது யுத்த சூன்ய வலயமும் ஐ.நா. தலத்தைச் சூழவுள்ள பிரதேசமும் தொடர்ந்து செல் தாக்குதலுக்கு இலக்காகின. யுத்த சூன்ய வலயத்தின்மீது இரண்டு நாளாக நடைபெற்ற செல் தாக்குதலில், நூற்றுக்கணக்கான பொதுமக்கள் உயிரிழந்ததோடு பலர் காயமடைந்தனர். சரமாரியான செல் தாக்குதலில் இருந்து தப்புவதற்காக இலங்கை இராணுவத்தினருக்கு எதிர்த்திசையில் வடக்கில் இரணைப்பாலை அல்லது மீண்டும் பிரிகே நோக்கிப் பொதுமக்கள் தப்பியோட ஆரம்பித்தனர். செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழு (ஐசி ஆர்சி) மற்றும் உதவி அரச அதிபருடன் சேர்ந்து யுத்த சூன்ய வலயத்தை விட்டும் மீண்டும் பிரிகேவுக்குச் செல்ல ஐ.நா. குழுவினரும் தீர்மானித்தனர். அவர்கள் அங்கிருந்து சென்றதும் கைவிடப்பட்ட பதுங்கு குழியில் பாதுகாப்புத் தேடி நூற் றுக் கணக்கான பொதுமக்கள் அங்கு சென்றனர்.

88. பிரிகேவுக்குச் (பிரிகே- புதுக்குடியிருப்பு) செல்லும் ஏ - 35 வீதியின் இருமருங்லும் யுத்த சூன்ய வலயத்தினுள் பாரிய அழிவினைக் குறிக்கும் காட்சியே தென்பட்டதோடு, தாவரங்கள் கூட சிதைந்துகாணப்பட்டன.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகள் பங்கு பற்றும் மென்பந்தாட்டம்: போராடிச் சாதித்தது நெல்லியடி சென்றல்

வலி.வடக்கு, மே 7

யாழ்.மாவட்டக் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான 10 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆட்டம் ஒன்றில் வடமராட்சி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் கடும் போராட்டத்தின் பின்னர் 2 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று மாவட்டச் சம்பியனானது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்கினேஸ்வராக் கல்லூரி 8.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 34 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அனுசாந்த் ஆகக்கூடிய ஓட்டங்களாக 6 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 15 ஓட்டங்களும் பெறப்பட்டன.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பிரசாத், பிரகாஷ், டினாலன் தலா 2 ஓவர்கள் பந்து வீசி முறையே 2,6,7 ஓட்டங்களைக் கொடுத்துத் தலா 2 விக்கெட்டுக்களையும், ரஜீவன் ஓர் ஓவர் பந்து வீசி 3 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

35 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் 9.3 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

பிரகாஷ் 10, பிரியதர்சன் 7 ஓட்டங்களைப் பெற்றனர்.

விக்கினேஸ்வராக் கல்லூரியைச் சேர்ந்த அனுசாந்தன், கானகன், நிதர்சன் தலா 2 ஓவர்கள் பந்து வீசி 3,5,9 ஓட்டங்களைக் கொடுத்துத் தலா 2 விக்கெட்டுக்களையும், அருள்ராஜ் 1.3 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (ஐ-86)



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் வலிகாமம் கல்வி வலய சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட தெல்லிப்பழை கோட்டத்துக்கான வெற்றிக் கிண்ணத்தை தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட கல்விப்பணிப்பாளர் எஸ்.கைலைநாதன் பெற்றுக்கொள்கிறார். (86)

# மாவட்ட ரெனிஸ் போட்டி: சென்.பற்றிக்ஸ் சம்பியன்

வலி.வடக்கு, மே 7

யாழ்.மாவட்டக் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான ரெனிஸ் போட்டியில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாவட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி ரெனிஸ் மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக் கொண்டன.

ஆட்ட நிறைவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வெற்றிபெற்று முதலாம் இடத்தைப் பெற்றது. யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி இரண்டாம் இடத்தையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

பெண்களுக்கான ரெனிஸ் போட்டியில் எந்தவொரு அணியும் கலந்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-86)

# உதைபந்தாட்டப் போட்டிக்குப் பதிவு செய்க

யாழ்ப்பாணம், மே 7

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தால் வருடாந்தம் நடத்தப்படும் பதிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு இடையி லான 15, 19 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டி நடை பெறவுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள் மேற்படி போட்டியில் பங்குகொள்ள விரும்பினால் மாவட்ட விளையாட்டு அலுவலரை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-23)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், மே 7

பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மாவட்ட மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று சனிக்கிழமை இடம்பெறும்.

இந்த ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

# உரும்பிராய் சென். மைக்கல் வெற்றி

யாழ்பாணம், மே 7

பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தின் 75 ஆவது ஆண்டுநிறைவை யொட்டி மாவட்ட மட்டத்திலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஆட்டம் ஒன்றில் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கொற்றாவத்தை ரெட் றேஞ்சஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப்பெற்றதால் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

ஆட்டம் வெற்றி, தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

இதில் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் எதிர்த்து விளையாடிய கொற்றாவத்தை ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டது. (ஐ-23)

# வலைப்பந்தாட்டம் ஹாட்லி மைதானத்தில்

வடமராட்சி, மே 7

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மாவட்ட மட்ட வலைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஐ-236)

# யாழ்.சென்றலைட்ஸ் மோதும் கிரிக்கெட் போட்டி குருநாகலில்

யாழ்ப்பாணம், மே 7

இலங்கை கிரிக்கெட் பிரிவு III இற்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் பங்குபற்றும் ஆட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை குருநாகல் குளியாப்பிட்டிய மைதானத்தில் இடம்பெறுகின்றது.

இதில் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநாகல் குளியாப்பிட்டிய சென்றல் விளையாட்டுக்கழகம் மோதுகின்றது. (த-23)

# மாவட்ட மட்ட மேசைப்பந்தாட்டம் நாளை யாழ்.சென்றலில் ஆரம்பம்

வலி.வடக்கு, மே 7

யாழ்.மாவட்டக் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

**ஆண்கள்**

* தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் வடமராட்சி கல்வி வலய இரண்டாமிடம்.
* யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி எதிர் தென்மராட்சி மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.
* யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
* அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் எதிர் வடமராட்சி கல்வி வலய முதலாம் இடம்.
* சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் வடமராட்சி கல்வி வலய மூன்றாம் இடம்.
* யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி எதிர் வடமராட்சி கல்வி வலய மூன்றாமிடம்.

**பெண்கள்**

* தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் சாவகச்சேரி மகளிர் கல்லூரி.
* வேம்படி மகளிர் கல்லூரி எதிர் வடமராட்சி கல்வி வலய மூன்றாமிடம்.
* யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை எதிர் வடமராட்சி கல்வி வலய மூன்றாமிடம்.
* ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் சுண்டிக்குழி மகளிர் கல்லூரி.
* அளவெட்டி அருணோதயக் கல்லூரி எதிர் வடமராட்சிக் கல்விவலய முதலாமிடம்.
* யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி எதிர் வடமராட்சி கல்விவலய இரண்டாமிடம்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி இரண்டாம் சுற்றில் இருந்து மோதவுள்ளது. (ஐ-86)



தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டுத் தெல்லிப்பழைப் பொலிஸாரும் பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்ட வீராங்கனைகள். (86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
07 மே 2011 சனிக்கிழமை

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் கார்த்திகேசு (சுழிபுரம் மேற்கு)

(ஓய்வுபெற்ற அரச மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்)

சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் கார்த்திகேசு 05.05.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-செல்லம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான விசாகப்பெருமான்- நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் விஜயசுந்தரியின் அன்புக் கணவரும் மிருணாளினியின் அன்புத் தந்தையும் அறிவுச்செல்வனின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பூரணம், இலட்சுமியார், பரமலிங்கம், பூமாதேவி மற்றும் நாகம்மா, வைத்திலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், நடராசா மற்றும் மகிழ்தேவி, துரைசிங்கம், செல்வராணி, கமலாம்பிகை, உமாபதி, சிவராமன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அட்சரண், கவின்மலர் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுழிபுரம் மேற்கு (3927) கா.விஜயசுந்தரி (மனைவி)

# ஆதீனத்தில் நாளை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே.07

யாழ். இலக்கிய வட்டத்தினால் நடத்தப்படும் ''இளவாலை ஆனை விழுந்தான் மாட்சிமை'' என்னும் தொனிப்பொருளில் சிவயோகமதி கந்தவனம் எழுதிய நூல்வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

செங்கை ஆழியான் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆசியுரையை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும், வெளியீட்டுரையை செஞ்சொற் செல் வர் ஆறு.திருமுருகனும், மதிப்பீட்டுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளர் லலீசனும் நிகழ்த்தவுள்ளனர் .

# ஒருங்கிணைப்பு கூட்டம் மீண்டும் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே07

வடமராட்சி கிழக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை '9.30 மணிக்கு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக் கப்பட்டுள்ளது. என்று உதவி அரச அதிபர் என் . திருலிங்கநாதன் அறிவித்துள்ளார்.

(ஐ-ஒ)

# மரண அறிவித்தல்



## திரு. முத்துக்குமாரசாமி நமசிவாயம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

புலோலி கிழக்கு, கணயத்தோட்டம், பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், 18, ஹாமர்ஸ் அவனியு, வெள்ளவத்தை,கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட மு. நமசிவாயம் செவ்வாய்க்கிழமை 03.05.2011 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரசாமி -பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தாமோதரப்பிள்ளை -அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இராசரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நடராசாவின் அன்புச் சகோதரரும், இராமகிருஸ்ணன்(ஆஸ்திரேலியா), கோபாலகிருஸ்ணன்(லண்டன்), இராதாலட்சுமி(லண்டன்), இராதாகிருஸ்ணன்(கனடா), சுந்தரலட்சுமி (கொழும்பு), ஜெயலட்சுமி(கனடா),விஜயலட்சுமி(டென்மார்க்) முத்துலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருள் நங்கை,பாமதி, இராமச்சந்திரன், பாலகௌரி, இராசமாணிக்கம், இராசநாயகம், காலஞ்சென்ற பாலச்சந்திரன், மோகன்ராஜ் ஆகியோரின் அன்பு மாமனும், கணேசலிங்கம், பஞ்சலிங்கம் ஆகியோரின் சிறிய தகப்பனாரும், துஷந்தி, தீபா, காண்டீபன், நரேஷ், சுதர்ஷன், சஹானா, விஜயகிருஷ்ணன், கோபிக்கிருஷ்ணன், ராகவி, வித்தியாதர்ஷன், வினோதினி, நிரஞ்சன், பிரியதர்ஷன், கோபிசங்கர், கீர்த்திகா, தயாபரை, டனி, சீன, மனோஜ், ஜனனி ஆகியோரின் பேரனும், விதுஷாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(08.05.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் மகிந்த மலர்ச்சாலையில்(591,Galle Road, Mt. Lavinia) நடைபெற்று தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர் Tel : 2508119, 0773102216

# புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது) கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்குக் கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான " வடக்குக் கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான விதிகள்'' இதற்கு அமைய யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2009.04.08 ஆம் திகதி 1596/17 இலக்கங்கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் எம்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணை விதி 23இற்கு அமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக் குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின் படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர்குறித்து நியமித்துள்ளேன்.

### கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்

| இல | கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர் | காலம் | நேரம் | கிளைப் பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | புலோலி தெற்கு | இ. பாலச்சந்திரன் | 08.05.2011 | மு.ப. 10 மணி | புலோலி, மெ.மி.த.க.பாடசாலை |
| 2 | 2 | புலோலி மேற்கு | இ.நாகருபன் | 08.05.2011 | மு.ப. 10 மணி | மேலைப்புலோலி, அ.த.க. பாடசாலை |
| 3 | 3 | தம்பசிட்டி | பா.சிறீக்குமார் | 08.05.2011 | மு.ப. 10 மணி | தம்பசிட்டி அ.த.க. பாடசாலை |
| 4 | 5 | குரும்பகட்டி | வீ.இந்திவெகநந்தன் | 08.05.2011 | மு.ப. 10 மணி | குரும்பகட்டி சனசமூக நிலையம் |
| 5 | 6 | பெரிய தேவனத்தாய் | வே.பிரதீஸ்குமார் | 08.05.2011 | மு.ப. 10 மணி | பெரியதேவனத்தாய்சனசமூக நிலையம் |
| 6 | 7 | புலோலி வடக்கு | க.கமலநாதன் | 08.05.2011 | மு.ப. 10 மணி | புலோலி வடக்கு கிளைக் கட்டடம் |
| 7 | 8 | வியாபாரி மூலை | எஸ்.சிறீதரன் | 08.05.2011 | மு.ப. 10 மணி | வியாபாரிமூலை கிளைக் கட்டடம் |
| 8 | 9 | வல்லிபுரக் குறிச்சி | பொ.கோகுலன் | 08.05.2011 | மு.ப. 10 மணி | வல்லிபுரக் குறிச்சி பொது மண்டபம் |
| 9 | 10 | அல்வாய் வடக்கு | வை.மைனைநாதன் | 08.05.2011 | மு.ப. 10 மணி | அல்வாய் வடக்கு பொது மண்டபம் |
| 10 | 11 | புலோலி கிழக்கு மத்தி | க. திசாகரன் | 08.05.2011 | மு.ப. 10 மணி | புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலை |
| 11 | 12 | கற்கோவளம் | சி.குணாளன் | 08.05.2011 | மு.ப. 10 மணி | கற்கோவளம் கிளை கட்டடமண்டபம் |
| 12 | 13 | புலோலி தென்மேற்கு | வி.சிவகுமார் | 08.05.2011 | மு.ப. 10 மணி | புலோலி தென்மேற்கு கிளைக் கட்டடம் |
| 13 | 23 | புற்றளை | க.நிமலன் | 08.05.2011 | மு.ப. 10 மணி | புற்றளை மகாவித்தியாலயம் |

தகுதியுள்ள கிளைப் பொதுச்சபை அங்கத்தினருக்கு கிளைக்குழுத் தெரிவு தொடர்பான அறிவித்தல்கள் தனித்தனி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்த அறிவித்தல்கள் கிடைக்கப்பெறாத எவரேனும் தகுதியுள்ள அங்கத்தவர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொண்டு கிளைப் பொதுச்சபை நடைபெறும் திகதியில் தங்களுக்குரிய கிளைப் பொதுச்சபைக் கூட்டத்துக்கு சமுகமளித்து கிளைக்குழுவைத் தெரிவுசெய்யுமாறு வேண்டுகின்றோம்.

*கூ.அ.உ. ஆணையாளர் பணிமனை,*
*857, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.*
*07.05.2011.* (சி/578260)

V.K. அருந்தவநாதன்,
கூ.அ.உ. ஆணையாளர், யாழ் மாவட்டம்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
02
05
1947

மறைவு
28
04
2009



## திருமதி அப்புக்குட்டி (இரத்தினம்) பவளம்

(திதி:சதுர்த்தி)

*மண்ணுலகில் பிறந்த மானுடர் யாவரும் விண்ணுலகில்*
*செல்வது இயற்கையின் நியதி- ஆனால்*
*அவை எம் கண்முன்னே நடக்கும் போது*
*கதறுதம்மா எங்கள் உள்ளம்*
*பாரினில் நின்று இழந்தோம் எம் தாயின்*
*பாசத்தை- இந்த இருவருட மாறாத்துயரில்*
*மிதந்து கொண்டிருக்கும் எம் இதயதில்*
*உம் நினைவுகளை இவ் அகிலமதில்*
*வாழும்வரை மறவோம் அம்மா.*

இன்று (07.05.2011) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கலைமகள் வீதி, இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி. (சி/578249) குடும்பத்தினர்

# வடமாகாண பொதுச் சேவைக்கு அலுவலகப் பணியாளர் சேவையில் வகுப்பு III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம் கோரல்-2011

04.05.2011ஆம் திகதிய யாழ். தினக்குரல், தினக்குரல் மற்றும் உதயன் ஆகிய பத்திரிகைகளிலும், 06.05.2011ஆம் திகதிய தினகரன் பத்திரிகையிலும், 07.05.2011 திகதிய யாழ். தினகரன் பத்திரிகையிலும் வெளியிடப்பட்ட மேற்படி ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சை விளம்பரம் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

**பந்தி 06 ஆட்சேர்ப்பு முறை-**

நேர்முகப் பரீட்சையில் திறமை அடிப்படையிலும் ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கைகளுக்கும் தேசிய மற்றும் மாகாணக் கொள்கைகளுக்கும் அமைவாக ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**பந்தி 07- நீக்கப்படுகின்றது.**

**பந்தி 09- நீக்கப்படுகின்றது.**

**பந்தி 11- நீக்கப்படுகின்றது.**

மேலும் விளம்பரத்திலும் விண்ணப்பத்திலும் குறிக்கப்பட்டுள்ள பரீட்சை மற்றும் பரீட்சை நிலையங்கள் தொடர்பான சகல விவரங்களும் இரத்துச் செய்யப்படுகின்றன.

விளம்பரம் மற்றும் விண்ணப்பப் படிவத்தின் விளம்பர தலையங்கம் " வடமாகாண பொதுச் சேவைக்கு அலுவலகப் பணியாளர் சேவையில் வகுப்பு III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம் கோரல்-2011'' என மாற்றப்படுகின்றது.

**சி.திருவரகரன்**
செயலாளர்,
மா.பொ.சே.ஆ.குழு, வட.மாகாணம். (சி/578252)


# வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 867 திகதி: 05.05.2011

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| B | 03 | 21 | 31 | 66 | 47 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 13,592,556.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 312 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 14990 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 210236 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 31344 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 8,354,600.00

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை 13,949,997.50

... அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360, 2433631 இணையம்: www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இராணுவ அதிகாரி யுத்தம் முடிவடைந்த பின்னர் இலங்கை அரசினால் பேர்லினிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இவர் சுவிற்சர்லாந்து, வத்திக்கான் ஆகிய நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரங்களில் பணியாற்றி வருகிறார்.

இவரது யுத்தக் குற்றங்கள் தொடர்பான விவரங்களை ஈ.சி.சி.எச்.ஆர் அமைப்பு ஜேர்மன், சுவிற்ஸர்லாந்து ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சுகளுக்கு 2011 ஜனவரி மாதம் அனுப்பி வைத்துள்ளது.

அத்துடன் 2011 ஏப்ரல் மாதம் வத்திக்கான் வெளிவிவகார அமைச்சுக்கும் இந்த விவரங்கள் கையளிக்கப்பட்டன என அந்த அமைப்பு தெரிவித்துள் ளது. இந்த நாடுகள் தமது கோரிக்கையை ஏற்றுக் கொண்டபோதும் இன்றுவரை அதை நடைமுறைப்படுத்தவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Uduvil Girls' College -2011**

Immediate Vacancies

- Lady Teacher – Science, Middle School. English medium
- English Language Teacher - Trained on the Communicative Method of Teaching

Walk in Interview:
Monday 9th May, 2011, between 2.00 - 4.00 P. m

Principal

## தமிழ் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்படுகிறது என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியாதிருக்கிறது. ஏனென்றால் சிங்கள மொழியை அவர்களால் விளங்கிக்கொள்ள முடியா துள்ளது.

இது ஒரு பெரும் பிரச்சினையாகும். சிங்களத்தில் விசா ரணை நடத்தப் படும் போது தங்களை விடுவிக்கப்போகின்றனர் என்று நினைத்துக் கொள்ளும் அக் கைதிகள் மீண்டும் சிறையில் அடைக்கப்படுவதால் உள அளவிலும் பெரும் பிரச்சினையை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் நீண்ட காலமாக சிறைச் சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் உண்மையாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் செயற்பட்டார்களா? அவர்கள் என்ன தவறு செய்தார்கள் என்று ஆராய்ந்து வழக்குத் தொடர, ஏற்பட்டால் வழக்குத் தொடர்ந்து அல்லது விடுவிக்கப்பட வேண்டுமானால் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணைகள் தமிழ் மொழியில் நடத்தப்படவேண்டும். அத்துடன் நீதித்துறை பொலிஸ் மற்றும் சிறைச்சாலை ஆகியவற்றை ஒன்றிணைத்து ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என கோருகிறேன்.- என்றார்.

கோலாகலத் திறப்புவிழா

நெல்லியடி கொடிகாமம் வீதியில்

2006ஆம் ஆண்டுவரை இயங்கி வந்த

ஸ்ரீ கிருஷ்ணா கிறீம் ஹவுஸ்



புதிய பொலிவுடன் மீண்டும் நவீனமயப் படுத்தப் பட்ட தனது சொந்தக் கட்டடத்தில் (மாலுசந்திக்கும் மடத்தடிச் சந்திக்கும் இடையில்) இன்று (07.05.2011) சனிக் கிழமை பி.ப 4.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

இலகடி, அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

உரிமையாளர்:
ஸ்ரீகிருஷ்ணா கிறீம் ஹவுஸ்

பாராட்டுவதில் மிக்க மகிழ்வடைகின்றேன்



கனகசபை சுந்தரலிங்கம்

ஈழத்துச் சிதம்பரத்தைத் தன்னகத்தே கொண்ட காரையம்பதியில் பிறந்து தனது ஆரம்பக் கல்வியை அமெ.மிசன் பாடசாலையிலும் உயர்கல்வியை காரைநகர் இந்துக் கல்லூரியிலும் பயின்று விஞ்ஞான கணித பாடங்களில் திறமைச் சித்தி பெற்று விஞ்ஞானப் பிரிவில் கல்வி பயின்று அக்கல்லூரியின் உதைபந்தாட்ட வீரனாய்ப் பரிமளித்து காரைநகர் சுற்றுவட்டச் சைக்கிளோட்டப் போட்டியில் சாதனை படைத்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் ஆ.தியாக ராஜா அவர்களால் பரிசளித்துக் கௌரவிக்கப்பட்டு சமூகத்துக்கு தன்னலம் பாராது செய்த சேவைகளின் மூலம் சமாதான நீதிவான் என்னும் சிறப்புப் பெற்று சமாதான நீதிவான்களுக்கான மனித உரிமை அமைப்பின் திருநெல்வேலிப் பிரதிநிதியாய்த் தகைமை பெற்று செய்து வரும் தரகு தொழிலை ஒரு தனித் திறமையுடன் செய்து வருங்கால் அணிக்கு அணி சேர்த்தது போல் பௌத்தசாசன அமைப்பால் வழங்கப்பட்ட சிறப்பு விருதான 'கலாநிதி' என்னும் பட்டமும் பெற்ற எனது இனிய நண்பர்.

காரை மணிகண்டன் லயன் கனகசபை சுந்தரலிங்கம் அவர்கள் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் பேரருள் பெற்று மேலும் பல சிறப்புகள் எய்த வாழ்த்தி மகிழ்கின்றேன்.

சு.மகேஸ்வரன், சிரேஷ்ட ஆங்கில ஆசிரியர், யாழ்.இந்துக் கல்லூரி
(680, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்)

வீடு விற்பனைக்கு

நல்லூர், செட்டித்தெருவுக்கு அண்மையில் 639/4, நாவலர் வீதி என்னும் முகவரியிலுள்ள 2 ¾ பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு. சுற்றுமதிலுடன் கூடியது.

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்:- 0772267191.

ஆலய நிர்வாக அலுவலகப் பணியாளர் தேவை

ஆலய தர்மகர்த்தாக்கள் சபையின் நடவடிக்கைகளையும் ஆலயத்தின் நித்திய பூசைகளில் பங்குபற்றும் அடியார்களின் தொடர்பைக் கவனிக்கவும் இந்து சமய ஆசாரங்களை கைக்கொண்டு பணி யாற்றக்கூடிய பணியாளர் தேவை. வயதெல்லை 35 -55 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும். ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
அருள்மிகு சித்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தாக்கள் பரிபாலனசபை,
கிளிநொச்சி நகர்.
தொ.பே.: 0778412602

## அனைத்துப் பயிர்களுக்கும் இனி உர மானியம்

யாழ்ப்பாணம், மே 7

நேற்று நள்ளிரவு முதல் அனைத்துப் பயிர்களுக்குமான உரமானியம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கமைய வழங்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் ஜி.இ. கருணாதிலக்க அறிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானம் தனியார் மற்றும் அரச உர நிறுவனங்கள் மற்றும் நிதியமைச்சு அதிகாரிகள் உள்ளிட்ட சில அமைச்சுக்களுடனான கலந்துரையாடலின் பின்னரே எடுக்கப்பட்டதாகவும் இந்தத் திட்டத்தினால் அரசுக்கு 4 ஆயிரம் கோடி ரூபா செலவாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஒ-323)

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்
A/L 2011- Physics
sat,sun-6 pm
S.சசி B.sc(Edu.)
2013+012
C/MA,CHE,PHY,ENG,
நடைபெறுகிறது.
PAPER CLASS

வேலையாள் தேவை

தொலைத்தொடர்பு நிலையத்தில் பணிபுரிவதற்கு பெண் பிள்ளைகள் தேவை

ARRUL GLOBAL EXPRESS
T.P : 0212226113
01, பிறவுண் வீதி நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.

இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

திரு.திருமதி தவநேசன்- செல்வபவானி தம்பதிகளின் செல்வப் புதல்வன்

அபினேஷ்



தனது இரண்டாவது பிறந்த நாளை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் நேற்று (06.05.2011) வெகு விமரிசையாகக் கொண்டாடினார். அபினேஷ் அம்மன் துணை கொண்டு சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழிகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்- அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா, நந்து, அபி, நிவி, தூரிவர்ணா, சயானு, அச்சு, மாமன்மார், அத்தைமார், சித்தப்பா, சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், தங்கை மார், தம்பிமார், மைத்துனன்மார், மைத்துனிமார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

செல்வஸ்தான், இமையாணன்.

45ஆம் நாள் நினைவு நாள்



பிறப்பு 16.06.1969
இறப்பு 24.04.2011

அமரர் தங்கராசா செல்வராசா

நாற்பத்தைந்து நாள்கள் ஓடி மறைந்தனவே
உம் வதனம் எம் நெஞ்சை விட்டு மறையவில்லை
நாற்பத்தைந்து நாள்கள் அல்ல எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
உம் நினைவுகள் என்றும் எம் நெஞ்சோடிருக்கும்

என்றும் நினைவுகளுடன்:
கா.பத்மசுகந்தன்
(சுகந்தன் பல்பொருள்வாணிபம்)

நீர்வேலி வடக்கு,
குறுக்கு வீதி, நீர்வேலி.

வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம் (ம/து) A9 வீதி, கிளிநொச்சி

எமது நிறுவனத்துக்கு 40 அடி நீளமும், 17 அடி அகலமும் கொண்ட கட்டடம் அமைப்பதற்கு கேள்வி அறிவித்தல் கோரப்படுகின்றது. விண்ணப்பிக்க விரும்புவோர் 13.05.2011 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பம் கிடைக்கக் கூடிய வகையில் அலுவலகத்தில் கடமை நேரத்தில் (காலை 8.00 மணி தொடக்கம் பி.ப. 4.30 மணிவரை) விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கூட். சேவையிலுள்ள
சோ.திலகராஜ்,
பொதுமுகாமையாளர்,
வடமாகாண ப.தெ. வ. அ.கூ.நி. பேரிணையம், கிளிநொச்சி

துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் முன்னாள் பதில் அதிபராக இருந்து 01.05.2011 அன்று அமரரான கந்தரோடை மேற்கை வதிவிடமாகக் கொண்ட

*கதிரேசு கந்தையா*

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத் துயரில் நாமும் பங்குகொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.
(3928)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவுவதற்கான சாத்தியம் உள்ளது.

# சிறைக்கைதிகளும் மனிதர்கள்தான் என்று சிறைச்சுவர்களில் எழுதினால் மட்டும் போதுமா?

## அமைச்சர் கஜதீர நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, மே 7

சிறைக்கைதிகளும் மனிதர்கள் தான் என்று சிறைச்சாலைகளின் சுவர்களில் எழுதிவைத்து விட்டால் மட்டும் போதாது. அவர்களின் பிரச்சினைகளும் மனிதாபிமானத்துடன் அணுகப்பட வேண்டும் என்கிறார் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர நேற்று நாடாளுமன்றில் சிறைச்சாலைகள் தொடர்பான பிரேரணை ஒன்றின் மீது உரையாற்றும் போதே இப்படிக் கூறினார்.

ஜே.வி.பி. உறுப்பினர் அஜித் குமார முன்வைத்த நீதித்துறை, சிறைச்சாலைகள், பொலிஸ் ஆகிய துறைகள் தொடர்பாக முன்வைத்த பிரேரணை நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி விடும் வகையில் அமைந்து விட்டது என்றும் குறிப்பிட்டார்.

தமிழ்க் கைதிகள் தண்டனைக் கைதிகள் அல்ல அவர்கள் நீதிமன்றங்களில் முன் நிறுத்தப்பட வேண்டிய தடுப்புக் காவல் கைதிகள். இவர்களின் விடயம் தொடர்பாக நீதி அமைச்சரிடம் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகிறோம்.

இன்றுள்ள சிறைச்சாலைகள் மிகவும் பழமைவாய்ந்தவை. போதிய வசதிகள் இல்லை. நான் அமைச்சுப் பொறுப்பை ஏற்று நான்கு மாதங்கள் மட்டுமே. எனினும் சிறைச்சாலைகள் அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துகின்றோம்.

சிறைச்சாலையில் தமிழ், சிங்களம், முஸ்லிம் என்ற பாகுபாடு காட்டப்படுவதில்லை. இப்பொழுது மாதாந்தம் ஒரு கைதியின் உணவு மற்றும் சீருடைகளுக்காக தலா பத்தாயிரம் ரூபா செலவிடப்படுகிறது.

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இருக்கும் சிறைச்சாலைகளை நகருக்கு அப்பால் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

சிறைச்சாலைகளில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்பதில் மாற்றுக் கருத்து எனக்கு இல்லை.

இரண்டு வயதுக்கும் குறைந்த குழந்தைகள் சிறைச்சாலைகளில் தாய்மாருடன் முடங்கிக் கிடக்கின்றனர். குழந்தைகள் ஓடி விளையாடக் கூட இடமில்லை.

இதனால் களுத்துறையில் குழந்தைகளுடன் இருக்கும் பெண் கைதிகளுக்காகத் தனியான பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அங்குள்ள குழந்தைகளின் மனநிலை பாதிக்கப்படக்கூடாது என்பதில் அங்கு பணிபுரியும் காவலர்கள் சீருடையின்றி சிவில் உடையிலே பணியாற்றுகின்றனர் என்றும் அமைச்சர் கஜதீர தெரிவித்தார். (ஒ-02)

## மாட்டு வண்டிச் சவாரி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், மே 7

அளவெட்டி அறிவகம் விளையாட்டுக்கழகம் 'உதயன்' ஊடக அனுசரணையுடன் நாளை ஞாயிற்றுக்கிழமை நடத்தவிருந்த மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது.

காலநிலை சீரில்லாத காரணத்தால் போட்டி பிற்போடப்பட்டுள்ளது. போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஒ-ஐ)

## பவளவிழா நிகழ்வு

யாழ். மறைமாவட்ட மரியாயின் சேனை 175 ஆவது ஆண்டு பவளவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறும்.

காலை 8.30 மணிக்கு மறைக் கல்வி நிலையத்தில் இருந்து மரியன்னையின் சேனையர் ஊர்வலம் பத்திரிசியார் கல்லூரி மண்டபம் நோக்கி இடம் பெறும்.

மு.ப. 10 மணிக்கு நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுத்தலை அடுத்து பவளவிழா மலர் வெளியீடு இடம்பெறும். (ஒ-160)

# காணாமற்போன நான்கு சிப்பாய்கள் இன்னும் தகவல் எதுவும் இல்லை

கொழும்பு, மே 07

முல்லைத்தீவு கடற்பரப்பில் வைத்து கடந்த மார்ச் மாதம் காணாமற்போன நான்கு கடற்படைச் சிப்பாய்கள் தொடர்பில் இதுவரை எதுவித தகவலும் கிடைக்கவில்லை என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரஸ்தாப கடற்படைச் சிப்பாய்கள் காணாமல் போய் நேற்றுடன் 39 நாள்கள் ஆகின்றன. எனினும், அவர்களுக்கு என்ன நடந்தது என்பது இன்னும் மர்மமாகவே உள்ளது. அத்துடன் கடற்படையையும் இச்சம்பவம் அதிர வைத்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் துரிதமான விசாரணைகளை மேற்கொள்வதற்கென நியமிக்கப்பட்ட உயர் அதிகாரிகள் உள்ளடங்கிய விசேட குழுவுக்கும் இதுவரை எதுவித தகவலும் கிடைக்கவில்லை எனத் தெரிய வருகிறது.

நான்கு கடற்படைச் சிப்பாய்களும் வேறு நாட்டுக்குத் தப்பிச் சென்றுள்ளனரா அல்லது இந்தச் சம்பவம் கடற்படையின் திட்டமிட்ட சதியா என பல தரப்பினரும் கேள்வி எழுப்புகின்றனர்.

இவர்கள் விபத்தில் சிக்குண்டு இறந்திருந்தால் இவர்களின் சடலங்கள் இலங்கை அல்லது இந்திய கடற்கரையில் ஒதுங்கியிருக்கும். ஆனால், அவர்களின் சடலங்கள் கரை ஒதுங்கவில்லை என இரு நாட்டுக் கடற்படையினரும் தெரிவிக்கின்றனர்.

ஒதுங்கிய சடலங்களும் இந்திய மீனவர்களுடையவை என அடையாளப்படுத்தப்பட்டது. சிலவேளை கடற்கொள்ளையர்கள் இவர்களை கடத்தியிருந்தால் கப்பம் பெறுவதற்காக அவர்கள் தகவல்களை கசிய விட்டிருப்பர். ஆனால், அப்படியான சம்பவம் எதுவும் இடம்பெறவில்லை எனத் தெரிய வருகிறது.

எனவே, இந்தச் சம்பவமானது இலங்கை கடற்படையினரை மட்டுமல்ல, ஒட்டுமொத்த இராணுவக் கட்டமைப்பையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

திறமையான இராணுவக் கட்டமைப்பு இங்கு உள்ளது என பாதுகாப்புத் தரப்பினர் மார்தட்டும் இந்த வேளையில், இந்தச் சம்பவம் அவர்களுக்கு களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மார்ச் மாதம் 29ஆம் திகதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நான்கு கடற்படைச் சிப்பாய்கள் படகுடன் காணாமல் போனமை அறிந்ததே. இதனையடுத்து, இரண்டு நாள்கள் கழிந்த நிலையில் அவர்கள் பயணித்த படகு எவ்வித சேதமுமின்றி வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் கண்டுபிடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## பின்லேடனுக்கு காத்தான்குடியில் ஜனாஸா தொழுகை

அமெரிக்க படைகளால் கொலை செய்யப்பட்ட பின்லேடனுக்காக நேற்று காத்தான் குடியில் ஜனாஸா தொழுகை நடத்தப்பட்டது.

காத்தான்குடி நகர சபையின் தலைவர் முஹம்மது அஸ்வர் விடுத்த வேண்டுகோளையடுத்து காத்தான்குடி ஜாமியுழாபரீன் ஜும்ஆ பள்ளிவாசலில் நேற்றைய ஜும்ஆ தொழுகையின் பின்னர் ஜனாஸா தொழுகை நடத்தப்பட்டது.

இத்தொழுகையை மௌலவி மஸூத் காஸிமி நடத்தினார். இதனையடுத்து ஒசாமா பின்லேடனுக்காக துஆ பிரார்த் தனையும் நடத்தப்பட்டது. இந்த ஜனாஸா தொழுகையில் பிரதியமைச் சர் எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லா உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

## வல்வையில் இன்று இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், மே.7

வல்வை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபை, வல்வை ஒன்றியம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இன்று காலை 9 மணிக்கு, வல்வை பார்வதி இலவச ஆங்கிலக் கல்வி நிலையத்தில் இரத்தான முகாம் இடம்பெறவுள்ளது. (ஒ-ஐ)

# வீதி விபத்து ஏற்படுத்தும் சாரதிகளுக்கு இனி சிறை

## 30 வருடங்களில் 40 ஆயிரம் பேர் பலி

கொழும்பு மே 07

வீதி விபத்துகளை ஏற்படுத்தும் சாரதிகளுக்கு சிறைத் தண்டனை வழங்கக்கூடிய கடுமையான சட்டம் ஒன்று கொண்டுவரப்படவுள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம நேற்றுக் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

1977 முதல் 2007 வரையான 30 வருட காலப்பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துகள் காரணமாக 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மரணித்துள்ளனர் என்று ஆய்வு ஒன்று குறிப்பிடுகின்றது. இலங்கையில் ஒரு நாளைக்கு நிகழும் 150 வீதி விபத்துகளால் 5 முதல் 6 பேர் உயிரிழக்கின்றனர். இது சமூக, பொருளாதார மற்றும் சுகாதார பிரச்சினையாக மாறியுள்ளது.

வீதி விபத்துகளைத் தடுக்கும் நோக்கில் கடுமையான சட்டங்கள் தேவை. வீதி விபத்துகளை ஏற்படுத்தும் சாரதிகளுக்கு கடுமையான அபராதம் விதிக்கவும் அவர்களுக்குச் சிறைத்தண்டனை வழங்கவுமென புதிய சட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும் - என்றார்.

75 சதவீதமான வீதி விபத்துகள் மனிதர்களின் தவறுகளினாலேயே ஏற்படுகின்றன.

கடுமையான வீதிச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இவ்வாறான விபத்துகளை கட்டுப்படுத்த முடியும் என்று போக்குவரத்து அமைச்சின் செயலாளர் தம்மிக்க பெரேரா கூறினார். (ஒ-சி)

# நிகழ்வுகள்

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மே.7

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அருட்தந்தை கலாநிதி ஜஸ்ரின் ஜி.ஞானப்பிரகாசம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் அருட்திரு ஜே.எ.யேசுதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத்தின் பௌதிகவியல்துறைத் தலைவர் பி.ரவிராஜன், யாழ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி வாசுகி ரவிராஜன், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கந்தசாமி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-311)

### கலந்துரையாடல்

யதென்மராட்சி, மே.7

எழுதுமட்டுவாழ் தெற்கு J/333 பிரிவில் உள்ள மக்களுக்கான மீள் குடியமர்வு தொடர்பான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 [illegible] வித்தியா [illegible] J/333 பிரிவு கிராம அலு வலர் வ.வேல்முருகு தெரிவித்துள்ளார். (ஒ-207)

### மாணவர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், மே.7

நவாலி மகா வித்தியாலயத்தின் உயர்தர மாணவர்களுக்கான ஒன்று கூடல் இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு பாடசாலை அதிபர் இரா. வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு முதன்முதல் ஆரம்பிக் கப் பட்டு நடைபெறும் ஒன்று கூடல் நிகழ்வு இது என அதிபர் தெரிவித்துள்ளார். (ற-302)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவும் சீனாவும் இலங்கையை கைவிட்டாலும் அதிசயம் இல்லை

மேற்குலகைப் பகைத்துக் கொள்வதைத் தவிர்ப்பதற்காக ரஷ்யாவும் சீனாவும் சிறிலங்காவைக் கைவிட்டு விடக் கூடும் என்று ஐ.தேகவின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கையானது சிறிலங்காவின் அனைத்துப் பகுதிகள் மீதுமே குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது- அது நாட்டின் தனியொரு பகுதி மீது குற்றச்சாட்டை முன்வைக்க வில்லை.

இந்த அறிக்கையானது ஐ.நா பொதுச்செயலரின் கையெழுத்துடன் வெளியாகியுள்ளதால், அனைத்துலக சமூகத்தின் மத்தியில் பெறுமதி வாய்ந்தது.

இது ஐ.நா சாசனங்களுக்கு முரணானது என்றும் அனைத்துலகச் சட்டங்களுக்கு முரணானது என்றும் நாம் வாதிட்டு எதிர்ப்புத் தெரிவித்தாலும், ஐ.நா பொதுச்செயலரின் அங்கீகாரத்துடனேயே அது வெளியிடப்பட்டுள்ளது.

அதனால் அதற்கு ஒரு பெரிய பெறுமதி உள்ளது. இதை தவறாகவும் பயன்படுத்த முடியும். துஷ்பிரயோகம் செய்யவும் முடியும்.

2009ஆம் ஆண்டில் மனித உரிமைகள் பேரவையில், சிறிலங்காவுக்கு எதிரான தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது, பல்வேறு நாடுகளின் ஆதரவுடன் அதை சிறிலங்கா அரசு சமாளித்துக் கொண்டது.

மனிதகுலத்துக்கு எதிரான மீறல்கள் எதுவும் இடம்பெற்றதாக நம்பகமான எந்தவொரு ஆதாரமோ தகவல்களோ முன்வைக்கப்படாததால் அப்போது சமாளிக்க முடிந்தது. ஐ.நாவின் அறிக்கை வெளியான பின்னர், அப்போது ஆதரவளித்த சில நாடுகள் சிறிலங்காவுக்கான ஆதரவை விலக்கிக் கொள்ளலாம்.

சீனாவோ ரஷ்யாவோ தொடர்ந்தும் சிறிலங்காவுக்கு ஆதரவளிக்கும் என்பதில் சந்தேகம் உள்ளது. அவை முற்றிலும் ஜனநாயக நாடுகள் அல்ல. அவை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளை பகைத்துக் கொள்வதைத் தவிர்க்க சிறிலங்காவுக்கு எதிரான தீர்மானம் கொண்டு வரப்படும் போது சமூகமளிக்காமல் ஒதுங்கிக் கொள்ளவும் கூடும்.

ஏனென்றால் அவற்றின் 60 தொடக்கம் 70 வீதம் வரையிலான சந்தை மேற்குலகையே தங்கியுள்ளது. என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

(புதினப்பலகை)

## ராஜபக்ஷவை கடலில் தூக்கிப் போடும் காலம் வரும்

மஹிந்த ராஜபக்ஸவை கடலில் தூக்கி எறியும் காலம் வருமென எதிர்வு கூறினார் திராவிடர் கழகத்தலைவரான கி.வீரமணி.

ஈழத் தமிழர் படுகொலை பற்றி ஐ.நா. குழுவின் அறிக்கையும், மத்திய அரசின் கடமையும் என்ற தலைப்பில் நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு சென்னை புரசைவாக்கம் தாணா தெருவில் பொதுக் கூட்டம் இடம்பெற்றது.

இப்பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார் வீரமணி.

## இலங்கைப் போர்க் குற்றத்துக்கு எதிராக இந்தியாவில் கையெழுத்து இயக்கம்

இலங்கைக்கு எதிராக கையெழுத்து இயக்கம் நடத்தி, ஐ.நா.வுக்கு அனுப்ப புலம் பெயர்ந்த ஈழ அகதிகள் மறுவாழ்வு மையம் முடிவு செய்துள்ளது. இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய புலம் பெயர்ந்த ஈழ அகதிகள் மறுவாழ்வு கழகத்தைச் சேர்ந்த ஈழநேரு, இலங்கையில் நடந்த இறுதிக்கட்ட யுத்தத்தில் இலட்சக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதற்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தான் காரணம்.

இச்சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் குமரி முதல் சென்னை வரை கையெழுத்து இயக்கம் நடத்த உள்ளோம்.பின்னர் இதனை ஐ.நா.வுக்கு அனுப்புவோம். அரசியல் வேறுபாடின்றி அனைவரும் ஒத்துழைப்பார்கள் என்று நாங்கள் நம்புகின்றோம் என்றார்.

(சரிதம்)

## ஒசாமா பின்லேடன் இறந்ததை அல்குவைதா உறுதிப்படுத்தியது

ஒசாமா பின் லேடன் இறந்ததை அல் குவைதா அமைப்பு நேற்று வெள்ளிக்கிழமை உறுதிப்படுத்தியுள்ளதாக சர்வதேச பயங்கரவாத அமைப்புகளின் இணையத்தளங்களை' கண்காணிப்பதாக கூறப்படும் SITE புலனாய்வுக் குழு (SITE Intelligence Group) அறிவித்துள்ளது.

இணையத்தளங்கள் மூலம் அல் குவைதா வெளியிட்ட செய்தியில், ஒசாமா பின் லேடனை புகழ்துள்ளதுடன் அமெரிக்காவுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாக அச்சுறுத்தியுள்ளதாக அந்த செய்தியை மொழிபெயர்த்த SITE குழு கூறியுள்ளது.

தமது ஜிஹாத் நடவடிக்கை தொடரும் எனவும் அச்செய்தியில் அல்குவைதா தெரிவித்துள்ளது. 'பின்லேடனின் மரணம்' ஒரு சாபமாக அமெரிக்கர்களையும் அவர்களின் முகவர்களையும் அவர்களின் நாட்டுக்குள்ளேயும் வெளியிலும் பின் தொடர்ந்து துரத்தும். இன்ஷா அல்லாஹ் அவர்களின் சந்தோசம் விரைவில் துக்கமாக மாறும். அவர்களின் இரத்தம் அவர்களின் கண்ணீருடன் கலக்கப்படும். பலஸ்தீனத்திலுள்ள எமது மக்கள் பாதுகாப்பை அனுபவிக்கும் வரை அமெரிக்கர்களும் அதை உணரப்போவதில்லை'' எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

(தமிழ் மிரர்)

## ஆசிரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி யாழ்.வலயம் காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரைக்கும், தீவக வலயம் 10-10.30 மணி வரையும், வடமராட்சி வலயம் 10.30-11 மணி வரைக்கும், வலிகாமம் வலயம் 11-11.30 மணி வரைக்கும், தென்மராட்சி வலயம் 11.30-12 மணி வரைக்கும் வவுனியா தெற்கு வலயம் பிற்பகல் 2 மணி தொடக்கம் 3 மணிவரைக்கும் மேன்முறையீட்டுப் பரிசீலனைகளில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்த மேன்முறையீடு பரிசீலனையை ஆளுநரின் முன் நிலையில் இட மாற்ற சபைக்கூட்டம் நடைபெறும் என்று வட மாகாண கல்வி அமைச்சின் பதில் செயலாளர் ஆர்.ரவீந்திரன் அறிவித்துள்ளார். (ஒ-10)

## உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாக நடவடிக்கைகளில் இராணுவம்

உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாக நடவடிக்கைகளில் இராணுவ அதிகாரிகளை ஈடுபடுத்த பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தீர்மானமொன்றை மேற்கொண்டுள்ளார்.

அதன் முதற்கட்டமாக தற்போதைக்கு காலி மற்றும் மாத்தறை நகர சபைகளின் நிர்வாக கண்காணிப்பு அதிகாரிகளாக இரண்டு பிரிகேடியர் தர இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நகர சபைகளின் நிர்வாக நடவடிக்கை தொடக்கம் நகர ஆணையாளரின் அதிகாரங்கள் வரை அனைத்தையும் அவர்கள் கையில் எடுத்துள்ளனர்.

அத்துடன் நகர சபையின் நகர ஆணையாளர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளையும் அழைத்து கூட்டமொன்றையும் நடாத்தியுள்ளதுடன், பாதுகாப்பு அமைச்சின் நேரடி உத்தரவின் பேரிலேயே தாம் நிர்வாக கண்காணிப்பு அதிகாரிகளாக கடமையாற்றவுள்ளதாக வும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

அது மட்டுமன்றி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகளைக் கூட தமது அதிகாரப் பிரதேசத்துக்குள் மாற்றுமளவுக்கு அவர்கள் பாதுகாப்பமைச்சின் மூலமாக அதிகாரமளிக்கப்பட்டுள்ளனர். (ஒ-10)

## கிளிநொச்சியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடைத்தங்கல் முகாம்கள் மற்றும் உறவினர் வீடுகளில் தங்கியிருந்த 37 ஆயிரத்து 515 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 18 ஆயிரத்து 515 பேர் இதுவரை கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர் எனவும் அரச அதிபர் மேலும் கூறினார்.

உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ள மக்கள் மாவட்டத்தில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் எந்த நேரத்திலும் மீளக்குடியமர முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழ்க் கைதிகளின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன், எஸ்.சிறீதரன், சிவசக்தி ஆனந்தன், பா.அரியநேந்திரன், சி.யோகேஸ்வரன், பொன்.செல்வராஜா ஆகியோர் நேற்றுத் திடீரெனப் புதிய மகஸின் சிறைச்சாலைக்குச் சென்று அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமை குறித்து விரிவாக ஆராய்ந்தனர்.

கொழும்பு, கொழும்பு றிமாண்ட், நீர்கொழும்பு, போகம்பர, மட்டக்களப்பு, திருகோணமலை, பதுளை, அனுராதபுரம், யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் வெலிக்கடை ஆகிய சிறைச்சாலைகளில் தமிழ் அரசியல் கைதிகள் பல வருடங்களாக விசாரணைகள் இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய வழக்கு விசாரணைகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை.

பயங்கரவாத, அவரசரகாலச் சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டு எந்த வித விசாரணைகளும் இல்லாமல் பல வருடங்களாகத் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் நாம் விடுதலை பெறுவதற்காக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்யவுள்ளோம் எனவும் இதற்கு நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் எமக்கு அனுசரணை வழங்கவேண்டும் எனவும் தமிழ் அரசியல் கைதிகள் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு தனது முழு ஆதரவையும் ஆலோசனைகளையும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு வழங்குவதாக சுமந்திரன் எம்.பி. அங்கு உறுதியளித்தார். விரைவில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருவதாகவும் அவர் அங்கு மேலும் கூறினார்.

கூட்டமைப்பு [illegible] தமிழ் அரசியல் கைதிகள் சில கோரிக்கைகளை முன்வைத்தனர்.

1. சட்ட ரீதியாக தமிழ் அரசியல் கைதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்.

2. சிறைச்சாலைக்குள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இடையூறுகள்.

3. அரசியல் கைதிகளின் குடும்ப நலன் குறித்து ஆராயவும் கவனிக்கவும் கூட்டமைப்புக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளைக் கவனமாகக் கேட்டறிந்த எம்.பிக்கள் இது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றனர். கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் அரசியல் கைதிகளின் குடும்ப நலன் குறித்து குழு அமைப்பது தொடர்பாக பேச்சு நடத்தப்படும் என வும் கைதிகளிடம் நாடாளுமன்ற உறுப் பினர்கள் உறுதி அளித்தனர்.

சுமார் 2 மணி நேரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் [illegible] பெண்கள் உட்பட சுமார் 860 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-த)

## நிபுணர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது வன்னி பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தள பதியாக நான் இருந்தேன். நிபுணர் குழுவின் அறிக்கையின் உள்ளடக்கம் முற்றிலும் தவறானது.

ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, இலங்கை இராணுவத்தினர் ஆகியோரின் புகழுக்கு அந்த அறிக்கை களங்கத்தை ஏற் படுத்தியுள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இராணுவத்தினர் மனிதாபிமான நடவடிக்கையிலேயே ஈடுபட்டனர். வன்னி மக்களைக் காப்பாற்றும் நோக்குடனேயே செயற்பட்டனர். இது அங்கிருந்த எமக்குத்தான் தெரியும் - என்றார்.

அதேவேளை, இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாகத் தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை கடந்த மாதம் 12 ஆம் திகதி அரசிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதில் இலங்கை அரசின் மீது ஐந்து பெரும் குற்றச்சாட்டுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதில் இராணுவத்தினரின் தரப்பில் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்களை இலங்கை இராணுவம் ஏற்கனவே மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு பல்கலைக்கழக வளாகம் ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்கு

## ஜே.வி.பி. சார்பு இணையதளம் தெரிவிப்பு

கொழும்பு பல்கலைக்கழக வளாகத்தை ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றுக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று ஜே.வி.பி. சார்பு இணையதளம் செய்தி வெளியிட்டுள்ளது.

அதேபோல் கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சூழவுள்ள பகுதி 'கெசினோ' கட்டடத்தொகுதி ஒன்று அமைப்பதற்காக விற்கப்படவுள்ளது என்றும் அச்செய்தி குறிப்பிடுகின்றது.

அவ்வாறு விற்கப்படும்பட்சத்தில் கொழும்பு பல்கலைக் கழகத்தை திவுலபிட்டிய அல்லது தியகமவுக்கு இடம்மாற்ற அரசு திட்டமிட்டுள்ளது என்று அந்த இணையதளம் மேலும் தெரிவித்துள்ளது.

உள்ளூர் மற்றும் சர்வதேச தொழிலதிபர்களின் மகிழ்ச்சிக்காக அதி உயர்வான வர்த்தக நகரமொன்றை கொழும்பில் அமைக்கும் அரசின் திட்டத்துக்கு அமையவே மேற்படி நட வடிக்கை எடுக்கப்படுகின்றது என்று இணையதளம் குறிப்பிட் டுள்ளது.

# பூட்டான் பிரதமருடன் ரணில் சந்திப்பு

பூட்டானுக்கு மூன்று நாள்கள் பயணம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பூட்டான் பிரதமர் ஜிக்மே நின்லேயைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

சார்க் வலய நாடுகளின் உறவுகளைப் பலப்படுத்துவது தொடர்பாக இப்பேச்சுகளின்போது ஆராயப்பட்டது என்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-01)

# தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ் மற்றும் வன்னி மாவட்ட ஆசிரியர்களின் இடமாற்றம் எழுந்தமானமாக இடம்பெற்றுள்ளது என்று இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அச் சங்கத்தின் பொது செயலாளர் த. மகாசிவம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருடன் உடன்பாடு கண்ட இடமாற்றத் திட்டத்துக்கு முற்றிலும் முரணாக யாழ். மாவட்டத்திலிருந்தும் வன்னி மாவட்டத் திலிருந்தும் மாகாண கல்வித் திணைக்களமும் வலயக் கல்வித் திணைக்களங்களும் வன்னி மாவட்டங்களுக்கு ஆசிரியர்களை போதிய முன்னறிவித்தலின்றியும் எதுவித திட்டமும் இல்லாது எழுந்தமானமாக இடமாற்றம் செய்துள்ளமையை வன்மை யாகக் கண்டிக்கிறோம்.

யாழ். மாவட்டத்திலிருந்தும் வவுனியா மாவட்டத்திலிருந்தும் வன்னியிலுள்ள கல்வி வலயங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்வதில் கஷ்டத்தை எதிர்நோக்கு கின்ற ஆசிரியர்கள், மேன்முறையீடு செய்த பிரதியுடன் இ.த.ஆ சங்க யாழ். மாவட்டச் செயலாளர் ந. நகுலநாதனை, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு சந்திக்கும்படி இ.த.ஆ.சங்கம் கோருகிறது. இக் கூட்டத்தில் இ.த.ஆ சங்கத்தின் தாய்ச்சங்க நிர்வாகிகளும் கலந்துகெள்ளவுள்ளனர்.

ஊடகங்களூடாக மாகாணக் கல்வித் திணைக்களம் அடுத்தடுத்துவிடுத்த அறிக்கைகள் மாகாணக் கல்வித் திணைக்களம் ஆசிரியர்களைக் கிள்ளுக்கீரைகளாக்குவதையும் எழுந்தமானத் தில் விருப்பப்படி பந்தாடுவதையும் தெளிவாக வெளிக்கொணர்கிறது - என்றுள்ளது. (ஒ-ஐ)

**ஆங்கில வகுப்புகள்**

தனியாக or குழுவாக பிரபல ஆங்கில ஆசிரியரினால் அடிப் படையிலிருந்து வகுப்புக்கள் நடத்தப்படுகின்றது. விரும்பிய நோத்தில் ஒழுங்கு செய்து தரப்படும்.

i. General English - A/L
ii. Spoken English with Grammar.

காலம்: 3 மாதங்கள்
கட்டணம் ரூபா 2500 மட்டும்

மேலதிக விவரங்களுடன் தொடர்புகளுக்கு இயக்குநர் Jaffna Technical Institute (JTI கிளை), இல.92/1, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். [கலட்டி சந்திக்கும் மிலேனியம் வீதிக்குமிடையில்]
T.P0215670345 e-mail:jtiedu @ gmil.com.

**விசேட கருத்தரங்கு**

SLAS, SLEAS

எதிர்வரும் 21ஆம், 22 ஆம் திகதி நடைபெறவுள்ள SLAS, SLEAS போட்டிப் பரீட்சைக்கான விசேட வழிகாட்டல் கருத்தரங்கு.

இம்மாதம் 15ஆம், 16ஆம் திகதிகளில் காலை 8.00 மணி முதல் பி.ப. 4 மணிவரை.

எமது வழமையான சிரேஸ்ர வளவாளர் குழு பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

நாவலர் | பருத்தித்துறை வீதி, ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம்.

**கணக்கீடு**

AP.பகீரதன் B.B.A (Fm spl)
புதிய அலகுகள் ஆரம்பம்
A/L 2013 (Sat, Sun 9.00- 10.00am)
A/L 2012 (Sat, Sun10.00-11.00am)
ஆரம்பம்:- 07.05.2011 (Sat)
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**பொருளியல்**

NB. கஜீதரன் B.A H.N-Dip in.Acc

* 2011-A/L- பொருளாதார வளர்ச்சி
* 2012 - A/L-நிறுவன அமைப்புகள்
* 2013-A/L- பொருளாதார முறைமைகள்

(நேர அட்டவணை அலுவலகத்தில்)

NEC (யாழ் நகர்) | BPT (குருநகர்)

**விற்பனைக்குண்டு**

LCD மல்ரிமீடியா புறஜெக்ரர் (15 அடி) ஒூபர்செற், அம்ப், DVD Player பயினியர் BOX, அனைத்தும் பெற்றுக் கொள்ள அணுகவேண்டிய முகவரி. தர்சன் வீடியோ சென்ரர், குருநகர், யாழ்ப்பாணம். T.P 0217902640 (சி/578263)

**ஆர்கி என்ரப்பிறைசஸ்**




சகல விதமான கட்டட நிர்மான வேலைகளுக்கும் கைகொடுக்கும் இயந்திரங்களைப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

150, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**கடைகள் விற்பனைக்கு**

பண்டத்தரிப்பு சந்தைக்கு முன்பாக அமைந்துள்ள (NNR) கடைத்தொகுதி (மூன்று மாடிக் கட்டடம்) உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0771726564
(3859)

**IBM Computers for Sale**

நம்ப முடியாத விலையில் !!

Original IBM Think Center (With Lock)



Intel Pentium IV 3.20 GHZ
1 GB Ram 80 GB HD
DVD Rom

(Six Months Warranty)

Internet Browsing Center களுக்கும் அரச, தனியார் நிறுவனங்களுக்கும் உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் மிகவும் உகந்தது !!!

IBM System Keyboard,mouse Rs.15000/= இன்றே முந்துங்கள் !!!

IBM கணனி என்றால் No - 1 தரம் என்பது உலகறிந்த விடயம் !!!

விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P No - 021 321 6435 / 0777 410862

## மரண அறிவித்தல்கள்

### செல்லப்பா கனகரத்தினம்
(கனகம்மான்)



பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா கனகரத்தினம் (04.05.2011) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா- சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற கார்த்திகேசு மற்றும் நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் வசந்தரூபன் (ஆசிரி யர், வ/கனகராயன்குளம் ம.வி), காந்தரூபன் (லண்டன்), தனரூபி (ஜேர்மனி), செல்வரூபன் (உபதபா லதிபர், தெல்லிப்பழை மேற்கு), மோகனரூபி (ஒன்பதாம் அணி, ஆசிரியப் பயிலுநர், தேசிய கல்வியியற் கல்லூரி - யாழ்.) ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதயகுமாரின் (ஜேர் மனி) அன்பு மாமனும் சிந்துஜனின் (ஜேர்மனி) பாசமிகு பேரனும் காலஞ்சென்ற சிவலோகநாயகி மற்றும் சிவமகாராசா, சிவ சுப்பிரமணியம், சிவலிங்கம்(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.05.2011) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆசிரியமணி பொன்னையா வீதி,
பன்னாலை,
தெல்லிப்பழை.
(3936)
தகவல்:
குடும்பத்தினர்.

### வினாசித்தம்பி வேலுப்பிள்ளை
(அப்பையா ஸ்ரோர்ஸ், வட்டுக்கோட்டை)



அராலி மேற்கைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டை தென்மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி வேலுப்பிள்ளை நேற்று (06.05.2011) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வபூரணத்தின் அன்புக் கணவரும், திருவாதவூரர் (ஜேர்மனி), திருநீலகண்டர் (கனடா), மகாலட்சுமி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரூபானந்தி (ஜேர்மனி), சரத்சந்தா (மக்கள் வங்கி, சங்கானை) ஆகியோரின் அன்பு மாமனும் மாதவன், நம்மியா, தர்சனா, சாரங்கன், வைஸ்ணவி ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற சின்னத்துரை (V.C. செல்லக்கண்டு), சுப்பிரமணியம் மற்றும் தையல்நாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தெய்வநாயகி, அற்புதவேல்நாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.05. 2011) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்துத்துறை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அற்கின்சன் வீதி,
வட்டுக்கோட்டை.
(சி/578262)
தகவல்:
குடும்பத்தினர்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 16 ★ 06 ★ 1969



உதிர்வு 24 ★ 03 ★ 2011

### அமரர் தங்கராசா செல்வராசா
(அம்பாள் உழவு இயந்திர உரிமையாளர்)

பண்பிற்கு பாதையென
அன்பிற்கு அடைக்கலம் என
வாழ்க்கைக்கு வானம் என
வாழ்ந்த அப்பாவே நீங்கள்
வாடியது ஏன்?
பனி மூடிய இதழ்களைப் போல்
பரிந்தோடிக் கிடக்கின்றோம்
பாசத்தின் அப்பா - உங்கள்
ஆத்மா சாந்தி பெற்று
அயர்ந்து விட...
இறைவனை இறைஞ்சுகிறோம்

(3934)

பேச்சி அம்மன் கோயிலடி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் சிவசுப்பிரமணியம் (கந்தசாமி)
(ஓய்வுபெற்ற சாரதி, தொலைத்தொடர்புத் திணைக்களம்)



சண்டிலிப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சிவசுப்பிரமணியம் நேற்று( 06.05.2011) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் மூத்த மகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவனேசன் மற்றும் சிவானந்தம்(பிரான்ஸ்), சிறீதரன்(லண்டன்), சிவகுமார், சிவரூபன், சிவசங்கர் (பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சைலஜா (ஜேர்மனி), துஸ்யந்தி(பிரான்ஸ்), சுபாஜினி (லண்டன்), சிவகுமாரி, விஜயந்தி, சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் சன்ஜா, சன்ஜீவன், சாருஜன், தனுஷா, சீனுஷா, சிவானுஜா, அபிராமி, டிலக்ஷனா, துவாரகன், ரித்திகா, அபிநயா, அட்சயா ஆகியோரின் அன்பு பேரனும், பாலசுப்பிரமணியம், சண்முகராசா, நாகேஸ்வரி, செல்வராசா, யோகேஸ்வரி, பரமேஸ்வரி, விக்னேஸ்வரி, சோமசுந்தரம் (இந்திரன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.05.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.
(3932)
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.